# சிற்பக் கலை -வரலாறும் ஆய்வும்




31 மே 2020

சோழ வரலாற்று ஆய்வு சங்கம்

# நன்றி..


**சிற்பக்கலை பாடங்கள் மற்றும் கருத்துகள்**
திரு. பெருந்தச்சன் கீர்த்திவர்மன் கீர்த்திவர்மன்
மாமல்லபுரம் சிற்பக்கலை கல்லூரி முன்னாள் பேராசிரியர்

**வகுப்பு ஆசிரியர்கள்**
திரு. மாரீராஜன் - கோவில் சிற்ப கலை
மருத்துவர் சுரேந்திரன் - கோவில் கட்டிட கலை

**வாட்சாப் தொகுத்தளிப்பு**
திரு.விக்னேஷ்வர்

**புத்தக வடிவாக்கம்**
திரு.சிவசங்கர் பாபு

**படங்கள்**
திரு விவேக்
திரு.பொன்னம்பலம் சிதம்பரம்
திரு.மோகன்ராஜ் சந்திரன்
திரு தென்கொங்கு சதாசிவம்..
மற்றும் பதிவேற்றம் செய்த அனைத்து நண்பர்களுக்கும் நன்றிகள் பல..


**மேற்கோள் புத்தகங்கள்**
சிற்ப சென்நூல்
கணபதி ஸ்தபதி
2001 மூன்றாம் பதிப்பு
தொழில்நுட்ப கல்வி இயக்ககம் ,
தமிழ்நாடு அரசு

**குறிப்பு**

*இந்த கையேடு சோழ வரலாற்று ஆய்வு சங்கம் நடத்திய கோவில் கட்டட கலை மற்றும் சிற்பக்கலை பற்றிய வாட்சாப் பயிலரங்க மாணவர்களுக்காக , அங்கு நடந்த பாடங்களை தொகுத்து வழங்குகிறது. இந்த புத்தகத்தில் வியாபார , விளம்பர நோக்கங்கள் இல்லை .. இந்த புத்தகத்தை சோழ வரலாற்று ஆய்வு சங்கம் அனுமதியன்றி பிரதி எடுப்பதோ, மறு பதிப்பு செய்வதோ , மின்னணு வடிவங்களை மற்றவர்களுக்கு அனுப்புவதோ கூடாது.*

# நூல் அடக்கம்

01. **சிற்பக் கை அமைதிகள்**. ........ 11

ஒற்றைக் கை..தொழிற் முத்திரை: ........ 1

*01 அபய ஹஸ்தம்* ........ 1
*02 வரத ஹஸ்தம்* ........ 1
*03 கடக ஹஸ்தம்* ........ 2
*04 சிம்ம கர்ண ஹஸ்தம்* ........ 2
*05 வியாக்கியான முத்திரை* ........ 3
*06 சூசி ஹஸ்தம்* ........ 4
*07 தர்ஜனீ ஹஸ்தம்* ........ 5
*08 கர்த்தரி முக ஹஸ்தம்* ........ 5
*09 அலபத்ம ஹஸ்தம்* ........ 6
*10 விஸ்மய ஹஸ்தம்* ........ 7
*12 நித்ரா ஹஸ்தம்* ........ 8
*13 அர்த்த சந்திர ஹஸ்தம்* ........ 8
*14 அர்த்த பதாக ஹஸ்தம்* ........ 9
*15 திரிசூல ஹஸ்தம்* ........ 9
*16 முஷ்டி ஹஸ்தம்* ........ 10
*17 சிகர ஹஸ்தம்* ........ 10
*18 பூ ஸ்பரிச ஹஸ்தம்* ........ 10
*19 கடி ஹஸ்தம்* ........ 11
*20 ஊரு ஹஸ்தம்* ........ 11
*21 ஆலிங்கன ஹஸ்தம்* ........ 12
*22 தனுர் ஹஸ்தம்* ........ 12
*23 டமரு ஹஸ்தம்* ........ 13
*24 தாடன ஹஸ்தம்* ........ 14

இரட்டைக் கை முத்திரை ........ 15

*01 அஞ்சலி ஹஸ்தம்* ........ 15
*02 தியான அஸ்தம்* ........ 15
*03 புஷ்ப புட ஹஸ்தம்* ........ 16
*04 தர்மசக்கர ஹஸ்தம்* ........ 16

எழிற்கைகள் ........ 17

*01 கஜ ஹஸ்தம்:* ........ 17
*02 தண்ட ஹஸ்தம்* ........ 17
*03 டோல அஸ்தம்* ........ 18
*04 பிரசாரித ஹஸ்தம்* ........ 18

02. **சிற்பம் அறிவோம்.. தேர்வு**... 1 ........ 20

03. **திருக்கோலங்கள் ( ஆசனங்கள்)** ........ 27

நின்ற கோலம் (ஸ்தானகம்)....28
01 சமபாத ஸ்தானகம்....29
02 வைதஸ்திக ஸ்தானம்....29
03 அர்த்த வைதஸ்திக ஸ்தானகம்....29
04 காயோத் சர்க்கம்....29
அமர்ந்த நிலை (ஆசனம்)....30
01 சுகாசனம்....30
02 பத்மாசனம்....30
03 லளிதாசனம்....31
04 மகாராஜா லீலாசனம்....31
05 வீராசனம்....32
06. இராஜலிங்காசனம்....32
07 உத்குடிகாசனம்....33
08 யோகாசனம்....33
09 கருடாசனம்....34
கிடந்த கோலம் ( சயனம்)....35
01 சமசயனம்....35
02 அர்த்த சயனம்....35
அசைவு நிலை (ஆசனம்)....36
01 வைசாக ஸ்தானகம்....36
02 வைஷ்ணவம்....36
03 ஸ்வஸ்திகாசனம்....37
04 ஆலிடாசனம்....37
05 பிரத்யாலீடாசனம்....38
06 ஊர்த்துவ ஜானு....38
07 ஏகபாத ஸ்தானகம்....39

04. **தலைக்கோலங்கள்**....40

01 ஜடா மகுடம்....41
02 ஜடா பாரம்....44
03 ஜடா மண்டலம்....45
04 ஜடாபந்தம்....46
05 சர்ப்ப மௌலி....46
06 விரிசடை....47
07 சுடர்முடி....47
08 கிரீட மகுடம்....48
09 சிரஸ்திரகம்....50
10 குந்தளம்....50
11 தம்மில்லம் ( தமிழம்)....51
12 அளக சூடம்....51
13 கரண்ட மகுடம்....52

05. **அணிகலன்கள்.. ஆபரணங்கள்**....53

தலை அணிகள்..........55
01 தொய்யகம் .. ( தலைப்பாளை)..........55
02 பூரப்பாளை ..........55
03 புல்லகம்..........55
04 கடிப்பு காதணி..........56
05 சூளாமணி (சூடாமணி)*..........58
காதணிகள்..........59
01 குதம்பை..........60
02 குழை..........60
03 ஸ்படிக குண்டலம்..........61
04 பிரேத குண்டலம்..........62
கழுத்தணிகள்..........63
01 கண்டிகை..........64
02 சவடி..........64
03 சரப்பளி..........65
04 அரும்பு சரம்..........65
05 மணியாரம்..........66
06 முத்தாரம்..........67
07 கௌஸ்துப மணிமாலை..........69
08 வனமாலை..........69
09 யவை மாலை..........70
மார்பணிகள்..........71
01 சன்ன வீரம்..........71
02 பூணூல் / யக்ஞோபவீதம் ..........72
03 ஸ்தன சூத்திரம்..........74
05 உதர பந்தம்..........74
06 உத்தரியம்..........75
07 தோள் மாலை / வாகுமாலை..........76
தோள் ஆபரணங்கள்..........80
01 தோள் வளை..........80
02 கடக வளை..........82
இடை-தொடை அணிகள்..........83
01 மேகலை..........83
02 அரைப்பட்டிகை..........86
03 குரங்கு செறி..........86
04 விரிசிகை..........88
05 தாரகைச்சும்மை..........88
கை அணிகள்..........90
01 சூடகம்..........90
02 செம்பொற் கை வளை..........91
03 சங்கு வளை..........91
04 பவள வளை..........91

*05 பரியகம்*......93
கைவிரல் அணிகள்......94
கால் அணிகள்......95
*01 வீரக்கழல்*......95
*02 பாடகம்*......95
பாத அணிகள்......95
*01 சிலம்பு*......95
*02 அரியகம்*......96
*03 காற் சதங்கை*......96
*04 விரல் அணிகள்*......96
*03 பாதக்குறடு*......98
ஆடைகள்......100
*01 பட்டாடை*......101
*02 மரவுரி ஆடை*......101
*03 நூலாடை பஞ்சாடை*......102
*04 மார்புகச்சை*......102
06. **சின்னங்கள்**......105
போர் கருவிகள்......108
*01 சக்தி ஆயுதம்*......108
*02 சூலம்*......109
*03 கத்தி*......110
*04 தண்டம்*......110
*05 வஜ்ரம்*......111
*06 பாசம்*......111
*07 அங்குசம்*......112
*08 வில்*......112
*09 அம்பு*......113
*10 பரசு*......114
*11 சங்கு*......115
*12 சக்கரம்*......116
*13 கட்வாங்கம்*......116
*14 உடைவாள்*......118
*15 கேடயம்*......118
*16 வேல்*......119
தொழில் கருவிகள்......120
*01 கொடி*......120
*02 கமண்டலம்*......120
*03 மணி*......122
*04 அக்னி*......122
*05 சிருக்*......123
*06 செண்டு*......124

*07 தலைக்கோல்... ...125*
*08 கலப்பை ...127*
*09 ருத்ராட்சம். ...128*
*10 ஸ்ரீ வத்ஸம் ...129*
*11 சாமரம். ...130*
*12 கண்ணாடி ...130*
*13 பூர்ண கும்பம். ...131*
இசைக் கருவிகள் ...132
*01 உடுக்கை ...132*
உயிரினங்கள் ...133
*01 பாம்பு. ...133*
*02 மான் ...134*
மலர்கள் ...135
*01 தாமரை மலர். ...135*
*02 அல்லி மலர்.. ...135*
*03 நீலத்தாமரை. ...136*
சின்னங்கள் ...138
*01 ஆயுத புருஷர் ...139*
*02 அஷ்டமங்கலச் சின்னங்கள். ...140*
*03 மகா சதாசிவ மூர்த்தி ...141*

07. **பங்க இலக்கணம்.** ...143

*01 ஆபங்கம் ...144*
*02 சமபங்கம் ...146*
*03 அதிபங்கம் ...148*

**08. தொகுதி 1 கேள்விகள் மற்றும் பதில்கள்:** ...152

09. **சோழ வரலாற்று ஆய்வுச் சங்கம்..** ...160

*குழுவின் முதல் களப்பயணம் ..குடந்தை மற்றும் தஞ்சை. ...160*
*பிப்ரவரி 2 2017 மாமல்லபுரம் ...160*
*ஏப்ரல் 14, 2017 தாராசுரம் மற்றும் தஞ்சை. ...160*
*ஆகஸ்ட் 2017 சோழமாதேவி ...161*
*டிசம்பர் 16,17 2017 காஞ்சி மரபு நடை.. ...161*
*ஏப்ரல் 01, 2018 விழுப்புரம் மரபுநடை ...162*
*டிசம்பார் 20 , 2018 சென்னை புத்தக வெளியீடு ...162*
*டிசம்பர் 21-25 , 2018 அஜந்தா மற்றும் எல்லோரா மரபுநடை ...162*
*ஆகஸ்ட் , 2019 ஹம்பி மற்றும் பாதாமி மரபுநடை ...162*

# முன்னுரை




அனைவருக்கும் வணக்கம்...
அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்..

சிற்பங்களை அடையாளம் காணுதல். அறிதல். அது குறித்த விபரங்கள்..
கோவில் கட்டிடக்கலை. அமைப்பு.. இதுகுறித்த விபரங்கள்..
இந்த இரண்டு தலைப்பின் கீழ் உள்ள விபரங்களை எளிமையாக பயிற்றுவிக்க நம்மிடையே இரண்டு பயிற்றுநர்கள் உள்ளனர்.

மாமல்லபுரம் சிற்பக்கலை கல்லூரி முன்னாள் பேராசிரியர் திரு. பெருந்தச்சன் கீர்த்திவர்மன் கீர்த்திவர்மன் அவர்கள் சிற்பக்கலை பற்றி வகுப்பு எடுப்பார். சிற்பக்கலை பற்றிய அனைத்து பாடங்களையும், மாரிராஜன் அவர்களுக்கு அனுப்பிவிட்டார். அப்பாடங்களை மாரிராஜன் அவர்கள் சுருக்கி தொகுத்து எளிமையாக பதிவிடுவார்.. தேவையான அரிய படங்களை திரு. பார்த்திபன் பதிவிடுவார்.

மருத்துவர் சுரேந்திரன் அவர்கள் கோவில் கட்டிடக்கலை வகுப்பு எடுப்பார்.

காலை. 11 மணி .. கோவில் கட்டிடக்கலை.
மாலை 6 மணி .. சிற்பக்கலை..

பங்கேற்பாளர்கள் எழுப்பும் எந்த ஒரு ஐயத்திற்கும் விளக்கம் கொடுக்க கீர்த்திவர்மன் தயாராக உள்ளார். குழு உறுப்பினர்கள் தாராளமாக தங்கள் ஐயங்களை கேட்டு விவாதித்து தெளிவு பெறலாம். சம்பந்தமான படங்கள் பதிவிடலாம்.

பயிற்சியின் முடிவில் ..
அரிய நூல்கள் Pdf ஆக தரப்படும்..

தேவையற்ற பதிவுகள் இடுவோர்.. உடனே நீக்கப்படுவர். இப்பயிற்சி முகாம் சிறப்பாக, தரமாக இருக்கும் என்று நாங்களும் தொடர்கிறோம்..

நாளை மறுநாள்.. புதன் கிழமை காலை 11 மணி.. வகுப்பு ஆரம்பம்...

மணிவண்ணன்.
சோழர் வரலாற்று ஆய்வுச் சங்கம்

# முகவுரை



நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம்.

இந்த தனிமைப்படுத்தல் நேரத்தில் ஏதேனும் பயனுள்ள வகையில் கற்றுத்தரலாமே என்ற நண்பர்களின் தொடர் கோரிக்கையிட்டதின் விளைவே இந்த பயிற்சி முகாம்.. (கொஞ்சம் லேட்தான். ஆனால் லேட்டஸ்டா இருக்கும்). கோரிக்கையை செயலாற்ற முயற்சி எடுத்தோம்..

சிற்பக்கலை மற்றும் கோவில் கட்டிடக்கலை பற்றிய பாடங்களை தரலாம் என்று முடிவானது. கோவில் கட்டிடக்கலை பற்றிய ஆய்வில் திறன் பெற்ற மருத்துவர் சுரேந்திரனை தொடர்பு கொண்டோம். ஒப்புக்கொண்டார். சங்காலக் கோவில்கள் அமைப்பு முதல்... ஆரம்பித்து... கோவில் கட்டிடக்கலை .. அதிஷ்டானம், குமுதம்... என்று களமாட தயாராகிவிட்டார். கோவில் கட்டிடக்கலைப் பற்றிய அனைத்து விபரங்களையும் எளிமையாகத் தர காத்திருக்கிறார்.

சிற்பக்கலை பற்றி பாடமெடுக்க, மாமல்லபுரம் சிற்பக்கல்லூரி முன்னாள் பேராசிரியர் திரு பெருந்தச்சன் கீர்த்திவர்மனை தொடர்பு கொண்டோம். ஐயா.. எனக்கு இந்த நீண்ட தட்டச்சு சிரமம். பாடங்களை தங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள் அதை சுருக்கி தொகுத்து பதிவிடுங்கள் . நண்பர்கள் எழுப்பும் ஐயங்களுக்கு நான் பதில் கூறுகிறேன் என்றார். ஒப்புக்கொண்டேன். உங்கள் தேவை என்ன என்றார். சிற்ப இலக்கணம், ஆகம விதிமுறைகள்., சிற்பங்களின் வகைகள், சிற்பங்களை அடையாளம் காணுதல். இவை போன்றவை என்றேன். பாடங்களை அனுப்பினார். அதை பார்த்து எளிமையாக சுருக்கி தொகுத்து அவர் குரலாய் நான் ஒலிக்க தயாராகி விட்டேன். பார்த்திபன், தென்கொங்கு சதாசிவம் , பூரணி, காந்தி பாலசுப்ரமணியன், இவர்களின் பங்களிப்பும் உண்டு. இவ்விரண்டு துறைகளிலும் திறன் பெற்ற அறிஞர்களும் குழுவில் இணைந்துள்ளனர். அடிப்படையிலிருந்து தெரிந்து கொள்ள ஆர்வமுடையோரும் உண்டு. கொஞ்சம் கொஞ்சம் தெரிந்தோரும் உண்டு. ஏதோ ஒரு பிரிவினரை இப்பயிற்சி முகாம் கொஞ்சமாவது திருப்திபடுத்தும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

குழுவினர்கள் சில விதிமுறைகளை அவசியம் கடைபிடித்தே ஆகவேண்டும்.
ஆகா.. அருமை.. சூப்பர். ஸ்மைலி.. பொம்மை.. பூச்செண்டு.. இவைகளை அவசியம் தவிர்த்தே ஆக வேண்டும். பாடசம்பந்தமான எந்த ஒரு வினாவும் எழுப்பி விவாதிக்கலாம். சம்பந்தபட்ட விசேச படங்கள் இருந்தால் பகிரலாம். முடிந்தளவு குரல் பதிவை தவிர்க்கவும்.

பொருத்தமற்ற வினாக்கள் தவிர்க்கவும்.. அதென்ன பொருத்தமற்ற வினா..? சாஸ்திர சம்பிரதாய வினாக்களைத் தவிர்க்கவும். ஆஞ்சநேயர் பூஜை எவ்வாறு.? 5000 வருட பழமையான லிங்கமா.? இது போன்ற வினாக்கள் கூடவே கூடாது. பாடசம்பந்தமான எந்த ஒரு வினாவும் எழுப்பலாம்.

நாளை புதன் கிழமை காலை.. 11 மணி அளவில் பயிற்சி ஆரம்பம்..காலை 11 மணிக்கு கோவில் கட்டிடடக்கலை. மாலை 6 மணிக்கு சிற்பக்கலை. எத்தனை நாளைக்கு இப்பயிற்சி என்ற கேள்விக்கு பதிலை... பிற்பாடு நாமே முடிவு செய்வோம்.

பயிற்றுநர்கள்,
திரு.பெருந்தச்சன் கீர்த்திவர்மன் மற்றும் மருத்துவர் சுரேந்திரன் அவர்களுக்கு நன்றி.

பயிற்சியில் பங்களிக்கும் திரு.திருச்சி பார்த்தி..
திரு. தென்கொங்கு சதாசிவம்..
திரு. காந்தி பாலசுப்ரமணியன்.
செல்வி.பூரணி.
இவர்களுக்கும் நன்றி.
எங்கள் வேண்டுகோளை ஏற்று குழுவில் இணைந்த நண்பர்களுக்கு நன்றி.. பயிற்சியில் .. சந்திப்போம்..

அன்புடன்
மா.மாரிராஜன்.

# சிற்பங்களை அறிதல்...

இந்தத் தலைப்பில் எங்கிருந்து தொடங்குவது.?

சங்ககாலம்.. நீத்தார் நினைவு கல்.. நடுகல் சிற்பம் என்று ஆரம்பத்திலிருந்து தொடங்கினால் ரொம்பவே நீ.....ண்டதாய் இருக்கும்.. நமக்கோ கால அவகாசம் குறைவு..

சிற்பங்களின் தோற்றம்.. வளர்ச்சி என்று தொடங்கினால் அது ஒரு ஆய்வுக் கட்டுரையாகக் அமையும். உத்தம ஷட்தானம் .. சப்ததானம் என்று ஆரம்பித்தால் அது சிற்பிகளுக்கான வழிமுறை ஆகிவிடும். சுத்தி வளைக்காம நேரடியா விடயத்திற்கு வருவோம்.

நாம் அனைவரும் சிறிய எளிய ஒரு வரலாற்று ஆர்வலர் மட்டுமே.. நமது தேவை சிற்பங்களை அறிதல் மட்டுமே.. கோவிலுக்குச் செல்கிறோம். கோஷ்டச் சிற்பங்களைப் பார்க்கிறோம்.. சிற்பத்தில் இருப்பவர் யார்.? ஏன் இத்தனை கைகள்.? இவரது இந்த வடிவத்திற்கான காரணம் என்ன.? அவரது கை என்ன முத்திரையை கொண்டுள்ளது.? இதன் பொருள் என்ன.? இன்ன வகையான ஆசனத்தில் ஏன் அமர்ந்துள்ளார்.? இந்த சிற்பத்தில் தேவையே இல்லாமல் ஒரு நாய் ஏன் உள்ளது.? இந்த ஆயுதத்தின் பெயர் என்ன.? இந்த வகை சிற்பத்தின் இலக்கணம் என்ன.? இதுமாதிரியான விபரங்களே நமது முதன்மை தேவையாக உள்ளது. இந்த விபரங்களையும் நூற்றுக்கணக்கான சிற்பநூல்கள் கூறுகிறது.

மானசரம் என்னும் சிற்பநூல் 32 சிற்பநூல்களான விஸ்வகர்மியம், விஸ்வம், என்று ஆரம்பிக்கும். மனுசரம் என்ற நூல் 28 சிற்பநூல்களை விவரிக்கிறது. ஈசானம், சித்திர காஸ்யம் என்று தொடங்கும். பிறகு பிரபல நூல்களான காஸ்யபம், சில்பரத்தினம் என்றும் இருக்கிறது.. மேற்கண்ட அனைத்து நூல்களிலும், காணப்படும் நமக்கு அவசியத் மற்றும் அவசரத் இரண்டு சாரம் மட்டுமே..

1. பிரதிமாலஷணம் என்று சொல்லப்படும் சிற்பங்களின் படிமங்களின் இலக்கணம்.
2. ரூபத்யானலஷணம் என்று சொல்லப்படும் சிற்பங்களின் உருவ அமைதி இலக்கணம்.

இந்த இரண்டு பிரிவிலும் நமக்குத்தேவையான பாடங்கள் உள்ளது. அதைத்தான் இப்பயிற்சி முகாமில் தெரிந்து கொள்ள இருக்கிறோம். மேற்கண்ட நூல்களில் இருந்து, தேவையானதை எடுத்துத் தொகுக்கப்பட்ட, சிற்பக்கல்லூரியின் பாடமான சிற்பசெந்நூல் என்னும் நூலில் இருந்து தொடங்குகிறோம். பெருந்தச்சன் கீர்த்திவர்மன் அவர்கள் தொகுத்தக் கொடுத்த பாடங்களை பயில இருக்கிறோம்.


முதல் பாடமாக...சிற்பங்களில் காணப்படும் கை முத்திரைகள்.. எண்ணிக்கை.. விபரம்.. முத்திரையை எந்த கடவுற்படிமம் கொண்டிருக்கும். அம்முத்திரையின் பொருள் என்ன.? எந்த முத்திரை எந்த ஆயுதத்தை ஏந்தும்..?

# 01. சிற்பக் கை அமைதிகள்.

சிற்பங்களில்... கை விரல்களை நீட்டுதல், மடக்குதல், கூட்டுதல், விலக்குதல், குவித்தல்.. ஆகிய ஐந்து நிலைகளை அடிப்படையாகக் கொண்டு தன் எண்ணத்தை வெளிப்படுத்தும் அமைப்பு கை இலக்கணம் கை அமைதி எனப்படும்.

நாட்டியக் கலைகளில் அபிநய பேதங்களை இவ்வமைப்பு வெளிப்படுத்துவதால் இதை முத்திரை ( பிடி) என்றும் கூறுவர். பொதுவாக **ஹஸ்த முத்திரை** என்று அழைப்பர். சிற்பப் படிமங்களில் 32 வகையான கை முத்திரைகள் உள்ளன. **தொழிற் கை** முத்திரையில் 24 முத்திரைகளும்.. **எழிற் கை** முத்திரையில் நான்கும். **இரட்டைக் கை**கள் முத்திரையில் நான்கும் உள்ளன..

## தொழிற் கை முத்திரைகள்



ஒற்றைக் கை..தொழிற் முத்திரை:

| | | |
|---|---|---|
| 1. அபய ஹஸ்தம் | 9. அலபத்ம ஹஸ்தம் | 17.சிகர ஹஸ்தம் |
| 2. வரத ஹஸ்தம் | 10. விஸ்மய ஹஸ்தம் | 18.பூ ஸ்பரிச அஸ்தம் |
| 3.கடக ஹஸ்தம் | 11. பல்லவ ஹஸ்தம் | 19. கடி ஹஸ்தம் |
| 4. சிம்ம கர்ண ஹஸ்தம் | 12. நித்ரா ஹஸ்தம் | 20. ஊரு ஹஸ்தம் |
| 5. வியாக்யான ஹஸ்தம் | 13. அர்த்த சந்திர ஹஸ்தம் | 21. ஆலிங்கன ஹஸ்தம் |
| 6. சூசி ஹஸ்தம் | 14. அர்த்த பதாக ஹஸ்தம் | 22. தனுர் ஹஸ்தம் |
| 7. தர்ஜனி ஹஸ்தம் | 15. திரிசூல ஹஸ்தம் | 23. டமரு ஹஸ்தம் |
| 8. கர்த்தரீமுக ஹஸ்தம் | 16. முஷ்டி ஹஸ்தம் | 24.தாடி ஹஸ்தம் |

## இரட்டைக் கைகள்:

1. அஞ்சலி ஹஸ்தம்
2. தியான ஹஸ்தம்
3. புஷ்பபுட புட அஸ்தம்
4. தர்மசக்கர ஹஸ்தம்

## எழிற்கைகள் (4) :

1. கஜ ஹஸ்தம்
2. தண்ட ஹஸ்தம்
3. டோல ஹஸ்தம் (லம்ப ஹஸ்தம்)
4. பிரசாரிதஹஸ்தம்

இந்த 32 ஹஸ்தங்களை பார்க்கிறோம். நாளொன்றுக்கு 16 முத்திரைகளாக, இரண்டு நாட்கள் பார்ப்போம்...

# ஒற்றைக் கை..தொழிற் முத்திரை:

## 01 அபய ஹஸ்தம்




( அபய முத்திரையுடன் பிரம்மனின் அழகு படிமம் )

கை சுட்டுவிரல் முதல் சிறுவிரல் வரை நான்கு விரல்களையும் ஒன்றோடொன்று ஒட்டியமைத்து , பெருவிரலை சுட்டு விரலோடு சேர்த்து மேல்நோக்கி அமையும் முத்திரை. நாட்டிய வழக்கில் இது பதாகம்
( கொடி) என்றழைக்கப்படும். சிற்ப படிமங்களில் மார்பு முலைக்கண் மட்டத்திற்கு கை நடுவிரலின் நுனி அமையும். அஞ்ச வேண்டாம். நான் இருக்கிறேன் என்னும் பொருள் தரும் முத்திரை. பெரும்பாலான கடவுள் படிமங்களில் இம்முத்திரையை காணலாம்...

## 02 வரத ஹஸ்தம்






( வரத முத்திரையுடன் மாமல்லபுரம் இறைவன்)

அபய ஹஸ்தத்தை தலைகீழாகப் பிடித்தால் இம் முத்திரை. உள்ளங்கை வெளிப்புறமாக அமையும். படிமங்களில் இம்முத்திரை கனிவை வெளிப்படுத்தும்.

## 03 கடக ஹஸ்தம்.


3. கடக ஹஸ்தம்.




( பல வித ஆயுதங்களை கடக ஹஸ்தம் கொண்டு ஏந்திய அகோர மூர்த்தி)

கடகம் என்றால் நண்டு. கைத்தளத்திலிருந்து பெருவிரலை நீட்டி, உள் முகமாக சிறிது வளைத்து, நடுவிரலையும் அணிவிரலையும் ஒன்றோடொன்று இணைந்து முன்னோக்கி வளைத்து சுட்டு விரலையும் சிறு விரலையும் தனது இடங்களில் நிறுத்தி மேற்கனுக்களை சிறிது வளைத்து பிறக்கு கை முத்திரை கடக ஹஸ்தம் ஆகும். இதன் தோற்றம் நண்டின் உருவத்தை ஒத்திருக்கும். சிற்பவடிவங்களில் பாசம், அங்குசம் , தண்டம், கத்தி, அம்பு, போன்ற ஆயுதங்களை பிடிப்பதற்கு இம்முத்திரை பயன்படுகிறது. ஆயுதம் இல்லாமலும் இம்முத்திரை இருக்கும்.

## 04 சிம்ம கர்ண ஹஸ்தம்


4 . சிம்மகர்ண ஹஸ்தம்.



கடகமுத்திரையின் நடுவிரல் உள்ளங்கை வரையில் நன்கு வளைந்து அணிவிரல் அதனை தொடர்ந்து செல்ல, மற்ற விரல்கள் கடகமுத்திரையில் உள்ளவாறு இருக்கும். இதுவே சிம்ம கர்ணம் ( சிங்கச் செவி) ஆகும். அமைதியை இம்முத்திரை உணர்த்தும்.

## 05 வியாக்கியான முத்திரை.







பெருவிரல் கைத்தலத்தை விட்டு பிரிந்து முன்னோக்கி நீண்டு நிற்க. சுட்டு விரலானது வணங்கி பெருலிரலின் நுனியைத் தொட்டு வளையம் போன்று அமையும்.நடுவிரல், சிறுவிரல், அணி விரல் இம்மூன்றும் மேல்நோக்கி இருக்கும். ஞானாசிரியர்கள் தத்துவ விளக்கத்தைப் போதிக்கும் முத்திரை. வியாக்கியானம் என்றால் விதர்க்கம் என்று பொருள். இம்முத்திரை சின் முத்திரை என்றும் கூறுவர். ஆணவம், மாயை, கன்மம், போன்ற மூன்று மலங்களிலிருத்தது விடுபட்டு ஜீவாத்மா பரமாத்மாவை சரணடைதலே முக்தி பேறு அடையும் வழி என்பதை உணர்த்தும் முத்திரை. ஆலமர் செல்வனாகிய தஷிணாமூர்த்தி இம்மூர்த்தியுடன் இருப்பார்.

இயல்பாக கைத்தலத்தை விரிக்கும்போது கட்டை விரல் பிரிந்து பிற நான்கு விரலும் சேர்ந்து அமையும். சுட்டு விரலனாது பிரிந்து பெருவிரலைத் தொடும் முத்திரை ஞானமுத்திரை ஆகும். இதை சந்தம்ஸ முத்திரை என்றும் கூறுவர். ஞான முத்திரை கையானது யோக முத்திரை ஆகும். தஷிணாமூர்த்தி படிமத்தில் இம்முத்திரை வெளி முகமாக பிடிக்கப்படும். இம்முத்திரையை பத்மாசன கோல அடியார்களும் அமைப்பர்.



வியாக்கியான அதாவது சின் முத்திரை அமைக்கும் தஷிணாமூர்த்தி படிமம்

## 06 சூசி ஹஸ்தம்





கடகமுத்திரையில் சுட்டுவிரலை செங்குத்தாக நிறுத்துவது சூசி ஹஸ்தம் ( ஊசி அல்லது சுட்டுக்கை) இது ஒரு பொருளை சுட்டிகாட்டும்.
உள்ளேதான் எம்பெருமான் இருக்கிறார் என்று துவாரபாலகர் சுட்டிக் காட்டுவதும் இவ்வகை முத்திரையே.


கலைமகளும் இம்முத்திரையுடன் அமைவது உண்டு.




கூத்தாடும் ஞானசம்பந்தர் படிமத்தில் இம்முத்திரையைக் காணலாம்..

## 07 தர்ஜனீ ஹஸ்தம்.

சூசி முத்திரையை ஒத்த அமைப்பு. சுட்டுவிரலும் கைத்தலமும் சிறிது பின்னடங்கி சாய்ந்து அச்சுறுத்தும் தன்மையை உணர்த்தும். தர்ஜனீ என்றால் அச்சுறுத்தல் என்று பொருள்.


7 . தர்ஜனீ ஹஸ்தம்.

## 08 கர்த்தரி முக ஹஸ்தம்


8 . கர்த்தரி முக ஹஸ்தம்.

*அணிவிரலும் பெருவிரலும் உள்ளங்கையில் முன்புறத்தே நெருங்கி அமைய சிறு விரலானது தன்னித்தில் செங்குத்தாக நிமிர்ந்து அல்லது சிறிது வளைந்து இருக்கும்.சுட்டு விரலும் நடுவிரலும் செங்குத்தாக நேரே நிமிர்ந்து நடுவிரல் முன்னோக்கியும் சுட்டு விரல் பின்னோக்கியும் விரிந்து கத்திரிகோலின் அலகுகள் போல அமையும். சில வகை ஆயுதங்களை வனிதமாக தூக்கிநிறுத்தி பிடிக்கப் பயன்படும்.கடவுள் படிமங்களில் மேற்புரக்கையில் இம்முத்திரை இருக்கும். கத்திரி அலகுகளுக்கிடையே ஆயுதம் பக்கவாட்டில் அமைந்து இயங்கும் பாவனையுடன் இருந்தால் பிரயோகமுத்திரை எனப்படும்.*



கர்த்தரி முத்திரை.. சக்கரம் ஏந்திய விஷ்ணு

.






கர்த்தரி முத்திரையில் பரசு ( கோடாரி) ஏந்திய வாமதேவ மூர்த்தி. ரிஷபாந்திக உமையொறு பங்கன். படிமங்கள் படம் பார்க்க. )

## 09 அலபத்ம ஹஸ்தம்






எல்லா விரல்களும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து விரிந்த தாமரை மலர் போல் தோற்றம் தரும் முத்திரை. கைத்தலம் மேல்நோக்கி அமையும். இது மகிழ்ச்சியைத் தரும் பொருளில் அமையும் முத்திரை. துவாரபாலகர் படிமங்களில் நடுவுடலை அணுகியதாகவோ மேற்கரத்திலோ இருக்கும்.

## 10 விஸ்மய ஹஸ்தம்


10. விஸ்மய ஹஸ்தம்.

அல பத்ம முத்திரை செங்குத்தாக அமைந்து காண்போருக்கு புறங்கை தெரிய பிடிச்சுக்காட்டுவது விஸ்மய ஹஸ்தம். விரல்கள் எல்லாம் தனித்தனியே பிரிந்து கை மலரென விரிந்து வியப்பினை இது உணர்த்தும். துவாரபாலகரின் கீழ் கரங்கள் இம்முத்திரையில் இருக்கும்..

## 11.பல்லவ ஹஸ்தம்


11. பல்லவ ஹஸ்தம்.









ஐந்து விரல்களை விரித்து நீட்டி உள்ளங்கை உள்முகமாகவும் புறங்கை வெளிமுகமாகவும் அமைய மணிக்கட்டிலிருந்து இலை போல் கீழ் நோக்கி மடிந்து தொங்கும் கையமைதி பல்லவ ஹஸ்தம் எனப்படும். இதை தளிர்க்கை என்றும் கூறுவர். ரிஷபாந்தகர் மற்றும் இராஜகோபாலன் மூர்த்தத்தில் இம்முத்திரைக் காணலாம்.

## 12 நித்ரா ஹஸ்தம்






ஆசனத்தில் ஊன்றிய கையமைதி. அபய முத்திரையோடு கூடிய கையை ஆசனத்தில் படுக்கையாக வைத்து, சுட்டுவிரலும் சிறுவிரலும் ஆசனத்தை தொடாமல் சற்று மேல் நோக்கி கிளம்பி சிறிது வளைந்து இருக்கும். இது உறக்கநிலையை உணர்த்துவதால் நித்திரா ஹஸ்தம் எனப்படும். சோமஸ்கந்தர் படிமத்தில் உமாதேவியின் இடது கை இம்முத்திரையை அமைக்கும்..


## 13 அர்த்த சந்திர ஹஸ்தம்






சுட்டுவிரல் முதல் சிறுவிரல் வரை உள்ள நான்கையும் ஒன்றோடொன்று ஒட்டியமைத்து கட்டை விரலை அவற்றிலிருந்து பிரித்து விரைப்பாக எதிர்புறம் நீட்டி அமைத்த முத்திரை.இதை சமமட்டத்தில் செங்குத்தாக பிடிக்காமல் வானத்தை நோக்கி சிறிது சாய்த்து பிடிக்கின் அரைசந்திர வடிவம் தோன்றும். ஆடவல்லான் படிமத்தில் இடது மேற்கரத்தில் தீச்சுடர் ஏந்திய முத்திரை அர்த்த சந்திர ஹஸ்தமாகுப்.

## 14 அர்த்த பதாக ஹஸ்தம்



14. அர்த்த பதாக ஹஸ்தம்.

சுட்டு விரலையும் நடுவிரலையும் விரித்து நீட்டி மற்ற விரல்களை முன்னோக்கி மடக்கி கைத்தலத்தையும் விரலையும் செங்குத்தாகப் பிடித்த அமைப்பு. ஜீவாத்மா, பரமாத்மா இவ்விரண்டும் வெவ்வேறானவை என்பதை உணர்த்தும் குறியீடு. இம்முத்திரையை மத்துவாச்சாரியின் கையில் காணலாம்.

## 15 திரிசூல ஹஸ்தம்



15. திரிசூல ஹஸ்தம்.



கைத்தலத்தையும் விரல்களையும் செங்குத்தாக நீட்டி நிறுத்தி சிறு விரலையும் பெருவிரவையும் கைத்தலத்திற்கு முன்புறம் கொணர்ந்து மடக்கி ஒன்றையொன்று தொட்டிருக்க மற்ற மூன்று விரலும் தொடாமல் விலகி மேல்நோக்கி நிமிர்ந்து நிற்கும்.இது மூன்று பொருளை உணர்த்தும். பசு, பதி, பாசம், அறம் பொருள் இன்பம் என மூன்றையும் உணர்த்துவதாகவும் கொள்ளலாம். திருவள்ளுவர் போன்ற படிமங்களில் இம்முத்திரை இருக்கும்.

## 16 முஷ்டி ஹஸ்தம்


16. முஷ்டி ஹஸ்தம்.



பெருவிரல் தவிர்த்து மற்ற விரல்களை ஒரு சேர மடக்கி உள்ளங்கையோடு சேர்த்து இறுக்கிப் பிடித்து நடுவிரல் மீது பெருவிரலை பொருத்தி அமையும் முத்திரை. தண்டம், வாள், போன்றவற்றை இறுக்கி பிடித்தலைக் காட்டும்.


## 17 சிகர ஹஸ்தம்


17. சிகர ஹஸ்தம்.



பெருவிரல் தவிர மற்ற விரல்களை ஒரு சேர மடக்கி பிடித்து பெருவிரலை செங்குத்தாகப் பிடித்த நிலை. வில்லை பிடிப்பதால் இது விற்படி எனலாம்.


## 18 பூ ஸ்பரிச ஹஸ்தம்


18. பூ ஸ்பரிச ஹஸ்தம்.



பல்லவ முத்திரையுடைய கையினை பூமியை தொடுமாறு பிடித்தல். புத்தர் படிமத்தில் காணலாம். புத்தர் பூமியைத் தொட்டு உணர்த்திய நிலை.

## 19 கடி ஹஸ்தம்


19. கடி ஹஸ்தம்.




கைத்தலத்தையும் விரலையும் விரித்து கட்டை விரலை இடுப்பில் உன்றி மற்ற விரல்களை ஒன்றோடொன்று சேர்த்து இணைத்து இடுப்பில் படியுமாறு வைத்து சிறுவிரலயும் சுட்டுவிரலையும் உடலில் இருந்து கிளப்பிய வடிவம்.

## 20 ஊரு ஹஸ்தம்


20.. ஊரு ஹஸ்தம்.




கையை கீழ்நோக்கி நேராக நீட்டி கைத்தலத்தையும் விரல்களையும் தொடைமீது பொருத்தி மென்மையாக ஊன்றியிருக்கும் முத்திரை. நடுவிரலும் அணி விரலும் தொடையில் பதிந்து சுட்டுவிரலும் சிறுவிரலும் தொடையை விட்டு நீங்கி இதமாக வளைந்து கட்டை விரலானது மற்ற விரல்களிருந்து விலகி தொடையோடு பிகுவாக பொருந்தியிருக்கும். நின்ற கோல விஷ்ணு படிமம் மற்றும் கந்தன் படிமத்திலும் காணலாம்.





## 21 ஆலிங்கன ஹஸ்தம்








சுட்டு விரல் முதல் சிறு விரல் வரை உள்ள விரல்களை ஒன்றோடு ஒன்று நெருங்கியதாக அமைத்து சுட்டு விரலையும் சிறு விரலையும் சிறிது மேல்நோக்கி கிளப்பி கட்டை விரலை கைத்தளத்திலிருந்து கிளப்பி தேவியின் உடலை அணைத்தவாறு இருக்கும். இடுப்பை தொட்ட நிலையிலோ, புஜத்தை அணைத்த நிலையிலோ அமையும். உமாசகிதர் மூர்த்தத்திலும், லஷ்மி நாரயணர் மூர்த்தத்திலும் இம்முத்திரை இருக்கும்.

## 22 தனுர் ஹஸ்தம்








கைத்தலத்தை உள்முகமாகத் திருப்பி, நடுவிரலையும் அணிவிரலையும் சேர்த்து, வில்லின் மீது படியச் செய்து, சுட்டுவிரலையும் சிறுவிரலையும் மேல் நோக்கி கிளம்பி, சிது வளைத்து பெருவிரல் கைத்தலத்தை உள்முகமாகப் பார்த்த வண்ணம் மடக்கி, விரல் நுனியை வில்லின் பக்கத்தைத் தொட்டிருக்குமாறு அமைத்த கை அமைதி தனுர் ஹஸ்தம் என்று சொல்லப்படும்.


Property of Special Collections, University of Washington Libraries

சுட்டு விரல் நுனி படிமத்தின் புருவ மட்டத்தில் அமையின் நல்ல தோற்றம் பெற்று விளங்கும். இவ்வமைதியினை திரிபுராந்தக சிவ மூர்த்தத்திலும், கோதண்டராமன் படிமத்திலும் காணலாம்.

## 23 டமரு ஹஸ்தம்









விரல்களையும், கைத்தலத்தையும் விரித்து, நடுவிரலையும், அணிவிரலையும் ஒன்றோடொன்று நெருக்கியமைத்து, கைத்தலத்தை நோக்கி பிகுவாக வளைத்து, கட்டை விரலை டமருகத்தை நோக்கி வளைத்து, சுட்டு விரலையும், சிறு விரலையும் செங்குத்தாக்கிச் சிறிதே முன்புறம் வளைந்து அமைத்த பிடி டமரு ஹஸ்தம் எனப்படும். உடுக்கை பிடித்துள்ள பாவனையை இஃது உணர்த்தும். ஆடவல்லான் படிமத்தில் இதைச் சிறப்பாகக் காணலாம்.

## 24 தாடன ஹஸ்தம்




24 . தாடன ஹஸ்தம்...

பெருவிரல் முதல் சிறுவிரல் வரை எல்லா விரல்களையும் ஒன்றொடொன்று ஒட்டி, கட்டை விரலைக் கைத்தல மட்டத்திலேயே அகல விரித்து சிறிது பின்னோக்கிச் சென்று அமையும் பிடி தாடன ஹஸ்தம் எனப்படும். இது தண்டிக்கும் செயலை உணர்த்தும். பொதுவாய் வதம் செய்யும் கடவுற் படிமங்களில் இம்முத்திரை காணப்படும்..

# இரட்டைக் கை முத்திரை

## 01 அஞ்சலி ஹஸ்தம்








அபய முத்திரையுடன் கூடிய வலது இடது கரங்களை மார்புக்கு முன்புறமாக இணைத்துப் பிடித்த இரட்டைக்கை அமைதி அஞ்சலி ஹஸ்தம் எனப்படும். கைக்களுக்கிடையே பூ, பூமாலை, உருத்திராக்க மாலை போன்ற ஒன்றை காட்டலும் உண்டு .


## 02 தியான அஸ்தம்






அமர்ந்த கோலத்தில், இடது கைத்தலத்தை மேல் நோக்கியவாறு மடியில் வைத்து, வலது கைத்தலத்தையும் அங்ஙனமே இடது கை மீது படிய வைத்திருக்கும் கை அமைதி, தியான ஹஸ்தம் எனப்படும். கைவிரல்கள் அபய முத்திரைகள் கூறியவாறு சேர்த்து நீட்டியவாறு இருத்தல் வேண்டும். இடது கை விரல்கள் வலது பக்கம் நீட்டியும் வலது கை விரல்கள் இடது பக்கம் நீட்டியும் இருக்கும். புத்தர் மற்றும் தியான படிமங்களில் காணப்படும்.

## 03 புஷ்ப புட ஹஸ்தம்


3. புஷ்பபுட ஹஸ்தம்.

இரு கைகளிலும் வரத முத்திரை காட்டி, இரண்டையும் மார்புக்கு முன்னே நளினமாகப் பிடித்து, விரல் நுனிகளை உள்முகமாகச் சிறிது மடக்கி மலர்க்குடலைபோல் அமைத்த கை அமைதி புஷ்ப புடம் எனப்படும். இது மலர் கொண்டு வணங்கும் பாவனையைக் குறிக்கும் அடியவர் படிமங்களுக்கு ஏற்றது

இரு கைகளும் பிரிந்து வரத முத்திரையுடன் நாபி மட்டத்திற்குக் கீழே பிடிக்கப்படும் போது அழைக்கும் பாவனையை உணர்த்தும். மேலும் இக்கைகளை அபய முத்திரையுடன் கூடியதாய் நடுவிரலும், அணிவிரலும் முன்னோக்கி வளைந்தமையின் இதே கருத்தைச் சுவையோடு உணர்த்துவதாகும். குழந்தை முருகன் உமையானவள் இம்முத்திரையால் அழைக்கும் பாவனை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். பரத நாட்டிய அரங்கில் முதல் நிகழ்வாக புஷ்பாஞ்சலி ..நடராஜபெருமானுக்கு நாட்டியமாடுவோர்....இந்த முத்திரையில் மலர் தூவி அஞ்சலி செலுத்துவர்...

## 04 தர்மசக்கர ஹஸ்தம்


4. தர்மச்சக்கரா ஹஸ்தம்.



வலது புறங்கையை மார்பின் அணித்தே வைத்து, அபயமுத்திரையை போல விரல்களை லளிதமாகவும், வெளிமுகமாகவும் பிடித்து, சுட்டு விரலை மட்டும் முன்னோக்கி நீட்டி வளைத்து, இடது கையை வலது கை அருக கொணர்ந்து இதன் அகங்கை உள்முகமாக அமையப் பிடித்து ஐந்து விரல்களையும் மேல்நோக்கி நீட்டி மார்பை நோக்கி மென்மையாக வணங்கிப் பிடித்து வலக்கையில் இடக்கையும் அருகருகே அமையுமாறு எடுத்து வலது கையின் சுட்டு விரலால் இடது கை நடுவிரலை நெருங்கியிருக்குமாறு அமைத்து அற விளக்கம் கூறும் அமைதி கொண்ட முத்திரைக்கு "தர்ம சக்கர முத்திரை என்று பெயர். தர்ம சக்கரத்தை இயக்கும் பாவனை என்று இதனைச் சொல்வார்கள்..

# எழிற்கைகள்

## 01 கஜ ஹஸ்தம்:








கையை நேராக நீட்டி, மணிக்கட்டில் கைத்தலத்தைக் கீழ்நோக்கிச் சரித்து, தளிர்க்கை போல் விரல்களை அமைத்து, கம்பீரமாகப் பிடிக்கும் கையானது கஜ ஹஸ்தம் (தும்பிக்கை) எனப்படும். இதனை 'கரி ஹஸ்தம்' என்றும் சொல்வதுண்டு. கஜ ஹஸ்தத்தை ஆடவல்லான் படிமத்தில் காணலாம்.

## 02 தண்ட ஹஸ்தம்








கஜ ஹஸ்தத்தை முன்னோக்கி நீட்டியவாறு அமைப்பது தண்ட ஹஸ்தம் எனப்படும். இக்கையானது அமர்ந்த கோலம் படிமத்தில், மடக்கி நிறுத்திய முழங்கால் மீது மணிக்கட்டை வைத்த நிலையில் அமையும். இதனை அய்யனார் படிமத்திலும், பிற யோக, தியான கோலம் படிமங்களிலும் காணலாம்.

## 03 டோல அஸ்தம்






ஒடிந்த அறாக் கிளை மரத்தில் தொங்கி நிற்கிற நிலையைப் போலத் தோளிலிருந்து நீட்டப் பெற்றுத் தொங்கியமையும் கை அமைதி 'டோல ஹஸ்தம்' எனப்படும். லோலகரம், லம்பகரம் என்ற பெயர்களும் இதற்கு உண்டு. விரல்கள் பல்லவ முத்திரையில் கண்டவாறு அமைந்து விளங்கும். பெண் படிமங்களில் இக்கரத்தைச் சிறப்பாகக் காணலாம்.

## 04 பிரசாரித ஹஸ்தம்








புயத்தை நேராக நீட்டி, கைத்தலத்தையும் விரல்களையும் பல்லவ முத்திரையுடன் கூடியதாக அமைத்து விளங்கும் கையமைதி பிரசாரித ஹஸ்தம் எனப்படும். இதனை சயனக் கோல விஷ்ணு படிமத்தில் காணலாம். மேலும், கூத்தாடும் விநாயகர், கண்ணன், கந்தன், சம்பந்தர் படிமங்களில் எழிலுக்காக நீட்டிப் பிடிக்கப்படும் கை அமைதியாகவும் காணலாம். இது வீசிய கரம் என்றும், நாட்டியக் கரம் என்றும் கூறுவர்.

இத்துடன் 32 கை முத்திரைகள் பற்றிய பாடங்கள் நிறைவு..

பொதுவாக கடவுற் படிமங்களில் இம்முத்திரைகளில் ஏதேனும் சில  காணப்படும். ஒரு சில முத்திரைகள் கடவுற்படிமங்களில் அவசியம் காணப்படும். வியாக்கியான ஹஸ்தம் என்று சொல்லப்படும் சின் முத்திரை அவசியம் தஷிணாமூர்த்தி படிமங்களில் இருக்கும். சூசி முத்திரை அதிகளவில் காணப்படும் என்றாலும், துவாரபாலகர், கஜசம்ஹார மூர்த்தி, காலசம்ஹாரமூர்த்தி படிமங்களில் பெரும்பாலும் இருக்கும். இந்த முத்திரையை இந்த உருவம்தான் அமைக்கும் என்ற விதி ஏதும் இல்லை.. இந்த 32 முத்திரைகளின் அமைப்பை சற்று மாற்றியும் படிமங்களில் இருக்கும். இந்த 32 முத்திரைகள் எதிலும் அடங்காத சில கை அசைவுகளும் அமைவது உண்டு.. மீண்டும் ஒருமுறை 32 முத்திரைகளையும் நன்கு கவனித்து, சிற்பங்களுடன் ஒப்பிட்டு பார்த்து தயாராகவும்..

# 02. சிற்பம் அறிவோம்.. தேர்வு... 1

இப்பாடப்பதிவுகளின் நோக்கம்...

சிற்பம் ஒன்றை எவ்வாறு அடையாளம் காண்பது. ஒரு சிற்பத்தை நேரிடையாக பார்க்கும் போது அதை முழுமையாக அனுபவித்து ரசிக்கவேண்டும்..

கோவிலுக்குச் செல்கிறோம். சிற்பம் ஒன்றை பார்க்கிறோம். கங்காதார் என்று எழுதிப்போட்டிருப்பார்கள். ஓ.. அப்படியா..? இவர் பெயர் கங்காதாரரா.? ஒரு வினாடி அச்சிற்பத்தைப் பார்த்துவிட்டு, ஒரு கும்பிடு போட்டு நகர்ந்து விடுவோம்.. கங்காதாரர் யார்.? என்ன வரலாறு.? சடை முடியை ஏன் விரித்துள்ளார்.? அந்த விரிசடையில் உள்ள பெண் உருவம் யார்.? பார்வதிக்கு ஏன் கோபம்.? சிவனுக்கு ஏன் சிரிப்பு..? இந்த விபரங்கள் அனைத்தும் தெரிந்தால்தான் அந்த கங்காதாரர் சிற்பத்தை முழுமையாக நாம் இரசிக்க முடியும். இதுபோன்ற பல தெய்வ படிமங்களின் விளக்கங்களை நாம் அறிந்திருந்தால் மட்டுமே, அப்படிமங்களை நாம் கண்டு ரசிக்க முடியும் உணரமுடியும். பிரம்மாண்டத்தை அனுபவிக்கமுடியும்.

அந்த விளக்கங்களை நாம் அறிந்து கொள்ளவேண்டும் என்பதே இப்பயிற்சியின் நோக்கம்.. இந்த விளக்கங்களை நீங்கள் அறிந்தப்பிறகு.. அடுத்த முறை ஒரு சிற்பத்தைப் பார்க்கும்போது நிச்சயம் ஒரு வினாடியில் கடந்து செல்லமாட்டீர்கள். குறைந்தது ஒரு நிமிடவாது அச்சிற்பத்தை உற்றுப் பார்ப்பீர்கள். அதற்கு நமக்குத் தேவை ஒரு சிற்பத்தைப்பற்றிய அடிப்படை தேவை என்னவென்றால்.. சிற்ப கை அமைதி, முத்திரை, ஆசனம், ஸ்தானம், ஆயுதம், அணிகலன், புராண வரலாறு.. இது போன்ற தகவல்களை நாம் அறிந்தால் மட்டுமே அந்த சிற்பத்தை அடையாளம் காணமுடியும். முழுமையாக ரசிக்க முடியும். ஏராளமான இடங்களுக்குச் சென்று ஏராளமான சிற்பங்களை பார்த்து அறிந்தால்தான் திறன் பெற முடியும். எல்லோராலும் எல்லா இடங்களுக்கும் சென்று இருக்கமுடியாது என்பதாலேயே இப்பயிற்சியில் அதிகமான படங்களை பதிவிடுகிறோம்..

கடந்து மூன்று நாள் பயிற்சியில் கடவுற் படிமங்கள் அமைக்கும் 32 வகையான முத்திரைகளைப் பற்றி நாம் அறிந்துள்ளோம். அதையொட்டிய ஒரு தேர்வு.. 23 படங்களைப் பாருங்கள். ஓவியர் சில்பி அவர்கள் கோவிலுக்கு நேரடியாகச் சென்று பார்த்து தத்ரூபமாய் வரைந்தவை இவை..

இப்படங்களை நன்கு உற்றுப்பாருங்கள்..

ஒவ்வோர் படத்திற்கும் ஒரு எண் கொடுக்கப்பட்டுள்ளது.
அந்தச் சிற்பத்தில் என்னென்ன முத்திரைகள் உள்ளது என்பதை கவனியுங்கள்.

அம்முத்திரைகளை நீங்கள் பதிவிடவேண்டும்..


1 - 23 வரை உள்ள எண்களைக் குறிப்பிட்டு அதில் உள்ள முத்திரைகளை மட்டும் நீங்கள் பதிவிடவேண்டும்..










5


6


7


8


9


10


11


12


13


14


15


16


17


18


19


20


21


22


23

# 03. திருக்கோலங்கள் ( ஆசனங்கள்)

ஆசனங்கள். தெய்வபடிமங்களின் திருக்கோலங்கள் ஆசனம் எனப்படும். பொதுவாக கடவுற் படிமங்களை நான்கு பிரிவுகளாகிய பிரிக்கிறது சிற்ப சாஸ்திரம்.

1. நின்றகோலம்
2. அமர்ந்த கோலம்
3. கிடந்த ( படுத்த) கோலம் மற்றும்
4. கூத்தாடிய ( நடன) கோலம்

கை முத்திரை என்னும் கை அசைவுகளை நாம் அறிந்தது போல், இந்த கால் அசைவுகளையும் நாம் அறிந்திருத்தல் வேண்டும். அசைவுகள் கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**ஸ்தானகம்.( நின்ற கோலம்)**

1. சமபாத ஸ்தானகம்
2.வைதஸ்திக ஸ்தானகம்
3.அர்த்த வைதஸ்திக ஸ்தானகம்
4.காயோத் சர்க்கம்

**ஆசனம் ( அமர்ந்த நிலை. )**

1.,சுகாசனம்.
2.பத்மாசனம்.
3.அர்த்த பத்மாசனம்.
4.லலிதாசனம்.
5.மகாராஜா லீலாசனம்.
6 . வீராசனம்.
7.இராஜலிங்காசனம்.
8.உத்குடிகாசனம்.
9.யோகாசனம்.
10. ஸ்வஸ்திகாசனம்.
11. கருடாசனம்.

**சயனம்.( கிடந்தநிலை)**

1. சமசயனம்
2.அர்த்த சயனம்.


**ஸ்தானசானம் ( அசைவு நிலை).:**


1. வைசாக ஸ்தானகம்.
2.வைஷ்ணவம்
3.ஸ்வஸ்திகாசனம்.
4.பிரத்யா லீடாசனம்.


5.ஊர்த்துவ ஜானு.
6.ஏகபாத ஸ்தானகம்.


இனி.. ஒவ்வொறு படிமக்கோலத்தின் அமைப்பை பார்ப்போம்.. நின்ற.. அமர்ந்த.. கிடந்த.. கோலம் என்னும் மூன்று வகை நிலை விஷ்ணுவுக்கே உரித்தாகிறது.. நாம் பார்க்கபோகும் பெரும்பாலன கோலங்களில் விஷ்ணு மூர்த்தம் அமையும்.


## நின்ற கோலம் (ஸ்தானகம்)


ஸ்தானகம்.


சமபாத ஸ்தானகம்


வைதஸ்திக ஸ்தானகம்


அர்த்த வைதஸ்திக ஸ்தானகம்


காயோத்சர்க்கம்

## 01 சமபாத ஸ்தானகம்



எந்த ஒரு அசைவோ வளைவோ இன்றி , சமச்சீர் அமைப்புடன் இரு பாதங்களைச் சமமாக வைத்து நிற்கும் நிலை . தலையையும் உடலையும் நேராக நிமிர்த்தி, சம நிலையில் கைகளையும் கால்களையும் நெருங்க அமைத்து, ஒருபாற் கோடாமல் நேர்நோக்குடையதாக அமைக்கப்படும் அமைதிக்கு 'சமபாத ஸ்தானகம்' என்று பெயர். ஹரிகர மூர்த்தம் , சந்திரசேகர மூர்த்தம் ஆகிய படிமங்களில் காணலாம். கைகளில் அவரவர்க்குரிய முத்திரைகளைப் பிடித்து நிற்பார்கள். சம்பாத ஸதானக நிலையில் மேலும் இரு உட்பிரிவுகள் உள்ளன.

## 02 வைதஸ்திக ஸ்தானம்



சமபாத ஸ்தானக நிலையில் சமமாக வைக்கப்பட்ட பாதங்களின் பெருவிரல்களின் இடைவெளி ஒரு விதஸ்தி (இரண்டு சான்..) அளவிருப்பின் இக்கோலம் வைதஸ்திக ஸ்தானகம்: என்று சொல்லப்படும்.

## 03 அர்த்த வைதஸ்திக ஸ்தானகம்

பாதங்களின் இடைவெளி ஒரு சாண் அளவே இருப்பின் அது அர்த்த வைதஸ்திக ஸ்தானகம் என்று சொல்லப்படும்.

## 04 காயோத் சர்க்கம்


பாதங்களைச் சமமாக வைத்து உடலை நேரே நிமிர்த்தி, தலையை சம நோக்குடன் அமைத்து, கைகளை நேரே கீழ்நோக்கித் தொங்கவிட்டு, விரல்களையும் இயல்பாக நீட்டியமைத்து , கைத் தலங்கள் தொடைகளை அணுகி இருக்கச் செய்து நிற்கும் கோலம் காயோத்சர்க்கம் என்றும், ஆஜானுலம்பபாகு என்றும் சொல்லப்படும். உடலைப் பற்றிய ஆசாபாசங்களைத் துறந்து நிற்பதால் காயோத்சர்க்கம் என்றும். கைகள், முழங்கால் வரை நீண்டு தொங்கி நிற்பதால் ஆஜானுலம்பபாகு என்றும் பெயர் பெற்றன. இந்நிலையைத் தான் தாழ் தடக்கை என்று தமிழில் கூறுவர். சமன சமய படிமங்கள் இதற்குக் தக்க எடுத்துக்காட்டு.. சமபாத ஸ்தானக நிலைக்கு விஷ்ணு மூர்த்தம் ஒன்றும், ஹரிஹரர் மூர்த்தம் ஒன்றும் பதிவிடப்பட்டுள்ளது. காயோத் சர்க்கம் நிலைக்கு தீர்த்தங்கர் படிமம் ஒன்று பதிவிடப்பட்டுள்ளது..



TIRTHANKARA

# அமர்ந்த நிலை (ஆசனம்)

## 01 சுகாசனம்.









உடலை எப்பக்கத்திலும் சாய்வின்றி நேராகநிமிர்த்தி, கைகளை சமச்சீருடையதாகக் கோவித்து ஒரு காலை ஆசனத்தின் மீது படுக்கவைத்து மற்றொரு காலை சுகமாகதொங்கவிட்டு அமர்ந்திருக்கும் நிலை சுகாசனம். சிவன் , பிரம்மா , விஷ்ணு மூர்த்தங்களில் காணலாம்.. சண்டிகேசர் படிமங்கள் பெரும்பாலும் சுகாசனம் கொண்டு அமையும்.. லண்டன் அருங்காட்சியகத்தில் உள்ள, சிறப்பான விஷ்ணு படிமம் சுகாசனம் கொண்டு அமைந்துள்ளது.

## 02 பத்மாசனம்








அமர்ந்தநிலையில் உடலை நேராக நிமிர்த்தி இரு பாதங்களை ஒன்றுக்கொன்று குறுக்காக தொடைமீதுகிடத்தி உள்ளங்கால்களை வானோக்கி அமையச் செய்த கோலம் பத்மாசனம் அல்லது கமலாசனம் எனப்படும். பௌத்த மரபில் இது பரியங்கசானம் என்றும் சொல்லப்படும்.. ஒருபாதத்தை சாதரணமாக மடக்கி படுக்கக் கிடத்தி மற்றொன்றை முன்போல் தொடைமீது அமைத்து அமையும் நிலை அர்த்த பத்மாசனம் எனப்படும். புத்தர், முருகன் மற்றும் மதுரா அருங்காட்சியகத்தில் உள்ள விஷ்ணு.





## 03 லளிதாசனம்..




லளிதாசனம்



பீடத்தில் இரண்டு கால்களையும் வைத்து அமர்ந்து ஒரு காலை பீடத்தின் மீது மடக்கிப்போட்டு நிறுத்தியமைந்த அமைதி லளிதாசனம். இதை விநாயகரின் அமர்ந்தக் கோல படிமத்தில் காணலாம்.

## 04 மகாராஜா லீலாசனம்.



மகாராஜ லீலாசனம்






லளிதாசனக் கோலத்தில் வலது கையினை மடித்து தூக்கி நிறுத்திய முழங்கால் மீது வனிதமாக வலது முழங்கையை வைத்து நீட்டிய அல்லது மார்பை நோக்கியமைத்து இடது கையை பக்கவாட்டில் ஒய்யாரமாக ஊன்றி உடலை சுகமாக

வளைத்து அமர்ந்திருக்கும் நிலையை மகாராஜா லீலாசனம் என்பர். பௌத்தப் படிமங்களும். ஐயனார் படிமங்களும் இந்த ஆசனம் கொண்டிருக்கும். அபூர்வ விஷ்ணு படிமங்களும் அமையும். இவ்வாசனத்தில்..பதாமி குடவரை விஷ்ணு..

## 05 வீராசனம்









அமர்ந்தநிலையில் ஒரு காலை தொங்கவிட்டு ஊன்றி, மற்றொரு காலை அதன் மீது விரைப்பாக படுக்கக் கிடத்தி நீட்டி உடலை சமநிலையில் கொண்டு விரைப்பாக நிமிர்த்தி ராஜ நோக்குடன் அமர்ந்திருக்கும் கோலம். தஷிணாமூர்த்தி படிமம், இராஜராஜேஷ்வரி படிமம் .. இவ்வகை ஆசனத்தில் அமையும்

## 06. இராஜலிங்காசனம்









பீடத்தின் மீது இரண்டு கால்களையும் வைத்து வலது காலை மடக்கி குய்யத்தோடு ஒட்ட அமைத்து இடது காலின் பரடை வலது தொடையின் மீது ஏற்றி அமைந்த கோலம்.. திருவள்ளுவர் படிமங்களை இவ்வாசனத்தில் அமைப்பது உண்டு. தஷிணாமூர்த்தி போன்ற மூர்த்தங்களை விசேசமாக வடிக்கும்போதும் இவ்வாசனம் அமையும்.

## 07 உத்குடிகாசனம்









அமர்ந்த நிலையில் ஒரு காலை தொங்கவிட்டு மற்றொரு காலை மடக்கி ஆசனத்தின் மீது ஊன்றி அமர்ந்திருக்கும் கோலம். யோகதஷிணாமூர்த்தி மற்றும் ஐயனார் படிமங்களில் காணலாம்.

## 08 யோகாசனம்












யோகிகள் ஐம்புலன்களை அடக்கி யோகநிலையில் ஆழ்ந்திருக்கும் கோலம். அமர்ந்திருக்கும் கோலத்தில் இரு கால்களை குறுக்காக பின்னி,

உள்ளங்கால்களை தொடைமீது வான் நோக்கியதாக அமைத்து கைகளை உடலோடு ஒட்டியமைந்த நிலை. ஒரு கையில் சின் முத்திரை பிடித்து மார்போடு இணைத்து உள்புறமாகவோ, வெளிப்புறமாகவோ அமையும். மற்றொரு கையை மடியில் வைத்து கைத்தலம் வானோக்கி அமையும். மேலும்..ஆசனத்திலமர்ந்து இரு கால்களையும் மடித்து ஆசனத்தின் மீது ஒன்றுக்கொன்று குறுக்காக குய்யத்தை தொட்டிருக்க செய்து, உடலையும் இரு கால்களையும் ஒரு பட்டியால் கட்டப்படும். இதை யோகபட்டம் என்பர். இவ்வமைப்பும் யோகாசனம் எனப்படும். இவ்வமைப்பில் யோகபட்டம் இல்லாமல் இருப்பது ஸ்வஸ்திகாசனம் ஆகும். யோகநரசிம்மர் படிமங்களில் இவ்வமைப்பைக் காணலாம்.

**09 கருடாசனம்**..



கருடாசனம்







வலது காலை மடக்கி, அதன் முழங்கால் முட்டியை கீழே படியவைத்து இடது மடக்கி ஊன்றிய நிலைக்கு கருடாசனம்.இது கருடாழ்வாருக்குரிய ஆசனம். கடவுள் படிமத்தின் முன் அடியார்கள் வணங்கும் கோலமும் இதுதான். விஷ்ணுவின் வாகனமான கருடவாகனம் இவ்வமைப்பில் இருக்கும்.. விஷ்ணுவின் தோற்றமும் இவ்வமைப்பில் அமையும்.. காஞ்சி கைலாசநாதர் கோவிலில் உள்ள சக்ரதாரமூர்த்தத்தில் விஷ்ணுவின் கோலம் கருடாசனத்தில் அமைந்திருக்கும். இது ஒரு சிறப்பான அமைப்பு.

# கிடந்த கோலம் ( சயனம்)

கிடந்த ( படுத்த கோலம்) இந்து மூர்த்தங்களில் படுத்த கோலத்தில் உள்ள ஒரே கடவுள் விஷ்ணு மட்டுமே..

## 01 சமசயனம்

ஆசனத்தின் மீது கால்களையும் கைகளையும் நீட்டி உடலையும் தலையும் படுக்கையில் கிடத்தி கண்களை மூடிக்கொண்டு சமமட்டத்தில் மல்லாந்து படுத்த நிலை.



## 02 அர்த்த சயனம்


படுத்த நிலையில் உடலை வில்போல் வளைத்து வலது கையை தலையணை மீது வைத்தோ அல்லது கையை நீட்டி மகுடத்தைத் தொட்டோ, இடது கையை சிறிது வளைவோடு இடது தொடைமீது நீட்டி இடது காலை குஞ்சிதமாக முடக்கி வலது காலை நேராக நீட்டி ஒருக்களித்து படுத்திருக்கும் நிலை..



# அசைவு நிலை (ஆசனம்)

இப்பகுதியில் பயன்படும் படங்கள் அனைத்தும் .. மருத்துவர் திரு.பொன்னம்பலம் சிதம்பரம் அவர்களிடம் பெறப்பட்டது.. அவருக்கு மிகவும் நன்றிகள்.. 🙏

## 01 வைசாக ஸ்தானகம்








ஒரு காலை நன்றாக ஊன்றி, மற்றொரு காலை இரண்டரைச்சாண் அளவில் தள்ளி வைத்து அழகுற நிற்கும் நிலை. இக்கோலம் வில்லேந்தி நிற்பதற்கு ஏற்ற கோலமாகிறது. கோதண்டம் ஏந்திய இராமன் போன்ற படிமங்களில் இதை காணலாம்.

## 02 வைஷ்ணவம்





ஒரு காலை நன்றாக ஊன்றி மற்றொரு காலை சிறிதே மடக்கி உடலை வளைவோடு அமைத்து நிற்கும் கோலம். இக்கோலம் வனித நிலையைக் காட்டும். சிவ மூர்த்தங்களிலும், விஷ்ணு மூர்த்தங்களிலும், சக்தி படிமங்களிலும் இவ்வமைதியைக் காணலாம்.

## 03 ஸ்வஸ்திகாசனம்







ஒரு காலை நிலையாக ஊன்றி மற்றொரு காலை அதன் குறுக்கே வைத்து நிற்கும் அமைதி இது. குழலூதும் கண்ணன், சிவமூர்த்தங்கள், கொடிப்பெண்.. குறிப்பாய் ரிஷபாந்திகர் மூர்த்தத்தில் பெரும்பாலும் காணப்படும்.

## 04 ஆலிடாசனம்.






நின்ற கோலத்தில் இடது காலை முன்னே நீட்டி வலது காலை பின்னோக்கி நீட்டி கணை தொடுத்து நிற்கும் கோலம்.

## 05 பிரத்யாலீடாசனம்



56. வாலி, சுக்ரீவன்
ஸ்ரீரங்கம் - அரங்கநாதர் கோவில்

கணையை விடுத்தபிறகு முன்னோக்கி பாய்ந்து நிற்கும் கோலம். கணையை விடுத்தபிறகு முன்னோக்கி பாய்ந்து நிற்கும் கோலம். இந்த ஆசனம் பெரும்பாலும் நடுகற்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது

## 06 ஊர்த்துவ ஜானு







ஒரு காலை உறுதியாக ஊன்றி, மற்றொரு காலை பீடத்தின் மீது அல்லது வேறொரு உயர்ந்த இடத்தில் அல்லது ஒரு உருவத்தின் மீது தூக்கிவைத்து மடித்து நின்ற கோலம் ஊர்த்துவ ஜானு என்று சொல்லப்படும்.தூக்கிய முழங்கால் என பொருள்படும். திரிபுராந்தகர், மகிஷாசுரமர்த்தனி, கங்காதாரர் போன்ற படிமங்களில் காணலாம்..

## 07 ஏகபாத ஸ்தானகம்



ஏக பாத ஸ்தானகம்



ஏக பாத ஸ்தானகம்





ஒரு காலை ஊன்றி, மற்றொரு காலை மடக்கி ஊன்றிய முழங்கால் முட்டியின் மீது மடக்கிய காலின் பாதத்தை வைத்து நிற்கும் அமைப்பு ஏகபாத ஸ்தானகம் எனப்படும். தவயோல அர்ச்சுனன் படிமங்களில் காணலாம். மடக்கிய காலின் பாதம் குய்யத்தை அடையவைத்து உள்ளங்கால் வானோக்கி அமைவதும் ஏகபாத ஸ்தானகம் ஆகும். தவக்கோல காமாட்சி போன்ற படிமங்களில் காணலாம்.

# 04. தலைக்கோலங்கள்

சிற்பங்களை அடையாளம் காண்பதில் படிமத்தின் தலைக்கோலங்கள் .. அதாவது படிமங்களின் மகுடங்கள் முக்கிய பங்கு பெறும்.. இந்தந்த தெய்வங்கள் இன்னென்ன மகுடங்கள் அணிந்திருக்கும் என்னும் ஒரு வரையறை உண்டு. தமிழகத்துச் சிற்பங்களில் பொதுவாக ஒரு மூன்று மகுட அமைப்புகளை வரையறை செய்வார்கள்..

1. ஜடாமகுடம். - சிவன், பிரம்மா மற்றும் சிவனின் அம்சமான மூர்த்திகள், முனிவர்களுக்கு அமையும்.
2. கீரிடமகுடம். - விஷ்ணு, அரசன், மற்றும் அரசகீர்த்திபெற்ற இறைபடிமங்களில் அமையும்.
3. கரண்ட மகுடம். - மேற்கண்ட இருபிரிவினரைத் தவிர்த்தும் , விநாயகர் மற்றும் தேவியர்கள் படிமங்களில் அமையும்.

இம்மூன்று மகுட அமைப்புளுடன் மேலும் சில மகுட அமைப்புகள் உள்ளன. அவைகளையும் நாம் அறிந்தால்தான் சிற்பம் ஒன்றை முழுமையாக அடையாளம் காண இயலும். புத்தரது தலைக்கோலம்..? ஆடவல்லான் கொண்டுள்ள மகுடம் எது.? தீச்சுடர் போல் உள்ள காளிதேவியின் மகுட அமைப்பின் விபரம் என்ன.? இது போன்ற வினாக்களுக்கு விளக்கம் வேண்டும் என்றால் ... மொத்த மகுட அமைப்பின் விபரங்களையும் நாம் அறிவது அவசியமாகும். குறைந்தது ஒரு 13 மகுட அமைப்புகளை சிற்பநூல்கள் வரையறை செய்கிறது.

1. ஜடா மகுடம். ( மகுடத்தில் அணிகலனாக சூடப்படும் பூரிமத்தின் விளக்கம்)
2. ஜடா பாரம்.
3. ஜடாமண்டலம்.
4.ஜடா பந்தம்.
5. சர்ப்ப மௌலி.
6. விரிசடை
7. சுடர்முடி
8.சிரஸ்திகரம்.
9. குந்தளம்.
10. தம்மில்லம். ( தமிழம்)
11. அளக சூடம்.
12. கீரிட மகுடம்.
13. கரண்ட மகுடம்.

இனி... ஒவ்வொறு தலைக்கோல அமைப்பையும் விளக்கமாகப் பார்ப்போம்..


## 01 ஜடா மகுடம்.


















மகர பூரமம்


பத்ர பூரிமம்


ஜடா மகுடம்


பத்ர பூரிமம்

தலையில் கொண்டை அமைத்து நீண்ட திரிசடையை தலையில் படுக்கையாகவும் செங்குத்தாகவும் சுற்றி கரகம்போல் போல் அமைத்த அமைப்பாகும். இது முக உயரத்தால் 1 , 1 . 1/2 , 2 , பங்கு உயரமுடையதாக அமையும்.

திரிசடைகள் முன்புறத்தில் மூன்று அல்லது ஐந்து வரிசைகளாகவும் தலைக்கு செங்குத்தாகவும் அமையும். உச்சந் தலைக்கு அருகே மூன்று அல்லது ஐந்து திரிசடைகள் தலைக்கு சமாந்தரமாக முடியைச் சுற்றி இறுகி அமையும்.இவ்வாறு செங்குத்தாகவும் படுக்கையாகவும் அமைந்த திரிசடைகளின் பக்கவாட்டில் அச்சடைகள் மாலைபோல் அடுக்கடுக்காய் தொங்கி அமையும்.

இத்திரிசடைகளின் இடைவெளிகளில் முத்துச்சரங்கள் அல்லது மணிவடங்கள் தைக்கப்பட்டிருக்கும்.

இம்முடியின் நான்கு பக்கங்களிலும் பூரிமம் என்ற முகப்பு அணி இருக்கும்.

இப்பூரிமத்தின் அடியில் மணிவடங்கள் தொங்கும். அல்லது தாமரை இதழ்களான நாமங்கள் தொங்கும். சடை முடியின் உச்சியில் இதழ் விரிந்த தாமரை அணி இருக்கும்.

இத்தகைய சடைமுடி உறுதியாக தலையின் மேல் நிற்பதற்கு தலையின் முன்புறத்தில் தலையை ஒட்டியவாறு மணிவடங்கள் இருக்கும். நெற்றியின் மேல் விளிம்பில் தலையைச்சுற்றி பட்டிகை ஒன்று கட்டப்பட்டிருக்கும். இப்பட்டிகையின் மேல் விளிம்பில் முகத்தின் மையத்தில் ஒரு மலரும் கண்களின் நடுப்பகுதிக்கு நேர் மேலே இருபக்கங்களிலும் ஒவ்வொறு மலரும், காதுகளுக்கு முன்புறத்தில் ஒரு மலரும் சொருகப்பட்டிருக்கும். இம்மலர்கள் செருகப்பட்டத் துளைகளில் சடைமுடியை பிணைக்கும் மணிவடங்கள் இணைக்கப்பட்டிருக்கும்.

ஜடா மகுடத்தையும், பிற மகுடங்களையும் அலங்கரிக்கும் முகப்பு அணி பூரிமம் எனப்படும். இதன் முழுத்தோற்றம் " அரசிலை " போன்றது. அகன்ற இதன் அடிப்பகுதியில் இடது வலது பக்கங்களை நோக்கிய முகமும் பிளந்த வாயும் உடைய மகரங்கள் அமைந்திருக்கும். இவ்விரு மகரகள் சேரும் நடுவிடத்தில் இலைக்கருக்கு அல்லது மணிவடங்கள் தொங்கி இவ்விணைப்பை அழகுடையதாக செய்யும். பூரிமத்தின் நடுவில் நீலம் , பச்சை, அல்லது சிவப்பு கல் பதிக்கப்படும். அதைச்சுற்றி அமையும் கருக்கு வேலைப்பாடுகள் மணியை உள்ளடக்கி இருக்கும். மேற்புரத்தில் சம்பங்கி பூக்கள் தலைகீழாகவும் செங்குத்தாகவும் தைக்கப்பட்டிருக்கும். ஐந்து அல்லது ஏழு பூக்கள் அரசிலை வடிவத்திற்குள் அமையுமாறு பொருத்தப்படும். பூக்களின் தலையிலிருந்து அதனதன் மையத்தில் மணி வடங்கள் அலங்காரமாய் தொங்கும்.

இவ்வமைப்பு மகர பூரிமம் எனப்படும். இதேபோல் பத்ர பூரிமம் என்றொரு அணிகலனும் உண்டு. இப்பூரிமங்கள் ... மகுடத்திலும் நெற்றிக்குத் திலகம் போல் அமைந்து அழகூட்டும்.

சிரசச் சக்கரம்.



சக்கரம்போன்ற அமைப்பான முடியின் பின்புறத்தில் பொருத்தப்படும் ஒரு அணி. சிரசசக்கரம் 8 , 12, 16 ஆரங்களை கொண்டிருக்கும். சூரியகதிர்கள் போன்று மையத்திலிருந்து விரிந்து, நீண்டு, வட்டத்திற்குள் அமைந்திருக்கும். சக்கரத்தின் மையத்தில் மூன்று அல்லது ஐந்து மணிச்சரங்கள் தொங்கும்.. இச் சிரச்சக்கரம் படிமத்தின் பின்னழகைக் கூட்டும்.

ஜடா மகுடமானது சிவன், பிரம்மன், ஞானசரஸ்வதி, முனிவர்கள் மற்றும் சிவனின் அம்ச மூர்த்திபடிமங்கள் ஆகியோர்களுக்கு உரியதாகும். இம்முடியானது ...யோகம், முதிர்ந்த ஞானம், வயது முதிர்ச்சி ஆகியவற்றை உணர்த்தும்.

## 02 ஜடா பாரம்.





தலைக்கோலகளில் கீழ்காணும் கோலங்கள் சிறபநூல்களில் இடம் பெறவிலை.. இருந்தும், தமிழகச்சிற்ப படிமங்களில் இத்தலைக்கோலங்கள் பயன்பட்டுள்ளன. தலையின் இருபுறங்களில் திரிசடையும், சுருள்சடையும் அடர்த்தியாகவும், அழுத்தமாகவும் தொங்கியமைந்த தலைக்கோலம் ஜடா பாரம் எனப்படும்.





தலையில் உள்ள கேசமானது சுருள் சுருளாகவும் திரிசடைகளாகவும் தலையின் பின்பக்கத்திலும் முகத்தின் இருபக்கங்களிலும் தொங்கியமையும்.. ஜடைகள் பளுவோடும் காடு போன்றும் அடர்த்தியாக தொங்கி அமையும். தலை உச்சியிலிருந்து அரை முகம், முக்கால் முகம் அல்லது ஒரு முக அளவில் உயர்ந்து இரு பக்கங்களிலும் விரிந்து தோள்மட்டம் வரை தொங்கியிருக்கும். தலை மட்டத்தில் சடையின் மையத்தில் மகரபூரிமம் அமைந்து அழகுப்படுத்தும்.

சிவனுக்குரிய ஜடா பாரத்தில் பிறைச்சந்திரன், கங்கை ஆகிய சின்னங்களும் இருக்கும். மேலும் ஒரு அமைப்பாக. விரிந்து தொங்கும் ஜடாபாரத்தை தலையுச்சியில் பூரிமத்தை பொருத்தி தலை மேல்மட்டத்திலேயே சடைகள் இருபுறமும் பிரிந்து சரிந்து தொங்குவது போலும், சடை நுனியில் சுருள் கேசங்கள் அமையுமாறும் இருக்கும். தலை உச்சியில் நடுவிலிருந்து இருபக்கங்களிலும் பிரிந்து

தொங்கும் சடைகளைக் கட்டியமைத்தும் இருக்கும். பிஷாடனர், தஷிணாமூர்த்தி படிமங்களில் சிறப்பாக அமைந்திருக்கும்.

## 03 ஜடா மண்டலம்.







தலையின் பின்னனியில் திரிசடைகளை வட்டமாக மண்டலமாக அமைப்பின் ஜடாமண்டலம் எனப்படும். முக அகலத்தைப்போல் மூன்று மடங்கு விட்டமுடைய வட்டமாக இருக்கும். ஓரங்களில் கேசங்கள் திரித்து சுருட்டிவிடப்பட்டிருக்கும். கங்கை, பிறைச்சந்திரன், ஊமத்தைமலர், நட்சத்திரம், இருக்கும். இந்த ஜடாமண்டலம் தலையின் பின்புறத்தில் முடியப் பெற்றிருக்கும். அலங்கார நாடாக்கள், முத்துச்சரங்கள் காதோரம் தெரியுமாறு இருக்கும். மேலும் இந்த ஜடா மண்டலமானது தலைக்கு நேர்மேலே வகுடு எடுக்கப்பட்டு இருபுறம் சரிந்து விளங்கும் நிலையிலும் காட்டப்படும்.





மற்றொரு அமைதியில் ஜடாமண்டலமானது வட்டவடிவமாகவும் வட்டத்தின் ஓரத்தில் திரிசடைகள் குழல் போல் சுருண்டு அமையும்..தஷிணாமூர்த்தி மற்றும் பிஷாடனர் மூர்த்தத்தில் காணலாம். கஜசம்ஹார மூர்த்தத்திலும் காணப்படும்.

## 04 ஜடாபந்தம்





சடைகளை பந்து போல் சுருட்டி தலை உச்சியில் விளங்கச் செய்வது இக்கோலம். தலையுச்சியிலிருந்து ஒரு முக உயரத்தில் இது பெரும்பாலும் அமையும். முனிவர்களது தலைக்கோலமாக அமையும். காஞ்சி கைலாசநாதர் ஆலய, கிராட - அர்ஜூனா படிமத்தில் கிராட( வேடுவர்) படிமத்தில் இத்தலைக்கோலம் அமையும்.


## 05 சர்ப்ப மௌலி





பாம்புகளை சடைகளாக பின்னி தலையில் பாகையாகச் சுற்றி அமைந்த சிறப்பான தலைக்கோலம். ரிஷபாந்திக சிவமூர்த்தத்தில் இத்தலைக்கோலம் அமையும்.

## 06 விரிசடை.





திரிசடைகள் தலையின் பின்புறத்திலிருந்து பிரிந்து தலையின் இரு மருங்கிலும் வீசி விரிந்து எழிலுற அமைந்த சடை விரிசடை ஆகும்.இதை வீகீர்ண ஜடை என்றும் கூறுவர். நடராஜர் படிமத்தில் காணலாம். விரிசடைகள் 5 ,7 ,8 அல்லது 9 சடைகளாக இருக்கும். சடைகள் ஒவ்வொன்றும் சிறுவிரல் கனமுடையதாக இருக்கும். திரிசடைகளுக்கிடையே மணிகள் கோர்த்த பூச்சரங்கள் இருக்கும். கங்கா தேவியின் உருவமும் இருக்கும். மூன்று அல்லது ஐந்து வரிசைகளைக் கொண்ட பூச்சரங்களால் சடைகள் பிணைக்கப்பட்டிருக்கும்.





## 07 சுடர்முடி.


தலையின் பின்புறத்தில் கேசத்தை தீச்சுடர்போல் அடுக்கடுக்காய் மேல்நோக்கி ஒரு சீராக அமைந்திருக்கும். அரசிலை தோற்றத்தை ஒத்திருக்கும். இவ்வமைப்பிற்கு " அக்னி கேசம் " என்றும் பெயர் உண்டு. உக்கிர சக்திகள் படிமத்திலும், காளி தேவி வடிவத்திலும் இவ்வமைப்பைக் காணலாம்.




## 08 கிரீட மகுடம்.







கிரீட மகுடம் என்பது மணிமுடியாகும். இதன் தோற்றம் பூஜை மணியை ஒத்திருக்கும். இரத்தினப்பட்டம், பூரிமம், மகுடம், ஆகிய பகுதிகளைக் கொண்டது. மகுடத்தின் உச்சியில் தாமரை மொட்டு இருக்கும். முக உயரத்தால் மகுட உயரமானது

ஒன்றரை அல்லது இரண்டு அல்லது இரண்டரை பங்காக இருக்கும். நான்கு பூரிமங்களும், திரண்டபகுதியில் அலுங்கு எனப்படும் செதில்கள் போன்ற மலர் அணிளை உடையதாகவும் , பிரம்பணியில் சுற்றிலும் முத்துக்கள் அல்லது மணிகள் பதிக்கப்பெற்றதாகவும் இருக்கும். மகுடத்தின் பின்புறம் சிரச்சக்கரம் அமையும். இத்தகைய கிரீட மகுடம் அரசர்களுக்கும்.. ஆட்சிக் கோலத்திலுள்ள சக்தி படிமத்திற்கும் சிறப்பாக கிரீடமகுடம் விஷ்ணு படிமத்திலும் அமையும்.





பொதுவாக ஜடா மகுடம் சிவனுக்கும், கிரீட மகுடம் விஷ்ணுவுக்கும் அமையும். சிவனும் விஷ்ணுவும் சேர்ந்து ஒரு மூர்த்தம் ஒன்றுள்ளது. ஹரிஹரன் என்று பெயர்.. இதற்கு மகுடம் எவ்வாறு இருக்கும்..? ஜடா மகுடமும் கிரீட மகுடமும் இணைந்தே இருக்கும். ஹரிஹரர் மூர்த்தத்தில் சிவன் ஜடாமகுடத்துடன், விஷ்ணு கிரீட மகுடத்துடன் .. இரண்டும் இணைந்து ஒரே மகுடமாக காட்சியளிப்பார்கள்.. காஞ்சி கைலாசநாதர் ஆலய ஹரிஹரர் மற்றும் பதாமி ஹரிஹரர் .. சிறப்பான வடிவங்களாகும். பதாமி ஹரிஹரர் படிமத்தை நன்கு உற்று நோக்கி ஜடா மகுடம் மற்றும் கிரீடமகுடம் இரண்டையும் ஒரே மகுடத்தில் அடையாளம் காணவும். படத்தை நன்கு பாருங்கள்... சிவனின் பக்கம் ஜடா மகுடமாகவும், விஷ்ணுவின் பக்கம் கிரீட மகுடமாகவும் இருக்கும்..

## 09 சிரஸ்திரகம் .






இது தலைக்கு பாகையாகக் கருதப்படும் ஒரு வகை தலைக்கோலம். கேசமானது நீர்க்குமிழ்கள் போல் சுருட்டப்பட்டு சீராக அலங்கரிக்கப்படும். தலை உச்சியில் கேசத்தாலான கொண்டையும் குமிழிகள் போன்று அமைந்திருக்கும். இத்தலைக்கோலத்தை புத்தர் படிமங்களில் காணலாம்.

## 10 குந்தளம்.





இது சக்தி படிங்களுக்குரிய தலைக்கோலம். கூந்தலை அள்ளி கொண்டை போட்டு தலைமேல் அழகாக அமைக்கும் ஒரு தலைக்கோலம். இக்கோலம் தலைக்கு நேராகவோ, பக்கவாட்டில் சாய்ந்தோ அமையும். குழந்தை கண்ணன் மற்றும் ஆண்டாள் படிமத்தில் இக்கோலத்தைக் காணலாம்.

## 11 தம்மில்லம் ( தமிழம்)







முடியை முறுக்கி, கொடியாக்கி வளைத்துத் தலையின் பின்னணியில் சேர்த்தமைத்து தலை உச்சிக்கு மேல் தெரியுமாறு சேர்த்து கட்டி அமையும் கோலம் தம்மில்லமாகும். இது தமிழக பெண்களிடையே வழக்கிலிருந்து வந்த தலைக்கோலமானதால் தமிழம் என்று பெயர் பெற்றது. சீதை, ருக்மணி, சத்தியபாமா ஆகியோர் படிமங்களிலும், சிவனடியார் துணைவியர் படிமங்களிலும் காணலாம்.

## 12 அளக சூடம்.







குழல், கேசத்தால் அமைக்கப்படும் ஒருவகை நெற்றியளங்கார வகையைச் சேர்ந்த மகுட அமைப்பாகும். இதற்கு " சிரச்சூளம் " என்றும் ஒரு பெயர் உண்டு.

## 13 கரண்ட மகுடம்.



தேன் கூட்டுக்கு கரண்டம் என்று பெயர். படத்தில் உள்ளது போல்.. மூன்று அல்லது ஐந்து அடுக்குகள் மேற்பகுதியில் கொண்டதும், குழாய்போன்ற கீழ்பகுதிகளோடு இணைக்கப்பட்டதும் நான்கு பூரிமங்கள் தைக்கப்பட்டும் சிகரத்தில் தாமரை மலரை ஒத்த சிகாமணியை உடையதும் கரண்டமகுடமாகும்.

நெற்றியில் மணிவடங்கள் தொங்குகிற ரத்தன பட்டத்தைக் கொண்டது. கரண்டத்தைச் சுற்றி முத்துக்கள் வரிசையாக இருக்கும். இதற்கு சரரத்தின கீரிடம் என்ற பெயரும் உண்டு. பட்டமும் மகுடமும் இணைக்கப்பட்டிருக்கும். தேவிபடிமங்கள், முருகன், ராமன், விநாயகர் படிமங்களில் சிறப்பாக அமைந்திருக்கும்.

# 05. அணிகலன்கள்.. ஆபரணங்கள்...

சிற்பங்கள் அறிவோம்..

சிற்பங்களில் காணப்படும் ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியே பிரித்து, அதன் அமைப்பு, பொருள், தத்துவம் என்று பார்த்து வருகிறோம். கடந்த பாடங்களில்.. சிற்பங்களில் கையமைதி, முத்திரை, ஆசனம், மகுடங்கள் என்று பார்த்தோம். இன்றையப் பாடப்பகுதியில் சிற்பங்களில் காணப்படும் அணிகலன்கள் பற்றிய விபரங்களைப் பார்க்கிறோம். ஏதேனும் ஒரு சிற்பத்திற்கு விளக்கவுரை ஒன்றை நீங்கள் படிக்க நேர்ந்தால்.. இவ்வாறு எழுதுவார்கள்.

"கரண்ட மகுடத்துடன் மேல் வலது கை கடகமுத்திரையுடன், வீராசனத்தில் அமர்ந்து இடது காதில் பத்ர குண்டலம், கழுத்தில் கண்டிகை மற்றும் சரப்பளி அணிந்து, இடுப்பில் சிம்மமுகத்துடன் கூடிய அரைப்பட்டிகை அணிந்துள்ளார். "

இதில் வரும் கரண்ட மகுடம், வீராசனம்,கடக முத்திரை, இவைகளைப்பற்றி நன்கு பார்த்துவிட்டோம்..பத்ர குண்டலம், கண்டிகை , சரப்பளி, அரைப்பட்டிகை... இவைகள் என்ன என்பதைத்தான் இன்றைய " ஆபரணங்கள் " பாடப்பிரிவில் பார்க்க இருக்கிறோம்..


ஆபரணங்கள் என்பது நம் பழந் தமிழர்களின் பெருமை. சங்க கால தமிழர்கள் பல்வேறு ஆபரணங்கள் அணிந்து ஒரு உச்ச நாகரிக வாழ்வை வாழ்ந்துள்ளனர். இதை மெய்பிக்கும் வகையில் ஏராளமான சங்க இலக்கியப்பாடல்கள் உள்ளன. சிலப்பதிகாரத்தில் மணிமேகலையைப் பற்றி கூறும்போது.

"தெய்வ உத்தியொடு செழுநீர் வலம்புரி
தொய்யகம் புல்லகம் தொடர்ந்த தலைக்கணி
மையீர் ஓதிக்கு மாண்புற அணிந்து "

தெய்வ உத்தியோடு வலம்புரி சங்கு அணிந்து, தொய்யகம், புல்லகம் என்னும் ஆபரணங்களை தலைக்கோலம் மாண்புற தலையில் சூடி, தொய்யகம், புல்லகம், என்னும் ஆபரணங்களை மணிமேகலை சூடியுள்ளார்.. இதே பெயர் கொண்ட ஆபரணங்கள்தான் சிற்பங்களிலும் பயின்று வருகிறது. சிற்பம் ஒன்று முழுமை பெற்று அழகுடன் இருப்பதில் ஆபரணங்களின் பங்கு இன்றியமையாதது. அந்த ஆபரண அணிகலன் பற்றியே நமது இன்றைய பாடமும் தொடங்குகிறது. தலையணி, கழுத்தணி, தோள் வளை, இடையணி, கை அணி, கால் அணி, என்று பார்க்கிறோம்..

( இப்பகுதி பாடங்களுக்கு சிறந்த புகைப்படங்களை வழங்கிய....
Dr. பொன்னம்பலம் சிதம்பரம்.
திரு.வேலுதரன்.
திரு. ச. இராசவேல்.
திரு. முத்துக்குமார்.
திரு. விஜய்

திரு. aijiraaj
திரு.பாபு ( பல்லவதேசம்) மற்றும்
திரு . மது ஜெகதீஷ் அவர்களின் இணையப்பக்கம்.
அனைவருக்கும் நன்றிகள் பல. 🙏




மகளிர் அணிகலன்கள்

1 வலம்புரிச் சங்கு
2 புல்லகம் (தென்பல்லி)
3 புல்லகம் (வடபல்லி)
4 பூரப்பாளை
5 தொய்யகம்
6 செவிப்பூ
7 அளகச் சூடம்
8 ஏகதளம்
9 குதம்பை
10 சவடி
11 காறை
12 வாகுமாலை
13 முத்தாரம்
14 தோள்வளை
15 வீரச்சங்கிலி
16 தோள்வளை
17 வாளைப்பகுவாய் மோதிரம்
18 பரியகம்
19 சூடகம்
20 பவழ வளை
21 ஆடைக்கட்டு
22 கடக வளை
23 முத்தரை (விரிசிகை)
24 உடைதாரம்
25 குறங்குச் செறி
26 நூபுரம் (சிலம்பு)
27 பாடகம்
28 குறங்குச் செறி
29 பரியகம்

## தலை அணிகள்..

மூன்று வகைகள் உள்ளன.

1.தொய்யகம்

2.பூரப்பாளை

3.புல்லகம்

இவைகள் மனித படிமங்களுக்கே உரித்தானது. விளக்கு நாச்சியார், நாட்டியபெண் , கொடிப்பெண் ஆகிய படிமங்களில் சிறப்பாக இந்த தலை அணிகள் வடிக்கப்படும்.

### 01 தொய்யகம் .. ( தலைப்பாளை)

தொய்யகம் என்பது, பெண்கள் தலையில் நேர் வகிட்டின் மீது நெற்றியின் எல்லையினின்று தொங்கும் அரசிலை வடிவாகவும், சித்திர வேலைப் பாடுகளுடைய பதக்கம் போன்றும், நடுவில் சிவப்பு மணி பதிக்கப்பட்டதாகவும் இருக்கும். சித்திர வேலைப்பாடமைந்த விளிம்பில் முத்துகள் வரிசையாக இணைக்கப்பட்டு அமையும். இத்தகைய நெற்றி அணி சங்கிலித் தொடர் ஒன்றால் இணைக்கப்பட்டு, அச்சங்கிலியின் மறு முனை தலைக் கோலத்தோடு பொருத்தப்பட்டிருக்கும்.

### 02 பூரப்பாளை ..

சங்கிலித் இணைப்புகள் தொடரின் தென்னம்பாளையைப் போன்றும், பூரான் போன்ற ஒன்றிலிருந்து மற்றொன்று புறப்படுவதுபோல அமைந்து இருக்கும். மேலும், இது நெற்றியின் விளிம்பினைத் தொட்டுக் காதுவரை தொடர்ந்து செல்லும். இச் சங்கிலித் தொடருக்குப் பூரப்பாளை என்று பெயர். இதன் புறத்தோற்றம் பூரானையும், பாளையையும் ஒத்திருப்பதால் இப்பெயர் பெற்றது. நேர் வகிட்டில் தொங்கும் நெற்றிப் பதக்கமாகிற இவ் வணிக்குத் தொய்யகம் என்று பெயர். சீதேவி என்ற பெயருமுண்டு. பூரப்பாளை, தொய்யகத்தின் ஒரு
பகுதியே..

### 03 புல்லகம்

நேர் வகிட்டின் இருமருங்கிலும் தலையில் அணியாகச் சூட்டப்படும் சுட்டிகள் புல்லகம் எனப்படும்.

இவை பிறைச் சந்திரன் வடிவத்திலும், சூரியன் வடிவத்திலும் மணிகள் பதிக்கப்பெற்றும் விளங்கும். இவற்றை சந்திரப் பிரபை, சூரியப் பிரபை என்று கூறுவது வழக்கு. இடப் புறத்தில் பிறையும், வலப் புறத்தில் சூரியன் அமையும். இச் சுட்டிகளைப் பல்லி என்றும் கூறுவர். வலச் சுட்டியைத் தென் பல்லி என்றும், இடச்சுட்டியை வட பல்லி என்றும் சொல்வது வழக்கு. பொதுவாக, இவ்விரண்டு பல்லிகளும் ஒரு சேரப் புல்லகம் என்று பெயர் பெறும். 'புல்' என்பது ஒட்டுதல் என்று பொருள்படும், ஆதலின் இப்பெயர் பெற்றது.

சடையைக் கருநாகம் போன்று நீட்டித் தொங்க விட்ட நிலையிலும், சடையைச் சுருட்டித் தம்மில்லம் போன்று கொண்டையாக அமைத்துக் கொண்ட நிலையிலும், மேலும் இத்தலைக் கோலத்திற்கு அணியாகச் சடைத் திருகு என்ற அணி

சூட்டப்படுகிறது. இது வட்டமாகவும் கற்கள் பதிக்கப்பெற்றும் அமையும்.

### 04 கடிப்பு காதணி.

வட்ட வடிவமானது. தட்டையானது. இரத்தினங்கள் பதிக்கப் பெற்றதுமான காதணி அமைப்பைக் கடிப்பு என்று கூறுவர். இது குதம்பையின் வளர்ச்சி பெற்ற அமைப்பாகும். இதுவே தோடாகும்.







தொய்யகம், புல்லகம், கடிப்பு

தொய்யகம், பூரப்பாளை அணிகலன் அணிந்த அழகிய கொடிப்பெண்கள்.

( Pc.. திரு. மது ஜெகதீஷ்)







தலைப்பாளை என்று சொல்லப்படும் நெற்றி அணி... துவாரபாலகர் படிமங்களில் விசேசமாக வடிக்கப்படும். இவ்வணி துவாரபாலகர் அணிந்துள்ள கிரீடத்துடன் இணைந்து இருக்கும்.

தொய்யகப்பகுதி..

திலக வடிவிலோ அல்லது வட்ட வடிவிலோ இருக்கும். அவ்வட்டத்தினுள், சிவமூர்த்தங்கள், மண்டையோடு, போன்ற வடிவங்களை மிக நுணுக்கமாகச் செதுக்கப்பட்டிருக்கும். உற்றுக் கவனித்தால் மட்டுமே இதை கண்டு ரசிக்க இயலும். திருவொற்றியூர் துவாரபாலகர் படிமத்தில், ஆடவல்லான் மற்றும் கஜ சம்ஹாரமூர்த்தியை கண்டு களிக்கலாம்..

## 05 சூளாமணி (சூடாமணி)*

வட்ட வடிவமானதும், குங்குமச் சிமிழின் மூடி போன்றதும் தாமரைத் தாமங்களையுடைதும், இரத்தினக்கற்கள் பதிக்கப் பெற்றதும், குமிழின் முனையிலிருந்து மணிவடங்கள் கொத்தாகத் தொங்குவதுமான அணியே சூளாமணி என்றும் சூடாமணி என்றும் குடை என்றும் என்றும், சொல்லப்படுவதாகும். இவ்வணி கோணலான தலை கொண்டையில் பொருத்தப் பெற்று தொங்கியசைந்து முகத்திற்கும் அசைவுக்கும் அழகூட்டும். குழந்தைக் கண்ணன் படிமத்திலும், ஆண்டாள் படிமத்திலும் இதனைச் சிறப்பாகக் காணலாம்.

# காதணிகள்...

குழை, குண்டலம். சிற்பங்களின் காதுகளில் பல்வேறு வகையான குண்டலங்கள் அணியாகக் காணப்படுகின்றன. இவைகள் கூறும் தத்துவத்தை பிறகு விரிவாக பார்ப்போம். இன்றையப் பாடப்பகுதியில் சிற்பங்களில் காணப்படும் குண்டலங்களின் வகை மற்றும் அமைப்பை பார்த்துவிடுவோம்.

**பத்ர குண்டலம்..** நன்கு வளர்ந்த காதுகளில் பனையோலை சொருகப்பட்ட குண்டலம்.








**மகர குண்டலம்..** வளைந்த மீனின் வடிவம் அல்லது முதலை வாய் மீனின் உடல் போன்ற அமைப்பு.

**சர்ப்பக் குண்டலம்..** இதை வியாழக்குண்டலம் மற்றும் அரவக்குழை என்றும் அழைப்பர். பாம்பு வடிவத்தை குண்டலமாகக் கொண்டிருக்கும்.








**சிம்ம குண்டலம்..** சிம்ம உருவத்தை காதுகளில் குழையாக இருக்கும். மேலும், விருத்த குண்டலம், ருத்திராட்ச குண்டலம், பிரேத குண்டலம், தாடங்கம் என்னும் வகைகளும் உள்ளன.



காதணிகள் |காதுகளில் பூட்டப்படும் அணிகள் பல. அவற்றில் குதம்பையும், குழையும் முக்கியமானது

## 01 குதம்பை

வளர்த்துத் தொங்கும் காது துளையில் சுருட்டப்பட்ட பனை ஓலையை நுழைத்து, காதுக்கு அணியாகச் செய்யும் பனையோலைச் சுருளே குதம்பை எனப்படும். இது பனையோலை குண்டலம் அல்லது பத்ரகுண்டலம் எனப்படும். பொதுவாக பெண் படிமங்களில் இவ்வமைப்பு இடம் பெறும். சிவனின் இடப்பாகம் உமையவளுக்குரியதால், சிவ மூர்த்தங்களில் பெரும்பாலும் இடது பக்கம் பத்ர குண்டலம் காணப்படும..

## 02 குழை

குழை எனப்படும் குண்டலங்கள்...
மகர குண்டலம் என்றும், சிம்ம குண்டலம் என்றும், வியாழ குண்டலம் என்றும் மூன்று வகைப்படும்.

மகர மீனை வளைவாக அமைத்துக் குழையாக அணிவது மகர குண்டலம் எனப்படும். இஃது 2.4 அல்லது 5 விரல் அகலம் இருக்கும்.

வியாழமாகிய பாம்பினை வளைத்துக் குழையாக்கியது வியாழ குண்டலம் எனப்படும்.

காது துளையில் வளையம் ஒன்றினை வைத்து அடைத்து வளையத்தின் மையத்திலிருந்து சிம்மம் வெளிவருவது போல் அமைக்கப்படும் குண்டலம் சிம்ம குண்டலம் என்று சொல்லப்படும்.

உருண்டை வடிவமானதும், வளையம் பொருத்தப்பட்டதுமான அணி , விருத்த குண்டலம் எனப்படும். இது வாழைப்பூ, தாமரை மொட்டு ஆகிய வடிவில் இருக்கும்.

உருத்திராட்சமும் குண்டலமாக காதில் இருக்கும். இவை எளிமையான காதணிகள் ஆகும். உலோகத்தால் ஆன குண்டலத்தை அனுமன் படிமத்திலும் உருத்திராட்ச குண்டலத்தை (6முகங்கொண்ட) முருகன் காதிலும் காணலாம்.

காதில் தாடங்கம் என்ற தோடு பெண்வடிவங்களில் இருக்கும்.





















## 03 ஸ்படிக குண்டலம்



## 04 பிரேத குண்டலம்..





சற்று உக்ர படிமங்களில் இக்குண்டலம் காணப்படும். மண்டையோடுகள், பிணங்கள், இவற்றை குண்டலமாக அணிந்த காளி மற்றும் உக்ர படிமங்களைக் காணலாம்.. காதுகளில் பிரேதங்களை குண்டலமாக அணிந்த சாமுண்டி மற்றும் திருவலஞ்சுழி ஏகவீரி.




புல்லாக்கு, எடத்தட்டு, இவைகள் கல்வெட்டுகளிலும் இதே பெயரில் வருகிறது.

# கழுத்தணிகள்...

அனைத்து வகைச் சிற்பங்களும் மிக அழகான கழுத்தணிகளைக் கொண்டு அமைக்கப்படுகின்றன.. கழுத்தணிகள் என்றால் கழுத்தில் அணியப்படும் ஆபரணங்கள். ஆரம்பகால சிற்பங்களில் கழுத்தணிகள் சற்று எளிமையாகவும், பிற்கால சிற்பங்களில் அலங்காரமாகவும் இருக்கும். ஹோய்சாலர் கலை வடிவங்களில் மிகுந்த நுண்ணிய வேலைப்பாடுகளுடன் கழுத்தணிகள் அமைக்கப்பட்டன.. பொதுவாய் ஒரு மூன்று கழுத்தணிகள் சிற்பங்களில் பெரும்பாண்மையாகக் காணப்படும்.

1.. கண்டிகை. ( கழுத்தை ஒட்டிய ஆபரணம்)

2.சரப்பளி ( அளவில் சற்று பெரியது. சிறப்பானது. தற்கால நெக்லஸ்.

3. சவடி.. ( கண்டிகைக்கும், சரப்பளிக்கும் இடையே அமைவது.)

இவைகளின் அமைப்பு மற்றும் விளக்கத்தை இன்றையப் பாடப்பகுதியில் பார்ப்போம்.

( இன்றைய பாடங்களுக்கு புகைப்பட உதவி.
திரு மது ஜெகதீஷ்.
திரு. ரமேஷ் முத்தையன்.
திரு. பொன்னம்பலம் சிதம்பரம். )













கழுத்தணிகள்..

கழுத்தில் அணியும் அணிகளில்... கண்டிகை, சவடி சரப்பளி, மணியாரம்,








முத்தாரம் ஆகியவை முக்கியமானவை.

## 01 கண்டிகை

கழுத்தை ஒட்டியவாறு பருமணி ஒன்றும், இருமருங்கிலும் சிறுமணிகள் 2,4,6 கொண்ட முறுக்கு நூலாலாகிய சரட்டிற்குக் கண்டிகை என்று பெயர். பருமணியானது நீண்டு கடுக்காய் போலும் இருக்கும். பருமணி அடிக்கழுத்திலுள்ள தொண்டைக் குழியில் அமைய சிறுமணிகள் அச்சரட்டின் இரு மருங்கிலும் அமைந்து விளங்கும். இதனைச் சரட்டுக்கவடு என்று கூறுவர். உட்கழுத்தில் அஃது அணியப் பெறுவதால் உபக்கிரீவம் எனவும் கூறப்படும். இதுவே பெண் படிமங்களில் முறுக்கிய நூலாகவும் இருக்கும்.

## 02 சவடி

கண்டிகை அல்லது சரப்பளியை ஒட்டியவாறு கழுத்தைச் சுற்றி தட்டையாக விளங்கும் அணி சவடி எனப்படும். மெல்லிய தங்கக் கம்பிகளால் நெருக்கமாகப் பின்னப்பட்டதாயும். அடிப் பக்கம் தட்டையாகவும், மேற்பக்கம் நடுவில் மேடுடையதாகவும் இச்சவடி அமையும். இதன் நடுவில் பூக்கருக்கு வேலைகள் அமைந்த முகப்புப் பொருத்தப்பட்டிருக்கும். பூக்கருக்குகளை இச்சவடியில் இணைத்தும்

விட்டு விட்டும் அழகுபடுத்தப்படும்.

## 03 சரப்பளி

(இன்று வழக்கத்தில் உள்ள நெக்லஸ்.)

கழுத்தணிகளில் பெரியதும், அகன்றதும், சிறப்பானதுமான அணி இஃதாகும். மூன்று அல்லது நான்கு விரல் அகலம் கொண்டு இவ்வணி அணையும். பொன்னாலான இவ்வணியில் நவமணிகள் பதிக்கப்பட்டு இருக்கும். மேற் புறத்திலும், அடிப்புறத்திலும் சிற்ப சித்திர வேலைகள் நிறைய அமைந்து சிறப்பிக்கும். மேல் வரிசையில் முத்துவடம் இதனை ஒட்டி அமையும்.

கீழ்ப் புறத்தில் வரிசையாக அரசிலை வடிவங்கள் அமையும். நடுவில் மணிகள் பதிக்கப்பட்டும் மேலும் கீழும் இதழ்களோடு கூடியதாயும் இரண்டு விரல் அகலமும். ஆறு விரல் நீளமுள்ள முகப்பை உடையதாயும், பொன் வடத்தினால் அல்லது கயிற்றால் இழுத்துப் பிணைக்கப்பட்டதாயும் இருக்கும். பெரும்பாலும் ஆண் படிமங்களுக்குச் சிறப்பான அணியாகும். இதனை கிரைவேய ஹாரம் என்றும் சொல்வதுண்டு.







## 04 அரும்பு சரம்

ஒரு சரட்டில் முல்லை அரும்புகளைக் கோவையாக அமைத்துக் கழுத்தில் அணிவது அரும்புச்சரம் எனப்படும். இது கண்டசரம் என்றும் சொல்லப்படும். அரும்புகளை நீண்டனவாகவும், வாகவும் செய்யலாம். இது நீளம் குறைந்தன சரப்பளிக்கு மாற்றாக, சரப்பளி அணியும் இடத்தில் அமையும்.



மேற்கண்ட மூன்று அணிகளுடன்.. மேலும் சில கழுத்தணிகள் சிற்பங்களில் அமைந்து அழகுக்கு அழகூட்டும். இன்றைய வழக்கத்தில் உள்ள

" ஆரம் "

என்னும் கழுத்தணிகளும் சிற்பங்களில் இடம் பெறும்.. சரபப்பளி( நெக்லஸ்) அணியுடன் இந்த ஆரமும் இணைந்து எழிலுடன் அமைக்கப்படும்.. பொதுவாய் இரண்டு வகை ஆரத்தை சிற்பங்களில் பெருதும் வடிப்பார்கள்..

சற்று நீளமாய் இருப்பது

" முத்தாரம் "

முத்தாரத்தைவிட சற்று உயரம் குறைவாய் இருப்பது....

" மணியாரம்."







## 05 மணியாரம்

இது கழுத்தை சுற்றி நெஞ்சுக்குழி வரைத் தொங்கும் மணிமாலை. மூன்று அல்லது ஐந்து வடங்களைக் கொண்டிருப்பின முறையே திரிசரி. பஞ்சசரி என்று

சொல்லப்படும். ஒரே வடமாயின் ஏகாவலி என்று சொல்லப்படும்.

## 06 முத்தாரம்

மூன்று, ஐந்து, ஏழு முத்து சாரங்களால் ஆன மாலைக்கு முத்தாரம் என்று பெயர். இது கழுத்திலிருந்து கொப்பூழ் வரை தொங்கும்..









கண்டிகை, சரப்பளி, மணியாரம், முத்தாரம், நான்கும் அணிந்த ஓர் அமைப்பு...



சிற்பங்களில் காணப்படும் பல்வேறு ஆபரணங்களின் வேலைப்பாடு, வடிவம், அளவு.. இவற்றின் அடிப்படையிலேயேதான் தற்காலத்தில் ஆபரணங்கள் செய்யப்படுகின்றன..















## 07 கௌஸ்துப மணிமாலை.




அலங்கார மற்றும் ஆபரண பிரியரான விஷ்ணுவுக்கே உரிய பிரத்யோக ஆபரணங்கள் இவை... விஷ்ணு மூர்த்தியின் கழுத்தில் அணிவிக்கப்படும் மாலை கௌஸ்துப மணிமாலை என்று சொல்லப்படும். இது மூன்று, ஐந்து அல்லது ஏழு சரங்களைக் கொண்டது. மையத்தில் கௌஸ்துபம் என்ற மணியைக் கொண்டு திகழும் . கௌஸ்துப மணியென்பது பொன்னாலான பதக்கத்தின் நடுவில் பதிக்கப்படும் மாணிக்கக் கல் ஆகும். இதனைத் திருப்பாற்கடலிலிருந்து பெற்றதென்பர். இப் பதக்கத்தை சுற்றிலும் பொன்னாலான இதழ்களில் புஷ்பராகக் கல் பதிக்கப்பட்டிருக்கும். இலை, கொடி, கருக்கு விளை முற்றிய தலைப்பும், மருங்கும் அமைந்து விளங்கும்.

## 08 வனமாலை...




வனமாலை, வைஜயந்தி என்ற இருவகை மாலைகள் விஷ்ணுவின் கழுதையும் மார்பையும் அலங்கரிக்கும் ஆரங்களாகும். வணமாலையானது பல பருவங்களில் பூக்கும் பூக்களாலானது. அப்பூக்கள் மாலையாகத் தொடுக்கப் பெற்று, கதம்பப் பூப்பந்தமும் நடுவில் குச்சமாகப் பொருத்தப் பெற்றுத் தொங்கும். இத்தகைய மாலை கழுத்திலிருந்து முழங்கால் வரை தொங்கும். கொத்து ஒன்றுக்கு ஐந்து மணிகள் வீதம் பலமணிக் கொத்துகளால் ஆன மணி மாலையே வைஜயந்தி எனப்படும் முத்து, மாணிக்கம், மரகதம் நீலம், வைரம் ஆகிய மணிகள் சேர்ந்திருக்கும் என்று ஒரு சாராரும், நீலம், முத்து, கௌஸ்துபம் கோமேதகம், புஷ்பராகம் ஆகிய ஐந்து மணிகளே அவை என்று மற்றொரு சாராரும் கூறுவார்கள். நிலத்தை நுலமும், நீரை முத்தும். நெருப்பை கௌஸ்துபம் காற்றை கோமேதகமும் ஆகாயத்தை புஷ்பராகமும் குறிப்பிடும் என்று விஷ்ணு ரகஸ்யம் என்ற நூல் பேசுகின்றது. பஞ்ச பூதங்களைத் தன் மேனியில் மணியாரமாகக் கொண்டு விஷ்ணு விளங்குகிறார் என்ற தத்துவக் குறிப்பினை இஃது உணர்த்தும்,

கழுத்தினடியிலிருந்து. சரிந்த தோளின் மீது பல்வகைப் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட மாலைகள், படிமங்களில் சூட்டப்பெறும். அம் மாலைக்கு ஸ்கந்த மாலை என்று பெயர், தோள் மாலை என்பது இதன் பொருள்.

திரண்ட புயங்களைச் சுற்றித் தொங்கும் மாலை வாகு மாலை என்று சொல்லப்படும். இதனைப் பல பூச்சித்திர வேலைப்பாடு அமைந்ததாகவும், முத்துகள் பதிக்கப் பெற்றதாகவும் அமையும்..

மேல்மத்தூர் நாரயண பட்டத்ரி என்னும் வைஷ்ணவ அடியார்.
இவர் தான் எழுதிய. ஸ்ரீமத்நாரயணீயம் என்னும் நூலில்.. பெருமாளின் திரு உருவை இவ்வாறு கூறுவார்..

"குருவாயூரப்பா!..சூரியனை விடவும் பல மடங்கு ஒளி வீசும் கிரீடம், நீண்ட திலகம் பிரகாசிக்கும் நெற்றி, கருணையை மழையெனப் பொழியும் விழிகள், புன்னகையின் உல்லாசம், அழகு வாய்ந்த நாசி, செவிகளிலிருந்து நீண்டு, கன்னங்களைத் தொட்டு,பிரகாசிக்கும் அழகான மகர குண்டலங்கள், கழுத்தில் ஒளி வீசும் கௌஸ்துப மணி, திருமார்பை அலங்கரிக்கும் வனமாலை(வைஜயந்தி), முத்து மாலை, மற்றும் ஸ்ரீவத்ஸம்!!.. இப்படியாக உன் திருவுருவை தியானிக்கிறேன்..".

( நன்றி... திரு.பார்வதி ராமச்சந்திரன்)

## 09 யவை மாலை

நெல்லைக் கோர்த்தது போல் அமையும் ஆபரணம் யவை மாலை



# மார்பணிகள்..


சிற்பங்களில் காணப்படும், தலையணிகள் .. காதணிகளைத் தொடர்ந்து.. மார்பணிகளும் சிறப்பானவை.. பொதுவாய் மார்பணிகள் இவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன..

1. வீரச்சங்கிலி என்றழைக்கப்படும் சன்னவீரம்
2. யக்ஞோபவீதம் என்றழைக்கப்படும் பூணூல்
3. ஸ்தன சூத்திரம்
4. உரஸ் சூத்திரம்
5. உதரபந்தம்
6 . உத்தரியம்

இன்றையப் பாடப்பகுதியில் பயன்படும் புகைப்படங்களின் உரிமை..
திரு. மது ஜெகதீஷ்.
Dr. பொன்னம்பலம் சிதம்பரம்.
திரு. பராந்தகன்..
இவர்களுக்கு நன்றி 🙏

வீரசங்கிலி

## 01 சன்ன வீரம்.










கழுத்தைச் சுற்றியும், மார்பணிகளைச் சுற்றியும் உடலின் ஒரு மூலையிலிருந்து எதிர் மூலைக்குக் கு றுக்கே சென்று முதுகிலும் அங்ஙனமே அமைந்த இரு சங்கிலிகளின் பெயர் வீரச் சங்கிலி ஆகும். இச் சங்கிலி ஸ்தனத்திலிருந்து 8 விரல் அளவு கீழே தொங்கிச் செல்லும் இதற்குச் சன்ன வீரம் என்றும் பெயர் உண்டு. இச் சங்கிலிகள் முன்பக்கத்திலும் பின் பக்கத்திலும் ஒன்றையொன்று குறுக்கிட்டுச் செல்லுமிடத்தில் பிணையுண்டும் அமையும். அவ்விடத்திலிருந்து அரசிலை போன்ற பதக்க அணியொன்று தொங்கும். அதற்குத் தூக்கம் என்று பெயர். வீரனாகிய முருகனுக்கு உகந்த அணியாகும். கொற்றவை மற்றும் மகிஷாசுரமர்த்தனி படிமத்திலும் அமையும்.

## 02 **பூணூல் / யக்ஞோபவீதம் .**








இடது தோளிலிருந்து மார்பு வழியாகக் கொப்பூழ் மட்டத்திற்குக் கீழே 2 விரல் அளவில் தொங்கி அங்கிருந்து மேலும் தொடர்ந்து முதுகந்தண்டைக் கடந்து

மீண்டும் இடது தோளில் வந்து இணையும் முப்புரி நூலுக்குப் பூணூல் என்று பெயர். இதன் கனம் 1/8 யவை. வெறும் நூலாகவோ அல்லது துணியாகவோ அல்லது நூலில் முத்துகளைக் கோத்து, முத்துச்சரமாகவோ இது அமையும். வேலைப்பாடுகள் அமைந்த ஆபரணங்களாகவும் இது அமையும்.



நூல்கள் இணையுமிடத்தில் முடிச்சி ஒன்று அமையும். இதனைப் பிரம்ம முடி என்பர். முடிந்த அமையுமிடத்தில் பூசித்திர வேலைபாடுகளை கொண்ட முகப்புப் போன்ற அணி ஒன்றும் இருக்கும்.. பூணூலுக்கு யக்ஞோபவீதம் என்ற பெயரும் உண்டு.

பூணூல் அணிவதன் தத்துவம் பற்றி பல கருத்துகள் உண்டு. பொதுவாக.. மனம், வாக்கு, செயல், இம்முன்றும் தூய்மையாக இருக்கவேண்டும் என்பதை குறிப்பதே முப்புரி நூலின் தத்துவம். முப்புரிநூலை யாரும் அணியலாம் என்பது வேதத்திலேயே உள்ளது என்கிறார்கள். சிற்பங்களிலும் அனைத்து படிமங்களிலும் .. கடவுள், அரசன், ஆண்,பெண், அசுரன், என்று அனைத்து படிமங்களிலும் பூணூல் காணப்படும்.



பூக்கள், அரும்புகள் கோர்க்கப்பட்ட வடிவிலும் பூணூல் சிற்பங்களில் காட்டப்படும்.


துணியால் ஆன பூணூலும் உண்டு.






உக்ரபடிமங்களில் மண்டையோடுகளை மாலை வடிவில் கோர்த்து பூணூலாகக் காட்டப்படும்.

## 03 ஸ்தன சூத்திரம்

முப்பிரிகளையுடைய பூணூலில் இருந்து நான்காவது நூல் ஒன்று வலது மார்பின் கீழ்ப்புறத்தில் தொங்கச் சுற்றி, முதுகுப்புறம் சென்று பூணூலுடன் சேரும். இதற்கு ஸ்தன சூத்திரம் என்று பெயர். இது முத்துச் சரமாகவோ அல்லது நூலாகவோ அமையும். இதனை ஆண், பெண் , இருபாலர் படிமங்களிலும் காணலாம்.




04 உரஸ் சூத்திரம்




பூணூலில் இருந்து வலது புறமாக செல்லும் நூலை ஸ்தன சூத்திரமென்று கண்டோம். அங்கனமே பூணூலிலிருந்து தனித்த ஒரு நூல் நேரே உடலை ஒட்டி இடுப்புவரை தொங்கும். இது உரஸ் சூத்திரம் அல்லது மார்பு நூல் என்று சொல்லப்படும். விஷ்ணு , சிவன், பிரமன் ஆகியோர் படிமத்தில் அமையும்.

## 05 உதர பந்தம்




அரைபட்டிகை.. இடுப்பில் அணிவது.

இது உடலைச் சுற்றிக் கட்டப்படும் அலங்கார கட்டாகும். இது இரு விரலகலம் கொண்டு பட்டிகை போன்று நடு உடலைச்சுற்றி அமையும். இப் பட்டிகையின் விளிம்புகளில் முத்துகள் இணைக்கப் பெற்று, நடு விடத்தில் பூச்சித்திர வேலைப்பாடுகள் அமையும். இதன் மையத்தில் பருமணி பாதிக்கப்படும், மேலும் மணிச்சரங்கள் தாமங்களாகவும் தொங்கும். மேற்கண்ட நான்கு அமைப்புகளும் ஒருங்கே இணைந்து அமையும் சிற்ப படிமங்களும் உண்டு..







## 06 உத்தரியம்







மேலாடை.. ஒரு துண்டு ஒன்றை அணிவது. உத்தரியம் என்பது மேலாடை ஆகும். இது இடது தோளிலிருந்து இடுப்புவரை தொங்கி முதுகுப் பக்கத்தில் தொடர்ந்து வந்தடையும். விசேசமாக மொழிங்கால் வரை வந்தும், வலது கையில் சுருட்டிப்

பிடித்தும் அமையும். இதற்கு மாற்றாக உத்தரீயம் போல் முத்துவடங்களோ அல்லது மணிகளோ அமைத்திருப்பதைச் சிற்பங்களில் காணலாம். இது முத்தினாலான உத்தரியம் ஆனதால் மௌத்தி கோத்தரீயம் எனப்படும்.





இதில் துணியை முறுக்கி அணிந்திருப்பதும் யக்ஞோபவீதம். கேரளத் தந்திரிகள் பொதுவாக பூஜையின் போது அணிவார்கள். ஏறக்குறைய பூணூல் என்பதை ஒரு மேலாடையாகத்தான் சிற்பநூல் வரையறை செய்கிறது.. மெல்லிய நூல் ஆடை பக்ஞோபவீதம்.. தற்று தடிமனான ஆடை உத்திரியம்..

## 07 தோள் மாலை / வாகுமாலை




1. கண்டிகை 2. சரப்பளி (கிரைவேய ஹாரம்) 3. பூணூல் 4. வாகுமாலை
5. சரிந்த தோள்மீது — தோள்மாலை

கழுத்தினடியிலிருந்து. சரிந்த தோளின் மீது பல்வகைப் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட மாலைகள். படிமங்களில் சூட்டப்பெறும். அம் மாலைக்கு ஸ்கந்த மாலை என்று பெயர். தோள் மாலை என்பது இதன் பொருள். திரண்ட புயங்களைச்

சுற்றித் தொங்கும் மாலை வாகு வாகு மாலை என்று சொல்லப்படும். இதனைப் பல பூச்சித்திர வேலைப்பாடு அமைந்ததாகவும், முத்துகள் பதிக்கப் பெற்றதாகவும் அமைக்கலாம்.















இது க்ரிஷ்ணஜின என்னும் ஒரு சிறப்பு வகை யக்ஞோபவீதம்





இது ஒரு வகை கருப்பு மானின் தோல் !



குன்றக்குடி குடைவரை. கருடனுடன் விஷ்ணு. சன்னவீரத்துடன்.

நான் கூறியது.. வழக்கமான பூணூல் அணியும் முறை.. இன்றைய பதிவில் நாம் பார்த்த அனைத்து பூணூல் வகைகளும் உபநிவீதம்..



இடது தோளிலிருந்து வலது கைக்கு கீழ் வராமல் வலது கையின் மேல் .. அதாவது ஒரு நெக்லஸ் வடிவில் வருவது நிவீதம்.. அனந்த சயன பெருமாள்.. மாமல்லபுரம் .. படம் அது நிவீதம்.
பெருமாளும்.. வலப்பக்கம் இருப்பவரும் அணிந்திருப்பது நிவீதம்.

1) **உபவீதம் & நிவீதம் பற்றி?**

இடது தோளில் இருந்து வலது இடுப்பு கைக்கு கீழே வந்தால்.. உபவீதம். இடது தோளில் இருந்து வலக்கைக்கு மேல் வந்தாவ்.. நிவீதம்..

2) பொதுவாக அமங்கல நிகழுவுக்கு தானே பூணுலை திருப்பி அணிவார்கள், இதை பற்றிய குறிப்பு ஏதும் உள்ளதா ?



இவ்வோயியம் பற்றி பல கருத்து வேறுபாடுகள் உண்டு. பூணூல்தான்.. எதிர்மறையாக வரையப்பட்டது என்பார்கள். தூணில் இவ்வோயியத்தை வலப்புறமாக நின்று பார்க்கவேண்டும் என்பார்கள். இது பூணூல் இல்லை. அங்கவஸ்த்திரம் என்பார்கள்.. கருவூர்த்தேவர் என்பார்கள். சனகாதி முனிவர் என்பார்கள்.. ஒருமித்த கருத்து இல்லை.. இவ்வோயியத்தில் இருப்பது என்ன என்று சான்றோர்கள் கருத்திட்டால் நானும் தெளிவுபெறுவேன்.

# தோள் ஆபரணங்கள்.



தலையணி, காதணி, கழுத்தணி, மார்பணி... தொடர்ந்து.. இன்றையப் பாடப்பகுதியில் நாம் காண இருப்பது தோள் அணி. சிற்பங்களின் புஜத்தின் மையத்தில் அமைந்து அழகூட்டும் ஒரு ஆபரணம். தோள்வளை, மாயூரம், வங்கி, என்ற பெயர்களால் அழைக்கப்படும்..

## 01 தோள் வளை..

வங்கி. கேயூரம்.







தோள்வளையென்பது மேற் கையின் நடுவிடத்தில் அணியப்படும் அணியாகும். மேற்புயத்தின் மையத்தில் கத்திரிபோல் ஒன்றையொன்று குறுக்கிட்டுச் செல்லும் முத்துவடம் எளிமையும் தொன்மையும் கொண்டதாகும். இது கம்பியாகவும் அமையும். பிற்காலத்தில் இது வங்கியெனவும் பெயர் பெறுவதாயிற்று. சிற்பங்களில் பல வகைகளில் இவ்வணி காணப்படும். குறிப்பாய் இரண்டு வகை..


மகுடத்தின் முகப்பு அணியான மகர பூரிமத்தை 1,2,3 சுற்றுடைய வளையோடு இணைத்துத் தோள் வளையாக அமைப்பது ஒரு முறை. வளையில் முத்துகள் பதிக்கப்படும். மகரச் சந்தியிலிருந்து வளைமீதும் அதன் கீழும் மணிச்சரங்கள் தாமாகத் தொங்கவிடப்படும். பூரிமத்தின் அகலம். 3.1 அல்லது 5 விரல் ஆகும். இது கேயூரம் எனவும் அழைக்கப்படும். பல வடிவங்களில் சிற்பங்களில் அமையும் தோள் வளைகளை படங்களில் பார்க்க..


பத்ர பூரிமத்தை முகப்பணியாகக் கொண்டு விளங்கும் தோள்வளை...மேற்புறத்தில் முத்துமாலை வளைந்து தொங்கி தோளின் பின் புறத்தில் இணையும். இது பெண் படிமங்களுக்கேற்ற வளையாகும், மகரப் பூரிமத்தை முகப்பாகக்

கொண்ட அழகிய தோள்வளையில் தாமங்கள் அதிலிருந்து தொங்கி அசைந்து மேலும் தோளுக்கு அழகு சேர்க்கும்

பல வடிவங்களில் தோள் வளைகள்..

சிற்பங்களில் இந்த தோள் வளை ஆபரணங்கள் சிறப்பான முறையில் வடிவமைக்கப்படும்.








## 02 கடக வளை












இது முழங்கையில் அணியப்படும் கை வளையாகும். இது மூன்று யவை கனமுள்ள கமபி போன்ற வளையலாகும். இக கம்பியில் மூன்று அல்லது பத்து மணிகள் கோர்க்கப்பட்டிருக்கும். அல்லது கொடிக் கருக்கு வேலைப்பாடுகள் அமைந்த முகப்பும் குஞ்சிதமும்  கொண்டு விளங்கும். ஆண்களுக்கும். பெண்களுக்கும் இது பொதுவான அணியாகும் . இது இரண்டு கைகளிலும் இருக்கலாம். இந்த தோள் வளை என்னும் சிறப்பான அணிகளை பெரும்பாலும் அனைத்துச் சிற்ப படிமங்களிலும் அழகுற வடிக்கப்பட்டிருக்கும்..


# இடை-தொடை அணிகள்

தலையணி, கழுத்தணி, காதணி, தோளணியைத் தொடர்ந்து.. இன்றைய பாடத்தில்.. இடுப்பு அணிகள் பற்றி விபரங்களை காண்போம். ஆண் வடிவங்களிலும், பெண் வடிவங்களிலும் இடுப்பில் பல அழகிய அணிகள் சூட்டப்படுகின்றன. இடையழகை இவை சிறப்பித்துக் காட்டுவதோடு அரையிலணிந்த ஆடைகளை இறுகப் பினைப்பதும் இவற்றின் பணி. சிற்ப வடிவங்களில் இவை மிகக் கவர்ச்சிகரமாகவும், பல்வேறு தோற்றங்களிலும் காணப்படுகின்றன. பெரும்பாலும் சிற்பங்கள் இந்த இடை மற்றும் தொடை ஆபரணங்களைக் கொண்டே அழகு படுத்தப்படும். இடை அணிகளில் மூன்று சிறப்பு மிக்கவை. அவை மேகலை, அரைஞாண், அரைப்பட்டிகை என்பனவாம்.. இம் மூன்றையும் அரை ஞாண் அல்லது கடிசூத்ரமென்று குறிப்பிடுவர்.


## 01 மேகலை..


மேகலை


மேகலையின் பின்புறத் தோற்றம்




மேகலை



முடிச்சு அணி பொருத்திய மேகலை

பெண்கள் அணியும் ஒட்டியானம். இலைக்கருக்கணி அனைத்தும் மையத்தில் மணி பதிக்கப்பட்டதுமான முகப்பு அணியை யோனித்தடத்தை ஒட்டியவாறு அமைத்து முறுக்கிய மூன்று வடங்களால் அதனைப் பிணைத்து. இடுப்பைச் சுற்றிக் கட்டப்படும் இவ்வணி மேகலை என்று சொல்லப்படும். இதனையே முன் ஒட்டியாணம் என்பர். இது மூன்று அல்லது நான்கு விரல் அகலம் கொண்டு அமையும். இது எளிமையான அமைப்பாகும். பெண் படிமங்களுக்கே பெரும்பாலும் இவ்வணி அமையும்.. மேலும், இலைக்கருக்கு முகப்பு அணியை மூன்று வடங்களால் பிணைத்தலில் நடுவடத் தை பட்டிகையாகவும், எஞ்சிய இரு வடங்கள் முறுக்கிய கயிறாகவும் அமையும். மேலும், முன்சொன்ன முறுக்குக் கயிற்றை முத்துவடங்களாகவும் அமைக்கலாம். இது முன்னைய அமைப்பின் வளர்ந்தோங்கிய நிலையாகும். இலை கருக்கு முகப்பு அணிக்கு மாற்றாக கற்பனை நயத்தோடு அமைந்த முடிச்சு ஒன்றைப் பிணைத்துச் செய்வதுமுண்டு முடிச்சையும், முகப்பு அணியையும் சேர்த்தும் இருக்கலாம். முன்புறத்தில் இலைகளுக்கு முகப்பு அணியை அமைப்பது போல், நேர் பின்புறத்திலும் அமையும்.









சற்று வேலைப்பாடுகளுடன் முடிச்சணி, முத்து வடங்கள் கோர்க்கப்பட்ட அலங்கார மேகலை அமைப்பும் படிமங்களில் அமையும்.

## 02 அரைப்பட்டிகை...

அரைக்கச்சு... இடைக்கட்டு..

ஆண் படிமங்களில் இடையணியாக அரைப் பட்டிகை என்ற அழகிய ஓர் அணியை சிற்பங்களில் அமைத்தல் வழக்கு. இவ் வணி 3 அல்லது 4 விரல் அகலம் கொண்டிருக்கும். முன்புறத்தில் நடுவே அமையும் முகப்பு அணி சிம்ம முகமுடையதாயும், அதன் கடையிலிருந்து மடக்கித் தொங்கும் பட்டிகைகள் இரண்டு உடையதாயும் அமைந்திருக்கும். இப்பட்டிகையானது இலை பூக்கருக்கு வேலைப்பாடுகள் அமைந்ததாகவும் வடக்கயிறுகள் இருமருங்கிலும் பொருந்தியதாகவும் இருக்கும். கயிறுகள் முத்து வட மாகவும் இருக்கும். சிம்ம முகங்கொண்ட முகப்பணிக்கு கீர்த்திமானனம் கிருத்திமானனம் - கீர்த்திமுகம் என்று பல பெயர்கள் உண்டு.

















## 03 குரங்கு செறி

அரைப்பட்டிகைக்குக் கீழே ஒன்று, இரண்டு அல்லது மூன்று வடங்களால் ஆனதும், மணிகள் பதிக்கப் பெற்றதும், பூச்சித்திர முகப்பு அணி கொண்டதுமான அரைஞாண் ஒன்றோ அல்லது ஒன்றன் கீழ் மற்றொன்றாக இரண்டோ அணியப்படும்.



இத்தகைய அரை வடத்திலிருந்து முத்துச்சரங்கள் வரிசையாகத் தாமங்களாகத் தொங்கும். இதற்கு 'ஊரு தாமம்' (ஊரு என்றில் தொடை) என்று பெயர். குரங்கு செறி என்பது மற்றொரு (குரங்கு என்றாலும் தொடை) இது தொடையணியாதலால் இப் பெயர் பெற்றது. கவான் என்பது தொடை என்று பொருள்படுமாதலால் அதன் மீது அணிந்த இவ் அணியை 'கவான் செறி' என்றும் சொல்வது வழக்கு. குரங்கு செறியானது தாம வடிவினதாக அமைவுறாமல் சங்கிலித் தொடராக நேரியதாகத் தொங்குமாறும் அமையும்..






குறங்கு செறி.. ஆண், பெண், இரு படிமங்களிலும் வரும்.








## 04 விரிசிகை




இடையில் முத்துவடங்களை அழகிற்காக அணியுங்கால் ஏழுவடம் கொண்டதை மேகலை என்றும், எட்டு வடம் கொண்டதை காஞ்சி என்றும், பதினாறு படம் கொண்டதை கலாபம் (தோகை) என்றும், பதினெட்டு வடம் கொண்டதை பருமம் என்றும், முப்பத்திரண்டு வடம் கொண்டதை விரிசிகை என்றும் பண்டை நூல்கள் கூறுகிறது. இவை சிறு சிறு முத்துக்களைக் கொண்டு கற்றையாக-மொக்கை சோளக் கதிர்போல் அணியப்படும் இடையணி..

## 05 தாரகைச்சும்மை


தாரகைச்சும்மை

தாரகை (நட்சத்திரங்கள் வரிசையாக ஒரு வடத்தில் கோத் து அமைத்தார் போன்ற அரையணியே தாரகைக்சும்மை எனப்படும். இது மேகலை அல்லது அரைப்பட்டிகைக்குக் கீழேவரும் அணியாகும். இதனை எல்லாச் சிறபவடிவங்களிலும் காணலாம்.





சிற்ப லஷ்ணம் என்று பெயர். ஒவ்வொறு சிற்பங்களும் இவ்வாறு இருக்கும் என்று ஒரு அடிப்படை விதிகளை சிற்பநூல்கள் கூறுகின்றன. புராண வரலாற்று கதைகளையும் நாம் அறிந்திருக்கவேண்டும். இதுவரை நமது குழுவில் நடந்த பாடப்பகுதிகள் அனைத்தும் நன்கு நினைவில் இருக்க வேண்டும்.. அப்போதுதான் ஒரு சிற்பத்தை நம்மால் அடையாளம் காணமுடியும். உதாரணமாய் தத்புருஷமூர்த்தியின் சிற்பம் எவ்வாறு இருக்கும்.

நான்கு முகங்கள், நான்கு கை, வலது கை அபயமுத்திரை, வலது மேற்கை பரசு, இடது மேற்கை சுவடி, இடது கை வரதமுத்திரை, கண்டி , சரப்பளி அணிந்து வாகுமாலையுடன், , உரஸ் , ஸ்தன சூத்திங்கள் எதிரெதிர் அமைய, சுகாசனத்தில் கிழக்கு நோக்கி வீற்றிருப்பவர் தத்புருஷமூர்த்தி.. இப்பகுதியில் வரும்.. அபய, வரத முத்திரை, வாகுமாலை, கண்டி சரப்பளி, ஸ்தன, உரஸ் சூத்திரம், சுகாசனம்..

இவைகளைப்பற்றிதான் கடந்த 15 பாடங்களும்.. இனிமேல் சிற்ப படிமக்கோடுகள் என்னும் சிற்பங்களை அடையாளம் காணுதல் என்னும் பகுதியை பார்க்க இருக்கிறோம். இதுவரை நடந்த பாடப்பபகுதிகளை நன்கு அறிந்திருந்தால் மட்டுமே ஒரு சிற்பத்தை அடையாளம் காணமுடியும்..

# கை அணிகள்

சிற்பங்களின் கை அணிகள் வளையல் மற்றும் மோதிரங்கள் அழகுடன் அமைக்கப்படும்.. பொதுவாய் வளையல்கள்..

1. சூடகம்
2 .செம்பொற் கைவளை
3.நவமணி வளை
4.பவள வளை மற்றும்
5 பரியகம்..

கை வளை வளையல்...


மணிக்கட்டுக்கு அருகில் அணியப்படுவது கை வளையல் அடுக்கடுக்காய் அணியப்படும.சிற்ப வடிவங்களில் வளைகளை ஒரே வகையாகவும் பல வகைகளாகவும் இருக்கும். சிறு வளையல்கள் இரட்டையாக அணியப்பட்டிருக்கும். ஒற்றையாக அணியப்படு வளையல் சிறு விரல் கனம் கொண்டு இருக்கும். சிறப்பாக, கை வளைகள் ஐந்து வகைப்படும் அவை முறையே … சூடகம், செம்பொற் கைவளை , நவமணி வளை, சங்கு வனை, பவள வளை ஆகும்.. இவற்றுக்கெல்லாம் பொதுப் பெயர் கடகம் அல்லது வளை ஆகும்.

## 01 சூடகம்

இரண்டு விரல் அகலம் கொண்ட தங்கப் பட்டிகை மீது இலை, கொடி, கருக்கு வேலைப்பாடுகள் அமைத்தும் இரண்டு ஓரங்களிலும் முத்துகளை வரிசையாகப் பொருத்தியும் வேலைப்பாடுகளுக்கு இடையே வைரக் கற்களைப் பதித்தும் அமைந்த கைவளை சூடகம் எனப்படும். இது கைவலைகளில் பெருமதிப்பும், சிறப்பும் கொண்டது.

















## 02 செம்பொற் கை வளை

செம்பொன்னால் செய்யப்பட்ட கைவளை.

நவமணிகள் பதிக்கப்பட்ட கை வளை

## 03 சங்கு வளை

சங்கை வளையமாக அறுத்து வளையல்களாக அணிவது சங்குவளை ஆகும். வளை என்ற சொல்லே சங்கிலிருந்து பிறந்தது.

## 04 பவள வளை

பவளக் கொடியை அதன் கனத்தைப் போல் இரண்டு பங்கு நீளமுடையதாக நறுக்கி, கம்பியில் கோத்துக் கைவளையாக அணிவதுண்டு அல்லது பவளக் கொடியையே வளையாக வளைத்தும் அணிவ துண்டு..


— செம்பொற் கை வளை.








— சங்கு வளை.

05 **பரியகம்**....

வளையல்களின் கீழே உள்ள சூடகத்திலிருந்து தொடங்கி, சங்கிலி போன்ற மணிச்சரம் நடுவில் உள்ள பரியகத்தைப் பொருத்தி, அங்கிருந்து மூன்று சரமாகப் பிரிந்து சுட்டு விரல், அணிவிரல், சிறுவிரல் ஆகியவற்றிலுள்ள மோதிரங்கள் பினைத்துக் மூன்றையும் கொண்டு விளங்குவது.. இது புறங்கையில் 2 விரல் அகலத்தில் பூச்சித்திர வேலைப்பாடுகள் அமைந்ததும் பலவித மணிகள் பதிக்கப் பெற்றதுமான கொடி போன்ற ஒன்றே பரியகம் எனப்படும். அதைப் பிணைத்து நிற்கும் மணிச்சரம் அல்லது சங்கிலி, கைச்சரி எனப்படும். இதனை நாட்டியப் பெண்கள் புறங்கைகளில் காணலாம்











# கைவிரல் அணிகள்

மோதிரங்களில் பூசசித்திர வேலைப்பாடு பொறிக்கப்பட்ட மோதிரங்களும், மணிகள் பதிக்கப் பெற்ற மோதிரங்களும் சிற்பப் படிமங்களின் நடுவிரல் தவிர்த்த மற்ற கைவிரல்களில் அணியப்படும். இவ் வகை மோதிரங்களில் வாளைப் பகுவாய் மோதிரம் என்பது சிறப்புடையதாகும். வாய் பிளந்தவாறுள்ள வாளை மீன் உணர்த்தும் முடக்கு மோதிரமாகும். இஃது அணிவிரலில் அணியப்படும் இரத்தினக் கற்கள் பதிக்கப் பெற்ற மோதிரம் அடுக்காழி என்று சொல்லப்படும்.








# கால் அணிகள்

### 01 வீரக்கழல்

கெண்டைக் காலில் வீரத்திற்கு அடையாளமாக மணி ஒன்று கட்டப்படும். இதற்கு வீரக்கழல் என்று பெயர். இது கழல் என்றும் சொல்லப்படும், சிறுமணியைக் கயிற்றில் கட்டி, காலில் அணிவது .

### 02 பாடகம்

காற்பரட்டுக்கு மேல் மூன்று. அல்லது ஐந்து அடுக்குகள் கொண்ட தண்டைகளை ஒன்றன்மீது ஒன்றாக இனைத்து அமைந்த அணிக்குப் பாடகம் என்று பெயர். இதனைப் பாதகடகம் என்றும் சொல்வர். ஒறறையாக அணியப்படும் போது இது தண்டை எனப்படும். மேலும் இவ்விடத்தில் பாம்புபோல் வளைத்துக் காயைச் சுற்றினமக்கப்படும் காலணி புஜங்க கடகம் என்று பெயர் பெறும்.

# பாத அணிகள்

பாதத்திற்கு அணியாக அரியகம் (பாதகாலம்) சிலம்பு (நூபுரம்), காற்சதங்கை, பரியகம் (காற் சவடி என்பவை பூட்டப்படுகிறது, அவற்றுள் சிலம்பும் பாதராலமும் சிறப்பானவை.

### 01 சிலம்பு

காய்பெருவிரல் அகலம் கொண்டதும் குழாய் போன்றதும், நீண்ட வட்ட வடிவினதும் முத்து அல்லது மணிகளைப் பரல்களாக உட்கொண்டதும் மேல் மட்டத்தில் முன்னும் பின்னும் முகப்பு அணிகளைக் கொண்டதும் வரிசையாக முத்துகள் பதிக்கப்பெற்றதும் ஆன கால் அணிக்குச் சிலம்பு என்று பெயர். நீண்ட வட்டமான இவ் வணி முன்புறத்திலும் பின்புறத்திலும் சிறிது தூக்கம் உடையதாக மேல் நோக்கி வளைவுற்று இருக்கும். மேலும் மற்றொரு வகையில் நீண்ட வட்ட வடிவமுடையதாகவும் பக்கங்களில் சிறிது உள் அழுந்தியும் இருக்கும்.

இலை, பூக்கருக்கு ஆகிய கைவினை கொண்டதாகவும் இருக்கும். இத்தகைய சிலம்பணி பாதத்தில் இருந்து கழன்று விடாமல் இருப்பதற்கு அதன் முன்புறத்தை ஒரு சங்கிலித் தொடரோடு இணைத்து அச் சங்கிலியானது விரல் மோதிரத்தோடு இணைக்கப்படும். பின்புறத்தில் அங்ஙனமே காற் தண்டையோடு சங்கிலியால் பிணைக்கப்படும்.

சிலம்பு அணிவதற்கு முன்பாக (கழுத்தில் அணியும் சவடி போல) சிலம்பின் அகலத்தில் மூன்றில் ஒரு பங்கு அகலம் உடைய சவடி ஒன்று கட்டப்படும். இது காலில் இருந்து கழன்று விடாதபடி கால் விரல் மோதிரத்தோடு சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கும். அச் சவடியோடு அதன் மீது அமையும் சிலம்பு பொருத்தப்பட்டு கழன்று விழாதபடி செய்வதும் உண்டு. காற்சவடிக்குப் பரியகம் என்று பெயர். இது பெண்களுக்குரிய சிறப்பான அணியாகும்.

## 02 அரியகம்

இது வலை போன்ற பின்னலை உடைய பாதத்தில் அணியும் ஆபரணம் ஆகும். இது பாதசாலம், பாதஜாலகம் என்றும் பெயர் பெறும். இஃது ஒரு விரல் அகலம் கொண்டது. நாலு யவை அகலப்பட்டிகையும், எட்டு யவை அகலம் கொண்ட கவான் சொறி போன்ற அமைப்பு உடையது மாகும். கவான் செறி முத்துத் தாமங்கள் போல அசைந்து தொங்கும் தன்மை உடையது.

## 03 காற் சதங்கை

ஒரு விரல் அகலம் அதில் மூன்றில் ஒரு பங்கு அகலம் பட்டிகையும் மூன்றில் இரண்டு பங்கு கனம் கொண்ட சதங்கையும் சேர்ந்தது இக்காலணியாகும். இதனை நாட்டியப் பெண்களும் குழந்தைகளும் அணிவர்.

## 04 விரல் அணிகள்

கால் விரல்களில் மிஞ்சி, பீலி, காலாழி, மகர வாய் முதலிய மோதிரங்களைப் படிமங்களில் அமைப்புதுண்டு.


















—பாடகம்.


—வீரக்கழல்.


அரியகம்.—

## 03 பாதக்குறடு

காலணி..

பாதத்தின் கீழ் காலணியின் அடிப்பாகவும், கட்டை விரலுக்கும் அடுத்த விரலுக்கும் இடையே குமிழ் போன்ற பிடிப்புடன் காலணி சிற்ப படிமங்களில் காட்டப்படும். இதை பாதக்குறடு என்று அழைப்பர். பிஷாடனார் படிமத்தில் பாதக்குறடு என்னும் காலணியைக் காணலாம்..







பிஷாடானார் படிமத்தில் இக்காலணி சிறப்பாக அமையும். தோல் வார் சேர்த்த காலணி கண்ணப்ப நாயனார் படிமத்தில் அமைக்கப்படுகிறது. மேலும்.. மனித





படிமங்களில் இக்காலணி அமையும்.




# ஆடைகள்...

சிற்பங்களில் ஆடைகள் மிக அழகுடன் அமைக்கப்பட்டிருக்கும். சிற்பங்களில் கீழ்கண்ட இந்நான்கு ஆடைகள் காணப்படும்.
1.பஞ்சாடை , 2.பட்டாடை, 3.தோலாடை, 4. மரவுரி ஆடை . ஆகிய நான்கும் குறிப்பிடத் தக்கவை.


அணிகலன்களை அமைப்பதில் இலக்கண வழக்கு ஒன்று நிலவுவது போல படிமங்களில் ஆடைகளை அணியும் முறையிலும் இலக்கண மரபு ஒன்றுண்டு. ஆடைகள் சிற்ப வடிவங்களில் மிதமாக அணிவிக்கப்பட்டிருக்கும். அவை உடலை ஒட்டியும அமைந்திருக்கும். இதன் மூலம் உடலின் இயல்பான மேடு பள்ளங்கள். திரட்சிகள் நன்கு புலப்படும். ஆடைகளில் இயற்கையாக ஏற்படும் சுருக்கங்களையும், தொய்வுகளையும் அழகுற அமைக்கப்பட்டிருக்கும்.ஒட்டியவாறு அமைக்கப்படும் போது ஆடை இல்லாத தோற்றத்தை அது கொடுக்குமாதலால் ஆடைகளின் கரைகளை உருட்டிச் செய்திருப்பார்கள். தொய்வுகளையும், சுருக்கங்களையும் உடலின் திரட்சிக்கு ஒப்ப நன்கு வகுத்து அமைந்திருக்கும். கருங்கக் கூறின் ஆடைகள் படிமத்தின் மேனி அழகை மறைக்காமல் அதனை நன்கு புலப்படுத்துவதாக அமையும்.

பஞ்சாடை, பட்டாடை, தோலாடை, மரவுரி ஆடை ஆகிய ஒவ்வொரு வகை ஆடைக்கும் தனித்தனிச் சிறப்பியல்புகள் உள்ளன. எடுத்துக் காட்டாக, பட்டாடையானது நூலாடையைக் காட்டிலும் அதிக பளுவானதால் இடுப்பில் உடுத்தியவுடன். ஆடையின் ஓரங்கள் பளுவான தொய்வுடையதாகக் காணப்படும். இது பட்டாடையின் தனி இயல்பு. இதனைப் படிமங்களில் மிக வினையமாகக் காட்டப்பட்டிருக்கும்.




## 01 பட்டாடை

பட்டாடையின் ஓரங்கள் கனமாக அமைந்தும், தொடை மற்றும் கால் ஆகியப் பகுதிகளில் திரண்டு ஒட்டியவாறு அமையும். இடைக்கட்டுகள் தொங்கியவாறு இருக்கும். விஷ்ணு படிமத்தில் காணலாம்.











## 02 மரவுரி ஆடை

மரவுரி என்றால்... மரப்பட்டை.. இதை ஆடையாக அணிதல்.. தொடையோடு ஒட்டியணிந்து மரவுரியின் சமதளமான உட்பகுதியையும் மேற்பகுதியையும் பிரித்துக் காட்டும்.










## 03 நூலாடை பஞ்சாடை..

நூலாடையானது உடம்போடு ஒட்டியமைந்து கரையினை மட்டும் வெளிப்படுத்தி சுருக்கமின்றி அமையும். இதை பஞ்சாடை என்றும் கூறுவர்.










இடைக்கட்டு தொங்கும் நிலை

## 04 மார்புகச்சை

தோல், மரவுரி ஆடைகளைத் தவிர மற்ற ஆடைகளில் ஆடைத் தொய்வுகளை ஒரு சீரானஜ திட்டத்திற்குள் அமைந்திருக்கும். இலை, பூ, கொடிக்கருக்கு வேலைப்பாடுகளையும், முத்துச் சரங்களையும் சீரான திட்டத்திற்குள்ளேயே வகுத்துக் கொண்டு அணிபெறச் செய்திருப்பார்கள். இடுப்பில் உடுத்தும் ஆடையைத் தவிர அழகிய இடைக்கட்டுகள் (கச்சை) படிமங்களில் அமையும். இடுப்பணிகளை மறைக்காமல், அவற்றுக்குக் கீழே தொடைகளின் திரட்டிக்கு ஒப்ப, தொடையோடு ஒட்டியவாறு அமைத்துப் பக்கங்களில் இடுப்பை ஒட்டிக் கவர்ச்சிகரமான முடிச்சுகளை அமைத்திருப்பார்கள். அம் முடிச்சுகளிலிருந்து ஆடை முந்தானையைப் பல கவர்ச்சிகரமான அமைதிகளில் தொங்கவீடப்படும். கற்படிமங்களில் இம் முடிச்சுகள் மேல் நோக்கிச் சென்று முழங்கையை ஒட்டியவாறு அமைந்து கைகளுக்கு உரதி சேர்க்கும். சிற்ப வடிவங்களில் மேலாடைகளைக் காட்டுவது பெரும்பாலும் வழக்கு அன்று. உடலின் கவர்ச்சியான பகுதிகளை நன்கு புலப்படுத்துவதற்காக இது பெரும்பாலும் தவிர்க்கப்படுகின்றது. பெண் படிமங்கள் மார்பில் வார் அல்லது கச்சு மட்டும் அணிவதுண்டு. இதை குச பந்தம் என்பார்கள். அங்ஙனம் அஃது அமையும் பொழுது கொங்கைகளின் எடுப்புக்கும் திரட்சிக்கும் ஏற்ற முறையில் அதனை ஒட்டியவாறு அமைத்துக் காட்டப்பட்டிருக்கும். அன்றி மேலாடையே உடுத்துவதானாலும் உடல் அழகிற்கும் கவர்ச்சிக்கும் இடையூறின்றி உடலின் மேடு பள்ளங்கள் புலப்படுமாறு உடலை ஒட்டியதாகவே அமையும். மேலாடை அணிந்த ஆண்

படிமங்களிலும் அங்ஙனமே ஒட்டியமைந்த உடலோடு அமையும்.








05 மேலாடை..

பொதுவாக, எல்லா உருவங்களிலும் அரையில் அணிந்த ஆடை, இடையில் அணிந்த இடைக்கட்டு ஆகிய இரண்டும் அமைக்கப்படும். முதுபெரும் ஞானிகள் முதலிய மாந்தர்க்கு மேலாடை இடது தோளிலிருந்து வலது இடுப்பு வரை தொங்கிச் சென்று. முதுகு மேல் நோக்கிச் சென்றடையுமாறும், அவ்வாடையின் நுனி, தோள் மீது கொய்து தொங்கியதாகவும் இருக்கும். புத்தர் மற்றும் ஞானிகள் படிமங்களில் காணலாம். அந்த ஆடையின் ஓரங்களை உடலிலிருந்து பிதுக்கமுடையதாகச் செய்து உடலுக்கு மேலே சார்த்தியிருப்பதைக் காணலாம். பெண் வடிவங்களில் இடது அல்லது வலது பக்கத்தில் ஆடை நுனியை இடுப்பில் இருந்து

கொகவமாக அமைத்துக் காட்டுவதும் ஒரு மரபு. இடுப்பில் உடுத்திய ஆடையின் மீதே இடுப்பு அணிகலன்களை பூட்டப்பட்டிருக்கும்.

ஆடை அமைதிகளால் சிற்ப வடிவங்களில் பலவகைக் கோலங்கள் காட்டப்பட்டிருக்கும். விரைந்து செல்லும் நிலை, சுழன்று ஆடும் நிலை, பறந்து செல்லும் நிலை ஆகியவற்றை ஆடையின் தொங்கல், சரிதல், நீட்டி நிற்றல் முதலியவற்றின் மூலமாகக் காட்டியிருப்பார்கள்.. சாதகப் படிமங்களின் ஆடைகள் விரைப்பு இன்றி தொய்வுடையதாக அமைந்திருக்கும்.





# 06. சின்னங்கள்.

இன்றையப் பாடத்தில் .. சிற்ப படிமங்களில் காணப்படும் ஆயுதங்கள், சின்னங்கள் பற்றிய விபரங்களைப் பார்ப்போம்.. சிற்பங்களில் ஏராளமான ஆயுதங்கள், விலங்குகள், மலர்கள், பறவைகள், பாத்திரங்கள் போன்றவை சின்னங்களாக அமைக்கப்படுகின்றன. ஆயுதங்கள் பொதுவாய் போர்க்கருவிகளை நினைவு படுத்தினாலும், அவை ஒவ்வொன்றும் ஒரு தத்துவத்தையும் பொருளையும் உணர்த்துவதாக சிற்பநூல்கள் கூறுகின்றன. இவைகளின் எண்ணிக்கையும், விபரங்களும் மிகப்பெரிதாக இருந்தாலும்.. இதை எளிமையாக சற்று சுருக்கமாக பார்க்க இருக்கிறோம்.


சிற்பங்களை அடையாளம் காணுவதிலும் ஆயுதங்களின் பங்கு அவசியமாகிறது. ஒவ்வொறு தெய்வத்திற்கும் பிரத்யோக ஆயுதங்கள் உண்டு. பெரும்பாலும் சிவனுக்கு மழு முருகனுக்கு சக்தி ஆயுதம். ஐயனாருக்கு செண்டு ( சவுக்கு) நீர்க்குடுவை இருந்தால் கங்கை நதி. ஆக.. சிற்பங்களை அடையாளம் காண்பதற்கும் நமக்கு ஆயுதங்கள் பற்றிய விபரங்கள் அவசியமாகிறது. பொதுவாய் நாம் அதிகம் அறிந்த சிற்பங்களை எளிதாக அடையாளம் காணலாம். பிரம்மா, விஷ்ணு, கங்காதாரர், கஜசம்ஹாரர், .. இதுபோன்ற படிமங்களை எளிதாக அடையாளம் காணலாம். ஆனால்.. வாமதேவ மூர்த்தி, அகோர மூர்த்தி, தத்புருஷர், பிரம்மசிரச்சேத மூர்த்தி. இவை போன்ற படிமங்களை அடையாளம் காண, படிமங்கள் கொண்டிருக்கும் ஆயுதங்களை வைத்து அடையாளம் காண முடியும்.



42. பிரம்ம சிரச்சேதக மூர்த்தி

பிரம்ம சிரச்சேத மூர்த்தி படிமத்தின் லஷ்ணமாக சிற்பநூல் இவ்வாறு கூறுகிறது. வெண்ணிறமும் மூன்று கண்களும் நான்கு கைகளும், வலது தன் கை முதல் வஜ்ரம் ( இருதலை சூலம்) கோடாரி, இட மேற்கை சூலம், இடக் கீழ்கை மண்டையோடு... இவ்வாறு இருப்பவர் பிரம்ம சிரச்சேத மூர்த்தி. இதில் வரும்.. வஜ்ரம், கோடாரி, சூலம், மண்டையோடு, இது போன்ற படிமங்களில் காணப்படும் ஆயுதங்களின் விபரங்களை இன்றைய பாடத்தில் பார்க்கிறோம்.

சிற்ப நூல்களில் கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு ஆயுதங்களும் சின்னங்களும் வகைப்படுத்தப்படுகின்றன.




( பட்டியலில் இல்லாத ஒரு சில சின்னங்களும் உண்டு.)

1. போர்க் கருவிகள்

சக்தி , சூலம் , சங்கு சக்கரம், வஜ்ரம் (இருதலைச்சூலம்) தண்டம் (தடி) உடைவாள் , கத்தி (சரிகை) ,கேடயம்,வில் அம்பு , மழு , கதை, சம்மட்டி (செண்டு) , ஈட்டி, வேல்.

2.தொழிற் கருவிகள்

கலப்பை,உலக்கை, கொட்டாப்புளி கரண்டிகள் (சிருக் - சிருவம்) தந்தம் , கத்தரி எழுத்தாணி, தாளம் உழவாரப்படை, அங்குசம் (துறட்டி) பரசு (கோடரி ), குந்தாளி ,

அரிவாள், சாட்டை, யோக தண்டம், முழக்கோல், உளி, மண்டையோடு , அக்கமணிமாலை, கமண்டலம்.

3. இசைக் கருவிகள்

யாழ்,வீணை, குழல் , முரசு , மத்தளம், பஞ்சமுக வாத்தியம், உடுக்கை,எக்காளம், மிருதங்கம், தம்புரா

4. உயிரினங்கள்


ரிஷபம் , சிம்மம், குதிரை ,மான் , ஆடு, வராகம், பெருச்சாளி (மூஷிகம்), நாய் , யாளி (கற்பனை), மகரம் (கற்பனை ), மீன்,.அன்னம் (கற்பனை), மயில், சேவல்,கிளி,கருடன் (கற்பனை), பாம்பு, முயலகன் (கற்பனை), வேதாளம் (கற்பனை), காமதேனு (கற்பனை)

5. மலர்கள்

செந்தாமரை, குவளை (நீலோத்பலம்) அல்லி, வெண்தாமரை ஊமத்தை ,எருக்கு, கற்பகக் கொடி (கற்பனை) ,செங்கழு நீர், கொன்றை.

# போர் கருவிகள்

## 01 சக்தி ஆயுதம்.










இவ் ஆயுதம், மூன்று சாய் சதுரங்களின் கோடிகள் ஒன்றோடொன்று நெருங்கி இருக்குமாறும், வரிசையாகவும் அமையப் பெற்று அப் பகுதி ஒரு தண்டத்தின் நுனியில் பொருத்தப்பட்ட அமைப்பில் இருக்கும். இவையிரண்டும் பொருந்துமிடத்தில் ஒரு குண்டலம் அமைந்திருக்கும். மேலும், அச்சாய் சதுரங்களின் நெற்றியில் இதழ்கள் கொண்ட இலை சின்னங்கள் இரு பக்கங்களிலும் பொறிக்கப் பட்டிருக்கும். இதுவே சக்தி ஆயுதம் வேலாயுதம் அல்லது சக்திவேல் என்று சொல்லப்படும்.







அன்னையால் முருகனுக்கு வழங்கப்பட்ட ஆயுதம். இது முருகனின் சிறப்பான ஆயுதமாகும். இச்சை , கிரியை, ஞானம் ஆகிய மூன்று சக்திகளும் அவனுள் அடங்கும் என்பது பொருள் இலக்கணம். சக்தியாயுதமே முருகனின் வடிவமெனக் கருதப்படுகிறது. சிற்ப படிமங்களில் கர்த்தரி முத்திரையில் சக்தி ஆயுதம் இருக்கும். துவாரபாலகர் படிமங்களிலும் சக்தி ஆயுதம் காணப்படும்.

## 02 சூலம்

ஒரு தண்டத்திலிருந்து மூன்றாக கிளைத்த அமைப்புடையது சூலம். இது பிறைச்சந்திரன் போன்ற வட்டப் பகுதிகள் நடுவில் கூரிய கத்தி செருகிய தோற்றமுடையதாம். இதனை மூவிலை நெடுவேல், முத்தலைவேல் என்றும் கூறுவர். முக் கிளைகளானவை ஆரணி, ஜனனி. ரோதயித்ரி என்ற மூன்று சக்திகளைக் குறிக்கும் என்பார்கள். ஜெனனி ஆக்கலையும், ஆரணி அழித்தலும், ரோதயித்ரி காத்தலையும் குறிக்கும். இது சிவபெருமானின் சிறப்பாயுதமாகும். கொற்றவை போன்ற பராசக்திகட்கும் இவ்வாயுதம் உரியதாகும். கால சம்ஹார மூர்த்தத்தில் இவ்வாயுதம் சிறப்பாக அமைக்கப்படும்.














## 03 கத்தி

இது சிறு கத்தியாகும்.சரிகை என்பது மற்றொரு பெயர். இது நீண்ட முக்கோண வடிவில் இருக்கும்.நடுவே கணத்தும் ஓரங்கள் கூர்மையாகவும் இருக்கும். இது உயிரின் மீது விழுந்த பாசங்களை அறுக்கும் கருத்தை உணர்த்தும்.









## 04 தண்டம்.


இது ஒரு தடியாகும். மரணத்தையும், தண்டனையையும் சுட்டும். லகுலீசர் மற்றும் துவாரபாலகர் படிமங்களில் காணப்படும்..






## 05 வஜ்ரம்







இருபக்கங்களில் சூலமும் இடையில் மூன்று சுற்றுகளும் கொண்டு விளங்கும் ஆயுதம். இருதலை சூலம் என்றும் அழைப்பர்.



## 06 பாசம்.

மூன்று வடமாக உள்ள கயிறை வளைத்து பிடித்த அமைப்பாகும். இது முறுக்கியும் முடிச்சுடனும் அமையும். பாசத்தின் உச்சியில் மலர் ஒன்றும் செருகப்பட்டிருக்கும். கடகமுத்திரையில் இது அமையும். மூன்று பிரிகள் ஆணவம்,







கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை குறிக்கும்.

## 07 அங்குசம்.

துரக்கோலின் மேல் பகுதியில் கொக்கியுடன் கூடிய ஆயுதம். துறட்டி எறும் சொல்வர். யானைகளை கட்டுப்படுத்த பாகன்கள் பயன்படுத்துவது. இதை கடவுற் படிமங்கள் தாங்கி, உயிர்களின் சித்தமலமாகிய ஆணவத்தை அடக்கி உயிர்களை தன்வயப்படுத்தும் சின்னமாக உள்ளது. விநாயகருக்கு பிரத்யோக ஆயுதம். கடக முத்திரையில் இவ்வாயுதம் பிடிக்கப்படும்

















## 08 வில்.

மூன்று வளைவுடையதாகவோ அல்லது பிறைச்சந்திர வடிவமாகவோ இருக்கும். விஷ்ணுவின் வில்லுக்கு சாரங்கம் என்றும், இராமனின் வில்லுக்கு கோதண்டம் என்றும், சிவனின் வில்லுக்கு பினாகம் என்றும், அர்ச்சுனனின் வில்லுக்கு






காண்டீபம் என்றும் பெயர்.


## 09 அம்பு.

அம்பின் அடிப்பகுதி பவகை சிறகுகளில் அலங்கரிக்கப்பட்டிருக்கும். சிற்பங்களில் கடகமுத்திரையில் பிடிக்கப்படும்.



**10 பரசு**

இது கோடரி என்றும் அழைக்கப்படும். மழு என்றும் சொல்லப்படும். மரத்தாலான காம்பின் மீது உருண்டையாகவோ, முட்டையாகவோ உள்ள தலைப்பகுதியின் மையத்தில் கூரிய கோடரி இருக்கும் அமைப்பே மழுவாகும். இது சிவனின் ஆயுதங்களில் ஒன்று. கர்த்தரிமுக ஹஸ்தத்தில் பிடிக்கப்படும்.. விசேசமாக கடக முத்திரையிலும் பிடிக்கப்படும்.. பெரும்பாலும் சிவ மூர்த்தங்களில் வல மேற்கையில் இவ்வாயுதத்தைக் காணலாம்.











சங்கு... சக்கரம்..


விஷ்ணுவின் சிறப்பான ஆயுதங்கள். விஷ்ணுவின் படிமத்திலும், விஷ்ணு அவதாரங்களிலும் இவ்விரண்டு ஆயுதங்களும் அவசியம் இடம் பெறும். இவ்விரண்டு ஆயுதங்களின் சிறப்பு மற்றும் பெருமை குறித்து வைஷ்ணவ ஆகமநூல்களில் ஏராளமான செய்திகள் உண்டு. பெரியாழ்வார் இவ்வாறு பாடுகிறார்.

" உறகல் உறகல் உறகல் ஒன் சுடர் ஆழியே சங்கே, "
சங்கு சக்ர ஆயுதங்களே நீங்கள் உறங்காமல் பெருமாளை பார்த்துக்கொள்ளுங்கள்.

மேலும் ஒரு பாடலில்
" வடிவார் சோதி வலத்துறையும் சுடர் ஆழியும் பல்லாண்டு படைபோர் புக்கு முழங்கும் அப் பாசஞ்சன்னியும் பல்லாண்டு "

இவ்வாறாக வைஷ்ணவ வழிபாட்டில் சங்கும் சக்கரமும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

**11 சங்கு**







விஷ்ணுவின் சிறப்பான ஆயுதம். இடது பக்க கர்த்தரி முத்திரையில் அமையும். விஷ்ணு பிடித்திருக்கும் சங்கு பாஞ்சஜன்யம் என்று பெயர்.

## 12 சக்கரம்.

ஆழி என்றும் பெயர் உண்டு.விஷ்ணுவின் சிறப்பான ஆயுதம். விஷ்ணுவின் சக்கரத்திகு சுதர்சனம் என்று பெயர். விஷ்ணுவின் வலது மேற்கரத்தில் கர்த்தரி முக ஹஸ்தத்தில் பிடிக்கப்படும்.












## 13 கட்வாங்கம்.

கால் அல்லது தொடை எலும்பை தண்டமாகக் கொண்டு உச்சியில் மண்டை ஓட்டை செருகி, அத்தண்டத்தை பாம்பு ஒன்று சுற்றி வளைத்து மேல்நோக்கி எழுந்து மண்டை ஓட்டின் கண்வழியே வெளிந்து படம் எடுத்து நிற்கும் நிலை. கட்வாங்கம் என்பது சிவனின் சிறப்பான ஆயுதங்களில் ஒன்று. சைவத்தின் ஒரு பிரிவான கபாலிகத்தை சேர்ந்த ஆயுதம் என்பர்.


கட்வாங்கம்







கட்வாங்கம்


கட்வாங்கம்

## 14 உடைவாள்.

கைப்பிடியுடன் அமைந்துள்ள நீண்ட கத்தி.நடுவில் கனத்து இருபக்கம் சரிந்து கூர்மையாக இருக்கும். கடக முத்திரையில் இக்கத்தி செங்குத்தாக பிடிக்கப்படும். கட்கம் என்றழைக்கப்படும். வீரத்தின் அடையாளமாக கொள்ளப்படுகிறது.




## 15 கேடயம்.














உலோகத்தகட்டால் ஆனதும், வட்டம் அல்லது நீண்ட சதுர அமைப்பும் கொண்டதுமாகும். உள்ளமுகத்தில் குழிந்து கைபிடி இருக்கும். கேடகம் என்றும் அழைக்கப்படும். இது இன்னல் இடையுறுகளை தடுத்து நிறுத்தும் தர்மத்தின் அடையாளமாகக் கொள்ளப்படுகிறது.

## 16 வேல்




இது அரசிலை போன்ற தலைப்பகுதியை கோலின் நுனியில் கொண்டமைந்த ஒரு ஆயுதம். முருகனின் சிறப்பான ஆயுதம்

# தொழில் கருவிகள்

## 01 கொடி

கொடியும் தண்டமும் சேர்ந்த அமைப்பு. வெற்றியின் சின்னம். சேவற் கொடியோன் முருகன் படிமத்தில் காணலாம்.






## 02 கமண்டலம்.

தண்ணீர் வைத்துகொள்ளும் பாத்திரம். மேற்பகுதியில் வளைவான கைப்பிடியுடன் அமையும். கைபிடி இல்லாத பாத்திரத்திற்கு குண்டிகை எனப்பெயர். பிரம்மனின் படிமங்களில் கமண்டலம் மற்றும் குண்டிகைக் காணப்படும். குடுவையில் நிரம்பியுள்ள தண்ணீர் போல், தம்முள் நிறைந்த முனிவர்களின் குறியீடாக கமண்டலம் இருக்கிறது.



குண்டிகை



கமண்டலம்






ஞானத்தை வழங்கும் சரஸ்வதி படிமங்களிலும் கமண்டலம், குண்டிகை அமைக்கப்படும்.







## 03 மணி

சப்தமே உலகின் முதல் தோற்றம். ஒலியின் வடிவம் ஓம். ஒலியை உணர்த்தும் சின்னம் மணி.






## 04 அக்னி


அழிக்கும் ஆற்றலைக் குறிக்கும். நாக்காகிய சுடர்கள் 3 அல்லது 5 அல்லது 7 என்ற எண்ணிக்கையில் இருக்கும். நடுச்சுடர் வலம் சுழித்ததாக இருக்கும்.














## 05 சிருக்


சிருக்–சுருவம்




சிருக் அல்லது சிருவங்கள் என்பது யாகத்தீயில் நெய் வார்க்கும் கருவியாகும். வேள்வித்தீயில் நெய் வார்க்கும் கரண்டி அல்லது துடுப்பு. தலைப்பகுதியில் ரிஷபம் போன்ற உருவங்களை அமைப்பதுண்டு. யாகம் செய்பவராக பிரம்மன் அறியப்படுவதால் பிரம்மனின் படிமங்களில் காணலாம்.




பல வடிவங்களில் சிருக்.

## 06 செண்டு






சிற்பங்களில் வளைந்த குச்சிபோல் காணப்படும். சாட்டை அல்லது சவுக்கு எனலாம். குதிரை போன்ற விலங்குகளை அடித்து ஓட்ட பயன்படுவது. சவுக்கு கயிறானது பிரம்பில் இணைக்கப்பட்டிருக்கும் சவுக்கானது அப்பிரம்பின் நுனியில் மடித்து கட்டப்பட்டிருக்கும். துவாரபாலர் முதலிய படிமங்களில் காணப்படும். ஐயனாரின் பிரத்யோக ஆயுதம்.

## 07 தலைக்கோல்...

நாட்டிய உலகில் மிக மிக மதிப்பும் பெருமையும் வாய்ந்த ஒரு பொருள். நாட்டியத்தில் சிறந்து விளங்கும் பெண்களுக்கு, அரசனால் தலைக்கோல் ஒன்று வழங்கி அவருக்கு தலைக்கோலி என்னும் பட்டமும் வழங்கப்படும். சிலப்பதிகாரத்திலேயே இது பற்றி கூறப்படுகிறது.

நாட்டிய நூல்கள் கூறப்படும்  சிறந்த நடனமாடிய  மாதவிக்கு அரசன் சிறப்பு செய்து .. தலைக்கோல் வழங்கினான். ஆயிரத்தெட்டு கழஞ்சு பொன் மதிப்புடையது.



"நாட்டிய நன்னூல் நன்குகடைப் பிடித்துக்
காட்டினள் ஆதலின், காவல் வேந்தன்
இலைப்பூங் கோதை இயல்பினில் வழாமைத்
தலைக்கோல் எய்தி
தலை அரங்கு ஏறி
விதிமுறைக் கொள்கையின் ஆயிரத்து எண்கழஞ்சு
ஒரு முறையாகப் பெற்றனள்..." (சிலம்பு. )
(155- 163)
அரங்கேற்றுக் காதை.

அரசன் தான் போரிட்டு வெற்றி பெற்ற எதிரி நாட்டு அரசனின் வெண்கொற்றக்குடையை செங்கோலாக செய்யும் வழக்கம் உண்டு. இந்த செங்கோலைத்தான் தலைக்கோல் என்று பெயர் சூட்டி நாட்டியத்தில் சிறந்தவர்களுக்கு வழங்குவார்கள். இந்திரனின் மகன் ஜெயந்தனாக இத்தலைக்கோலை நினைத்து நடனக் கலைஞர்கள் வணங்கும் வழக்கமும் உண்டு. நடனக் கலைஞர்களின் உச்சமான அங்கிகாரம் அவர்கள் அரசனிடம் தலைக்கோல் பெறுவது. அரசனிடம் மாதவி தலைக்கோல் பெரும் காட்சி.





கரத்தில் தலைக்கோலுடன் தலைக்கோலி பட்டம் பெற்ற நடன மங்கை

ஊர்த்துவ தாண்டடம்.
நடராஜரின் படிமத்தில் தலைக்கோல் இடம்பெறும்.




ஆடல் அரசன் தலைக்கோலுடன்..






## 08 கலப்பை

சிற்பங்களில் காலத்தைக் குறிக்கும். பலராமனின் பிரத்யோக ஆயுதம். பலராமன் வடிவத்தில் அவசியம் கலப்பை இருக்கும்.



மகாபாரதக் காட்சி.. அங்கோர்வாட்..

துரியோதனன், பீமன் யுத்தம். துரியோதன் மீது பீமன் தாக்குதல் .. துரியோதன் அருகே கலப்பையுடன் பலராமன். ( Pc... poetry in stone. Vijay.)

## 09 ருத்ராட்சம்.

அக்கமாலை என்றும் அழைக்கப்படும். சிவனின் அம்சமாக, ஞானத்தின் சின்னமாக, குறியீடாக உள்ளது. தட்சினாமூர்த்தி, ஞான சரஸ்வதி , பிரம்மா, படிமங்களில் பெரும்பாலும் வரும். பிரம்மாவின் இடது மேல் கை கமண்டலமும் வலது மேல்கை அக்கமாலையையும் கொண்டிருக்கும். சூரியன், தர்மசாஸ்தா போன்ற படிமங்களிலும் ருத்ராட்சம் பிடிக்கப்படும்.














## 10 ஸ்ரீ வத்ஸம்

திருவுறை மார்பன்.

விஷ்ணுவுக்கே உரிய சிறப்பான சின்னம். இது விஷ்ணுவின் வலது மார்பில் ஸ்தன வட்டத்திற்கு மேற்பகுதியில் சுயமாகத் தோன்றி அமைந்த மரு அல்லது மச்சம் ஆகும். இதனைப் படிமத்தில் ஒரு முக்கோணத்திற்குள் மூன்று இலைகளைக் கொண்டதாகச் சித்தரிப்பதொரு வழக்கு. இதனை அரூப லக்ஷ்மி என்றும் சொல்வர். மார்பிலிருந்து ஒரு யவை அளவு அம் மச்சம் தடித்திருக்குமாறு இருக்கும். லக்ஷ்மி, விஷ்ணுவிடம் ஸ்ரீ எனப்படும் பிரிக்க முடியாதவளாக இருக்கின்றாள் என்பதைக் காட்டும். இதனால் விஷ்ணுவானவர் ஸ்ரீ நிவாசன் (திருவாளன்) என்ற திருநாமம் பூண்டிருக்கிறார்.. லட்சுமி, விஷ்ணுவின் வலது மார்பில் வாசம் செய்கிறாள் என்பதே திருவுறை மார்பன்.. விஷ்ணு படிமங்களில் வலது மார்பில் அமையும். மகாவீரருக்கும் உண்டு










## 11 சாமரம்.



சேவை செய்தலை குறிக்கும் சின்னமாக சாமரம் படிமங்களில் அமைகிறது. சமண படிமங்களில் சேடிப்பெண்கள் சாமரத்தை பிடித்திருப்பர். இரட்டைச் சாமரம் அஷ்டமங்கல சின்னங்களில் ஒன்றாகும். உமையொரு பாகன் வடிவத்தில் உமையவள் சாமரம் ஏந்துவார். தேவியரின் படிமத்தில் இருபுறமும் சாமரம் வீசும் சேடிப்பெண்கள் அமைவர்



## 12 கண்ணாடி

அஷ்டமங்கலச் சின்னங்களுள் ஒன்று. உமையவள் படிமம் கண்ணாடியை பிடித்திருக்கும். அழகிய சௌந்தர்ய சுந்தரி பெண் படிமங்களும் கண்ணாடியை பிடித்திருக்கும்.





## 13 பூர்ண கும்பம்.

அஷ்டமங்கலச் சின்னங்களுள் ஒன்று. வருணன் படிமத்திற்கும் கங்கை நதிக்கும் உரியது. பூர்ண கும்பம் ஏந்திய கங்கா தேவி படிமம் தாராசுரத்தில் சிறப்பான வேலைப்பாடுடன் அமைந்துள்ளது.





# இசைக் கருவிகள்

## 01 உடுக்கை

துடி மற்றும் டமருகம் எனவும் அழைக்கப்படும். துடியானது இறைவனின் படைத்தற் சக்தியை குறிக்கும்.








டமருகத்தை சுற்றிய சர்ப்ப அமைப்பு..

இது சற்று விசேடமான அமைப்பு.. அம்மன் படிமங்களில் வரும். சிற்ப இலக்கணங்களில் உடுக்கை, பாம்புக்கனை, பாசுபதமூர்த்திக்கும், ஈசான சிவமூர்த்திக்கும் அவசியம் இருக்கும்.






ஈசான சிவமூர்த்தி

# உயிரினங்கள்

### 01 பாம்பு..

குண்டலினி சக்தியின் சின்னமாக பாம்பை அணியாகவோ, ஆயுதமாகவோ பெரும்பாலான படிமங்களில் அமைப்பது வழக்கு. மேலும்.... திருமாலின் பீடமாகவும், சயன பாயாகவும் படிமங்களில் காட்டப்படும். நடராஜரின் காலடியில் இருக்கும் முயலகன் கழுத்திலும் இருக்கும்.






**02 மான்**

சிற்பங்களில் ஆயுதங்களைத் தொடர்ந்து விலங்கினங்களும் இடம் பெறும். பெரும்பாலான சிவ மூர்த்தங்களில் மான் இடம் பெறும். சிவ மூர்த்தங்களில் இட மேற்கையில் மானும், வல மேற்கையில் மழுவும்( கோடாரி) அவசியம் இடம் பெறும். மானும் , மழுவும் Signature of lord siva என்றே சொல்வார்கள். அலைபாயும் மனதை கட்டுப்படுத்தி ஒருமுகப்படுத்தலின் சின்னமாக மான் காட்டப்படுகிறது. மான் மற்றும் மழுவுடன்தான் சிவமூர்த்தங்கள் பெரும்பாலும் அமையும். எந்த ஒரு சிவ மூர்த்தத்திலும் இடது மேல்கை மானும், வலது மேல் கை மழுவும் கொண்டு பெரும்பாலும் அமையும்.









# மலர்கள்

## 01 தாமரை மலர்.

இதை பத்மம், கமலம், போன்ற பெயர்களில் அழைக்கப்படும். மங்கலச்சின்னம். ஏகாந்தநிலை. தன்னை மறந்தல். இதுபோன்ற குறியீடுகளை உணர்த்தும். பத்ம பீடத்தில் சிற்பங்கள் அமையும். தாமரை மலரை தண்டுடன் ஏந்திய புத்தர் படிமத்திற்கு போதிசத்வ பத்மபாணி என்று பெயர். மகாலட்சுமியின் கரங்களில் தாமரை இருக்கும். சூரியனுக்கு உகந்த மலர் தாமரை.

## 02 அல்லி மலர்..

நீலத்தாமரை. குவளை. நீலோற்பலம். என்ற பெயர்களில் அழைக்கப்படும். சிறு தண்டுடன் குவளை மலர் படிமங்களில் காட்டப்படும். கௌரி படிமங்களில் பிடிக்கப்படும். அர்த்தநாரிஷ்வரர் படிமத்தில் உமையவள் கரம் குவளையை ஏந்திருக்கும். ஏகாந்தத்தை அனுபவிக்கும் இளம் காதலர்களின் பெண் படிமம் தாமரையை ஏந்தும். இரண்டு யானைகள் சூழ, தாமரையை கையில் ஏந்தும் கஜலட்சுமி.. கருத்த மேகங்கள் கூடி மழை பெய்து விளைச்சலை கொடுத்து வளங்கள் அருளும் கஜலட்சுமி. கருத்த மேகங்களின் குறியீடாக யானையும், வளத்தின் குறியீடாக



தாமரையும் கஜலட்சுமியின் சின்னங்களாகும்.



கரத்தில் தாமரைத் தண்டுடன் புத்தரின் வடிவமான போதிசத்வ பத்மபாணி.



சூரியனது படிமமும் தாமரையைக் கொண்டிருக்கும்.



ஏகாந்த சூழலை அனுபவிக்கும் காதலர்கள்.. பெண் படிமம் தாமரை மலரை ஏந்தும்

மகாலட்சுமியின் கரங்களும் தாமரையைக் கொண்டிருக்கும்.

## 03 நீலத்தாமரை.

அர்த்தநாரிஷ்வரர் படிமத்தில் உமையவள் பாகம் குவளை மலரை ஏந்தும். இது நீலத்தாமரை. நீலோற்பலம் மலர் என்றும் கூறுவர்.







# சின்னங்கள்

சிற்ப படிமங்களில் காணப்படும் ஆயுதங்கள் மற்றும் சின்னங்கள் பற்றிய விபரங்களை கடந்த நாட்களில் பார்த்துவருகிறோம். நிறைவாக இது வரை நாம் பார்த்த விபரங்களின் ஒரு சுருக்கமான தொகுப்பை அறிவோம்.

புலித்தோல், ருத்திராட்சம், தலைக்கோல், செங்கோல், ஸ்ரீவத்சம் போன்றவைகளும் சிற்பங்களில் ஆயுதங்களாக இடம்பெறும். வெள்ளையும் கருப்புமான புள்ளிகளையுடைய மான் தோல், சுக்ல கிருஷ்ண யஜூர் வேத யாகத்தைக் காட்டும்

குடை புகழையும், புத்தகம் அல்லது ஏடு அனைத்து அற நூல்களையும் அட்சமாலை காலத்தையும் கமண்டலம் அனைத்து நூல்களின் சாரத்தையும் குறிக்கும்.
கலப்பை காலத்தையும், உலக்கை மரணத்தையும் குறிக்கும்,
பிரம்மன் சடைகள் மூலிகைகளையும் சரஸ்வதியின் கைகள் வேதங்களையும் குறிக்கும்.

தெய்வப் படிமங்களை இரு கண்கள் சூரிய, சந்திரனையும், மூன்று கண்கள் இருப்பின் சூரிய சந்திர, அக்னியையும் குறிக்கும்
சிம்மம் வீரத்தையும், குதிரைகள் திசைகளையும் புலன்களையும், ரிஷபம் தர்மத்தையும் குறிக்கும்.

ரிஷபத்தின் நான்கு கால்கள் சமம், விசாரம், சந்தோஷம், சதுரங்கம் என்ற நான்கு கணங்களைக் குறிக்கும்.
இறைவன் இதன் மீது ஆரோகணித்திருப்பது அக்குணங்களைக் கொண்டுள்ள உயிரிடத்து மட்டும் எழுந்தருளி அருள் செய்வர் என்பதைக் காட்டும்,

பிரம்மனின் நான்கு முகங்கள் நான்கு வேதங்களையும், சதாசிவ மூர்த்தத்தின் ஐந்து முகங்கள் அவரது ஐந் தொழில்களையும் குறிக்கும். மேலும், சத்யோஜாதம் பூமியையும், வாம தேவம் நீரையும் , அகோரம் நெருப்பையும், தத்புருஷம் காற்றையும், ஈசானம் வானத்தையும் குறிக்கும் என்று கூறுவர் .. இதற்கான படிமங்களும் உண்டு.

விஷ்ணுவின் கைகளில் கொடுத்து அமைக்கும் சங்கு, சக்கரம், கதை, பத்மம், ஆகியவை வானம், காற்று, தீ , நீர் ஆகியவற்றையும் குறிக்கும் என்பர் . விஷ்ணுவின் தூக்கம் யோக நித்திரை எனப்படும். அதாவது எல்லாவற்றையும் தம்முன் அடக்கி அவற்றை செவ்வனே நடைபெறச் செய்து அதிலிருந்து நீங்கி ஆனந்தமயமாய் இருப்பதை இது உணர்த்தும்.

ஆணவம், மாயை, கன்மம், ஆகிய பாசத்தால் கட்டுண்ட உயிரை முயலகன் என்ற பூத வடிவம் காட்டும். விரும்பியவற்றை எல்லாம் தரும் சின்னமாகக் காமதேனுவும், அங்ஙனமே கற்பகத் தருவும் கொள்ளப்பட்டுள்ளன. கருடன்


மனதைக் குறிப்பிடும்.

அரசமரம் ஞானத்தையும், விழுதுகளோடும் கூடிய ஆலமரம் சூஷ்மத்திலிருந்து ஸ்தூலமாக ஓங்கி விரிந்திருக்கும் பிரபஞ்சத்தையும் உணர்த்தும்.

வண்ணங்களில் வெள்ளை சாத்விக குணத்தையும்;
சிவப்பு, ராஜஸ குணத்தையும்: கருப்பு, தாமச குணத்தையும் உணர்த்தும்
மஞ்சள், செல்வத்தையும், மங்களத்தையும்; நீலம் வானமும் கடல் போன்ற இறைவனின் பரந்த தன்மையையும்; பச்சை, வளம் அல்லது செழிப்பையும் குறிப்பிடும். எங்கும் எப்பொழுதும் நீக்கமற நிறைந்த பொருளாகிய விஷ்ணுவின் நீல மேனியை நீல வானிற்கும், அவரது பொன்வண்ண வில்லினை வானில் தோன்றும் மின்னல் கீற்றுக்கும் ஒப்பிட்டு மகிழ்வார். தாமரை, தெய்வத் தன்மையையும், செல்வத்தையும் நீலோற்பலம் வைராக்கியத்தையும். குமுதம் (ஆம்பல்) மகிழ்வையும் குறிக்கும்.

## 01 ஆயுத புருஷர்

ஆயுதங்களின் ஆற்றலைக் கருத்திற்கொண்டு அதற்கு மனித உருவம் அளிக்கப்பட்டிருக்கிறது. அவ்வுருவத்திற்கே ஆயுத புருஷர் என்று பெயர். ஆயுத புருஷர்களை ஆண் வடிவத்தில், அல்லது பெண் வடிவத்தில், இயற்ற வேண்டும். அங்ஙனம் இரண்டிலும் அகப்படாதவற்றை அலி என்று சிற்பநூல் கூறும். உதாரணமாக, வஜ்ராயுதத்தை ஆண் என்றும், சக்த்தியா யுதத்தை பெண் என்றும், பாசத்தை அலி என்றும் கூறுவது வழக்கு. ஆயத புருஷர்களை அஷ்ட தாளத்திலோ அல்லது நவ தாளத்திலோ இருக்கும். தசாயுதங்கள் என்னும் ஒரு வகைப்பாடும் உண்டு.. அதை சிற்ப இலக்கணப்பிரிவில் பார்ப்போம்...



## 02 அஷ்டமங்கலச் சின்னங்கள்.

எட்டு மங்கலச் சின்னங்கள். அஷ்டமங்கலச் சின்னங்கள் என்பது சுபகாரியங்கள் மற்றும் வழிபாடுகளின்போது பயன்படும் சின்னங்கள். இந்த சின்னங்கள் சிற்பங்களிலும் இடம் பெறுகிறது. சிவன், தேவியர், தேவர்கள், கணபதி, வேளாளர், என்று தனித்தனிப் பிரிவாக அஷ்டமங்கலச் சின்னங்கள் உண்டு.

இவற்றை விரிவாகப் பார்த்தால்.. வழிபாட்டுமுறை என்ற பிரிவில் அடங்கும். பிற்பாடு பார்ப்போம். சிவனுக்குரிய அஷ்டமங்கலச் சின்னங்கள் பற்றி மட்டும் பார்த்தால்..

1.கண்ணாடி-  (உமாதேவி)
2. பூர்ண கும்பம் - (கங்கை.)
3.ரிஷபம் (பூமி.)
4.இரட்டைச் சாமரம்  (காவேரி)
5.ஸ்ரீவத்ஸம் ( தேவி)
6.ஸ்வஸ்திகம்  (சரஸ்வதி)
7.சங்கு  (சசி தேவி)
8.தீபம் (ஆகாயம்.)


ஈழநல்லூர்.சிவாகமவிசாரத-முத்தமிழ்குருமணி- கலைமாமணி Dr..எஸ்.எஸ்.குருஜீ - ஆகமசித்திரங்கள்-பாகம்-3

30

**தேவாஷ்டமங்கலம்.** [illegible]

[illegible]

கண்ணாடி. பூர்ணகும்பம். விருஷபம். சாமரை. ஸ்ரீவத்சம். ஸ்வஸ்திகம். சங்கம். தீபம்.இவைகள் சிவனுக்குரிய அஷ்டமங்கல பொருட்கள்ஆகும்..மற்றத்தெய்வங்களுக்கு விருஷபத்திற்கு பதிலாக அந்தந்த தெய்வத்தின் வாகனங்கள சேர்க்கப்படும். மேலும் தேவிக்கு வேறுஅஷ்டமங்கலமும்.நான்குவருணத்தவருக்கும் தனித்தனி அஷ்டமங்கலங்களும் முன்னால் காணலாம்.



அஷ்டமங்கலம் உணர்த்தும் பொருள்கள்
சங்கு - படைப்பு
ஸ்ரீவத்ஸம் - லஷ்மி
கண்ணாடி - சூரியன்.
பூர்ண கும்பம் - வருணன்
இரட்டைச் சாமரம் - சப்தமாதர்கள்.
ஸ்வஸ்திகம்- சரஸ்வதி.
தீபம் வாகனம்- ஆகாயம்.
வாகனம்/ரிஷபம் - கர்மம்.

## 03 மகா சதாசிவ மூர்த்தி

இதுவரை நாம் பார்த்த அனைத்து ஆயுதங்களையும் ஏந்துபவர் மகாசதாசிவமூர்த்தி. இருபத்தைந்து முகங்களும் 50 கரங்களும் கொண்டவர். இதன்படி மகா சதாசிவ மூர்த்தியின் வலது பக்க 25 கரங்களில் அபயம், சக்கரம், சூலம், உளி, அம்பு, கதை, தாமரை, கத்தி, தோமரம், சத்தி, பிராசம், கோடாரி, பாம்பு, கலப்பை, அங்குசம், அக்கமாலை, சிறுசுத்தி, கொடி, தண்டம், வஜ்ஜிரம், குந்தம், அஸ்திதம் ஷட்ரம், ரம்பம், பிண்டி, பாலம் போன்ற அம்சங்களும், இடது பக்க 25 கரங்களில் வரதம், வில், மான், சங்கம், கேடயம், பாசம், பரசுவதம், முத்கரம், உடுக்கை, மணி, சுவடி, உருத்திர வீணை, கபாலம், முண்டம், கட்வாங்கம், பூசுண்டி, பரிகம், பலகை, பட்டசம், பிரம்பு, கமண்டலம், அனல், கத்திரிக்கோல், உலக்கை, மயில் தோகை ஆகிய அம்சங்களும் இடம் பெற்றிருக்கின்றன.




மகாசதாசிவமூர்த்தி.

சுசீந்திரம் தாணுமாலயன் சுவாமி கோவில் கோபுரம்.








# 07. பங்க இலக்கணம்.

படிமங்களின் ஒடிவு மற்றும் வளைவுகளை பங்கம் என்கின்றனர்.. இது ஒரு நீண்ட விபரங்களையுடைய பகுதி.. சுருக்கமாக பார்ப்போம்.. பங்கம் அமைப்பு மூன்று வகைப்படும்.

1. ஆபங்கம்
2. சமபங்கம்.
3. அதிபங்கம்.

சிற்பம் ஒன்றின் உச்சியில் ஒரு நூலைத் தொங்கவிட்டு பங்க அமைப்பு வரையறை செய்யப்படுகிறது. நேராக நிமிர்ந்து சமபாத ஸ்தானக அமைதியில் உள்ள படிமம் தராசின் முள்போன்று ஒரு பாற் கோடாக இறை நிலையை உணர்த்தும். ஆனால் ஒரு படிமம் ஆபங்கத்தில் அமைந்தால் அன்பும் அமைதியும் அதில் பொருந்தி சாத்விக தோற்றம் இருக்கும். சமபங்கத்தோடு அப்படிமம் அமைந்தால் சிருங்காரமும் ராஜஸமும் கலந்து நிற்கும். ஆதிபங்கத்தின் மூலம் வீர ரசம் வெளிப்படும்.





இம் மூன்று பங்கங்களில்தான் படிமங்கள் பெரும்பாலும் அமைக்கப்படுகிறது. இம்மூன்று கோலங்களிலும் முகம் அமைதியுடனும், கண்கள் கருணையுடனும் இதழ்கள் புன்முறுவலுடனும் அமைந்திருக்கும். இறைவனின் எவ்வித அமைதியும் ஆன்மாவை தூய்மைப்படுத்தும் கருணையை அடிப்படையாகக் கொண்டதாகையால் இவ்விலக் கணம் பொருந்தப் படிமங்களை அமைக்கிறார்கள்.

உடல் பங்கங்களைப் படிமத்தில் புகுத்தி அமைக்க வழி முறைகள் உள்ளன. நேரே நிமிர்ந்து சமச்சீருடன் நிற்கும் படிமத்தின் முன்புறத்தில் தலை, நெற்றி, மூக்கு. மோவாய், மார்பு, நாபி, குய்யம், தொடைகள், பாதங்கள் ஆகிய உறுப்புகளின் நடுவே செல்லும் தூக்கு நூல் மைய சூத்திரம் என்றும், அது முன்புறத்தில் செல்லுமாதலால் பூர்வ சூத்திரம் என்றும் சொல்லப்படும். இந்நூல், படிமத்தை சம நிலைப்படுத்தும் இன்றியமையாச் சூத்திரமாகும். இந்த தூக்கு நூலின் அமைப்பைக்கொண்டே பங்கங்கள் வரையரை செய்யப்படும்.

## 01 ஆபங்கம்


குறைந்த பங்கத்தை (வளைவை) யுடையது என்பது இதன் பொருள். இஃதில் உடலின் ஒடிவு வளைவுகள் மிதமாக அமைந்துள்ளதால் ஆபங்கம் என்று சொல்லப்படுகிறது. நின்ற கோலத்திலுள்ள படிமத்தின் முன்புறத்தில்தொங்கும் நூலானது உடலின் எவ்வெப்பகுதிகளில் செல்லும் என்பதை படத்தில் பார்க்கவும்.






தொங்கு நூலானது தலையின் இடது பக்கம். இடது அடிக்கண், இடது மூக்குப்புடை, இடது மோவாயின் வலது பக்கம், மார்பின் நாபியின் வலது பக்கம் தொடையின் வலது பக்கம், வலது கால் கணுவின் இடது பக்கம் செல்லும். இப்பக்கத்தில் குதி காலின் இடைவெளி முன்புறத்தில் கட்டை விரல்களின் இடைவெளி அளவில் மூன்றில் ஒரு பங்காகும். பெருவிரல்கள் இடைவெளி 16 விரல் அளவாக இருக்கும். இது திரிபுராந்தக மூர்த்திக்கு ஏற்ற பங்கமாகும்.

பெண் படிமங்கள் கீழ்கண்ட ஆபங்கத்தில் அமையும்.




ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் பொதுவான ஆபங்க வடிவம்.





## 02 சமபங்கம்


மைய நூலானது தலை உச்சி மூக்கு நுனி வழியாகவும் குதிகால்களின் மையத்திலும் செல்லும். சூத்திரத்திலிருந்து மார்பின் விலக்கம் இடது பக்கத்தில் சூத்திரத்திலிருந்து இடது பக்கம் நாபி நடு சூத்திரத்திலிருந்து வலது பக்கத்தில் யோனி மூலத்தின் ஒதுக்கம் சூத்திரத்திலிருந்து வலது முழங்கால் வரை ஒதுக்கம் பெருவிரல்களின் இடைவெளி இவ்வளவில் மூன்றிலொரு பாகம் குதிகால்களின் இடைவெளி ஆகும்.



கீழ்கண்ட அமைப்புகளும் சமபங்க வடிவமே.. கங்காளர் மற்றும் கங்காதாரர் படிமம் சமபங்கத்தில் அமையும்.













உமா மகேஷ்வரர் மற்றும் ஆலிங்கனம் செய்யும் இரு காதலர் படிமம் சமபங்கத்தில் அமையும்.







ரிஷப வாகனர், கிருஷ்ணர் மற்றும் சக்தி படிமங்கள், சமபங்கத்தில் அமையும்.






## 03 அதிபங்கம்

மைய நூலானது தலை உச்சிக்கு இடது பக்கம்.. நெற்றிக்கு இடது பக்கம் மூக்குப்புடைக்கு இடது பக்கம்.. இடது கடைக் கண்ணின் இடப் பக்கம் மார்பு நடுவிலிருந்து 3'-0" விரல் தூரம் வலது மார்பிலும் நாபி மையத்திலிருந்து 3'-0" விரல் தூரம் வலது மார்பிலும் இடது தொடை நடுவிலும் ஊன்றிய காலின் கணுவிலும் தொங்க வேண்டும்.

பங்க இலக்கணம் பற்றிய பாடங்களை இத்துடன் நிறைவு செய்வோம்.. இதை மேலும் விரிவாக பார்த்தால், அளவீடு, கணக்கு முறைகள் என்று சிற்பிகளுக்குரிய இலக்கணமாகிவிடும். மேலும்.. மத்திம தசதாளம், அதம தசதாளம், நவார்த்த தாளம், என்று கணக்கீடு அளவு முறைகள் பிரம்மாண்டமாய் விரியும். முகம், நாசி, கண், புருவம், இதழில் புன்சிரிப்பு, கை, விரல் , நகம் ,ரேகை, ரோமம்,  ஒவ்வொன்றுக்கும் ஒரு கணித அளவு உண்டு. ஒரு விதி உண்டு. இந்த விதிகளை முற்றும் கற்று தேர்ந்த ஒரு சிற்பியால்தான் இப்படியொரு சிற்பத்தை செதுக்க இயலும்.





உமையொருபங்கன் படிமம் ஒன்றின் அமைவு கணக்கீட்டு அளவின் ஒரு பகுதியை பாருங்கள்..



| | |
|---|---|
| இவ்விடத்திற்குக் கீழ் முதுகு அகலம் | 30"-0"' |
| முதுகின் நடுவே முதுகுப் பதிவு | 2"-0"' |
| முதுகுத் தண்டிலிருந்து இருமருங் குள்ள சதைப்பற்றான [31] முதுகுப் பட்டை அகலம் | 7"-0"' |
| முதுகுப் பட்டையின் கீழே இடுப்பு சேருமிடம் வரை தூரம் | 7"-0"' |



உமையொரு பாகன்

| | |
|---|---|
| இவ்விடத்தில் உடல் கனம் | 16"-0"' |
| இதற்குக் கீழ் உடல் கனம் | 17"-0"' |
| இடுப்பிலிருந்து குண்டிக்காய் சேருமிடம் வரை உயரம் | 13"-4"' |
| பின்பக்க இடுப்பு அகலம் | 19"-4"' |
| குண்டிக்காய் அகலம் | 9"-4"' |
| குண்டிக்காய் கனத்தி | 4"-4"' |
| குய்யமட்டத்திற்குக் கீழ் குண்டிக்காய் தொங்கல் | 4"-4"' |
| நாபி மட்டத்திற்கு கீழ், உடலின் பின்புற அகலம்[32] | 20"-4"' |
| இடுப்பின் சந்தியில் அகலம் | 18"-0"' |
| குண்டிக்காய் இடைவெளி[33] | 0"-4"' |

மேற்கண்ட அளவுகளை உபயோகித்து வரைந்த பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் படிமங்களையும் நோக்குக.

### உத்தம தச தாளம் – விஷ்ணுப் படிமம்

உத்தம தசதாளமானத்தில், நுட்ப அளவுகள் சைவச் சார்பு நூல்களிலும் வைணவச் சார்பு நூல்களிலும் காணப்படுகின்றன. நுட்ப அளவுகள் பெரும்பாலும் ஒத்திருப்பினும், சில இடங்களில் வேறுபட்டுள்ளன. உடல் அமைப்பில் கொண்டுள்ள கருத்துச் சிறப்பே இதற்குக் காரணம். எனவே உத்தம தசதாளத்தில் இயற்றப்பட வேண்டிய வைணவப் படிமங்களுக்கு வைணவ நூல் வழியே நுட்ப அளவுகளைப் பின்பற்றிச் செய்வதே முறையாகும். [34]கீழ்க்காணும் அளவுகள் வைணவச் சார்புடையவை.

### உயரக் கணக்கு


| | | |
|---|---|---|
| கபாலம் (முடியுடன்) தலை 1"-3"'; முடி 3"-0"' | 4"-3"' | |
| முடி முதல் கண் மட்டம் வரை | 4"-3"' | 13"-1"' |
| கண் மட்டத்திலிருந்து மூக்குப்புடம் வரை | 4"-3"' | |
| மூக்குப்புடமிருந்து மோவாய் வரை | 4"-3"' | |
| மோவாயிலிருந்து அடிக்கழுத்து வரை தாடை 0"-4"' கழுத்து 3"-7"' | 4"-3"' | |
| அடிக்கழுத்திலிருந்து மார்பு வரை | 13"-3"' | |
| மார்பிலிருந்து நாபி வரை | 13"-3"' | |

சிற்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு அளவு, கணக்கீடு, விதிமுறைகள் உண்டு.

சிங்கத்தின் வாயில் உருளும் ஒரு கல்.. உத்திரத்தில் தலைகீழாய் தொங்கும் கிளி, ஒரு அம்பின் சிறகுகள் எண்ணிக்கை, புருவத்தில் உள்ள ரோமத்தின் கனம், கால் பெருவிரல் நகத்தின் தடிமம், ஒவ்வொன்றுக்கும் ஒரு அளவும் விதியும் உண்டு.

வழக்கமாய் நாம் எழுதும் போது முதலில் பிள்ளையார் சுழியான " உ ' போட்டு எழுதுவோம்.

இந்த " உ " என்ற எழுத்தினுள் பிள்ளையார் உருவத்தை செதுக்கி அதை உகார அமைதி என்கிறது சிற்ப சாஸ்த்ரம். இதே போல் ஓம் கார அமைதியும் உண்டு.



உகார அமைதி

கடந்த 30 நாட்களாக, ஒரு சிற்பம் ஒன்றின் உச்சி முதல் பாதம் வரை உள்ள அனைத்து அமைப்புகள் மற்றும் விபரங்களை தெளிவான விளக்கங்களுடன் பார்த்துவிட்டோம்..

இத்துடன் முதல் பகுதி நிறைவுபெறுகிறது.

இரண்டாம் பகுதியாக... சிற்பங்களை அடையாளம் காணும் ரூப லஷ்ணம். அதாவது உருவ இலக்கணம் என்னும் பகுதியை பார்க்க இருக்கிறோம்.. சற்று இளைப்பாறுவோம்.. வரும் திங்கட்கிழமை (1st June 2020) இரண்டாம் பகுதி ஆரம்பம். இதுவரை நடந்த பாடங்களை பயிற்சி எடுத்து நினைவில் நிறுத்துங்கள்.

# 08. தொகுதி 1 கேள்விகள் மற்றும் பதில்கள்:

1) கர்த்தர முக ஹஸ்தம் சில இடங்களில் முருகரு க்கும் அமையுமா?

இது ஒரு பொதுவான முத்திரை.. ஆயுதங்களை ஏந்த பயன்படும்.. அனைத்து கடவுளுக்கும் இருக்கும். முருகருக்கும் இருக்கும்..

2) ஹஸ்தம் என்றால் என்ன?

முத்திரை (கை காட்டும் முத்திரைகள்)

3) ஹஸ்த்தங்கள் உணர்த்தும் பொருள் ஏதேனும் உண்டா? ஹஸ்தங்களில் இவை குறிப்பிட்ட கடவுளருக்கு என பிரித்து வகைப்படுத்தல் உண்டா?

அபய முத்திரை என்பதன் பொருள்..

பயம் வேண்டாம் நான் இருக்கிறேன் என்று பொருள்..

இதுமாதிரி ஒவ்வொறு முத்திரையின் பொருள் அல்லது பயன் பாடங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

பொதுவாய் இம்முத்திரைகள் அனைத்து படிமங்களிலும் தேவைக்கேற்றார் போல் வரும் என்றாலும்.

ஒவ்வொறு படிமத்திற்கும் பிரத்யோக முத்திரை உண்டு..

4) கைத்தலம் என்பது உள்ளங்கையும் மணிக்கட்டும் சேரும் இடமா?

விரல்கள் அனைத்தையும் விரித்தால்.. கைத்தலம்.

5) சிற்பங்களில் பல்லவர் காலம் சோழர் காலம் பாண்டியர் காலம் இன்று எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?

Answer1:

தேர்ந்த அறிஞர்கள் சிற்ப அமைதியைக் கொண்டு காலத்தை கணித்துவிடுகிறார்கள்.

இருந்தும் ..

பல்லவ.. சோழ.. பாண்டிய.. விஜயநகர..

சிற்பங்களுக்கு ஒரு வரையறை.. ஒரு Style உண்டு..

Answer2:

the statues age has calculated by the style of statues, ornaments, etc.,

Answer 3:

திராவிட சிற்பங்கள் பல்வேறு மரபுகள் கொண்டிருந்தாலும் அவற்றின் பிரமாதிலட்சணங்களில் மாற்றங்கள் இல்லை-அதாவது ஆகம விதிகள் மீறப் படவில்லை. ரூபத்யான லட்சணங்கள் -சிற்ப அமைதிகளில் மட்டுமே மாற்றங்கள் உள்ளன.

வெவ்வேறு கலை மரபும்,ஒரே ஆகம விதிகளுடன். வலப் புறம் இருப்பவர் சூலதேவர்-

இது சில்பசாஸ்த்திர விதி ஒவ்வொருவரும் ஒரு வகை-இது சிற்ப கலைப் பாணி





பாண்டியர் - வாயில் காவலர் முத்தரையர் -வாயில் காவலர் பல்லவர் வாயில் காவலர்

6) சிற்ப இலக்கணம் வரையறுக்கப்பட்ட ஆண்டு காலம் .?
ஒவ்வொறு நூலும் ஒவ்வொறு காலத்தைக் கூறும்..

7) சிற்ப இலக்கணம் இல்லாமல் freelance style ல் சிற்ப வகைகள் உள்ளனவா..??
அடிப்படை இலக்கண விதிப்படிதான் சிற்பம் ஒன்றை அமைக்க முடியும். சுதந்திரமாக தனது கருத்துக்களை படைப்பாளி சேர்த்துக்கொள்வார்.. ஆனால் சிற்பத்தின் மையக்கருத்து மாறாது.

8) இந்த கை முத்திரைகள் பரத நாட்டியத்தில் இருந்து எடுக்கப்பட்டதாக இருக்குமா..?
ஆம்

9) ஆய் மன்னர்களின் வாயில் காவலரும் இருந்தா பகிருங்களேன்
விழிஞம்,திருநந்திக்கரை இவை இரண்டும். ஆய் வேளிர் பகுதிக் குடைவரைகள் இவற்றில் இரண்டிலுமே வாயில் காவலர்கள் இல்லை.

10) சூலம், மழு எப்போதிலிருந்து உருவம் அடைகிறது?
இவை இரண்டும் ஆதிகால தொன்மங்கள், சிற்பங்களில் 7 ம் நூற்றாண்டு முதல் காண்கிறோம். குடிமல்லம் சிவலிங்கம் பொ கா மு 2 ம் நூற்றாண்டாக கருதப் படுகிறது.

11) ஒரே காலகட்டத்தில் லிங்கம், மழு, சூலம் உருபெற்றிருக்குமா
சிவ வழிபாடு -ஆதி திராவிடத் தொன்மம் . சிந்து வெளியில் இருந்து வந்தது அல்ல. இதன் வேர்களைத் தேட வேண்டுமெனில் அனைத்து பழங்குடி வழிபாட்டு மரபுகளை ஆராய வேண்டும். தென்னாடுடைய சிவனே...முத்தலை ஈட்டி,கோடரி,பாம்பு,புலித்தோல்,மரவுரி, சுடுகாடு,சாம்பல், சடைமுடி,ஊமத்தம் பூ இதில் ஏதாவது modern ஆ இருக்கா பாருங்க ?!

12) இந்த முத்திரை பற்றிய ஆதார நூல்கள் யாவை?

யாஜுர வேத காலதில் இருந்து சிலைகளின் ஆதார நியதிகள் கிளை நூல்களாக உருவாகின .. இவை அரம்பதில் ஸ்லோகங்களாக வழி வழியாக வந்து பின்னர் , ஓலை சுவடிக்களில் எழுதப்பட்டு , பிற்காலதில் இவற்றிக்கு உரை நூல்கள் வந்தன. இவற்றில் சில

1. சைவ படிமங்கள் - ச்கலாதிகாரம் , சாரஸஸ்வதீய சித்ரா கர்மா
2. வைணவ படிமங்கள் - சித்ரகாஸ்தியம் , ப்ரயாமீய சித்ரா கர்மா
3. ஸ்ரீ தத்துவ நிதி - சைவ வைணவ படிமங்கள் குறித்த தியான ஸ்லோகங்கள்
4. சில்ப ரத்னா - ஸ்ரீ குமாரன் - பிற்கால காஷியப ,மயமாத சிற்ப நூல்களின் தொகுப்பு உரை நூல் .
5. இவை வடமொழி ஸ்லோகங்கள் . தமிழில் உரைநூல்கள் சரஸ்வதி மகால் மூலம் மறு பதிப்பு செய்யப்பட்டுள்ளன ..

13) நூல்களின் காலம் என்ன?

14) எந்த மொழியில் கற்பிக்கப் பட்டன?

15) இயற்றியவர் யாவர்? சிலை

16) வடிவம் கொடுத்தவர்கள் யாவர்?

17) நான் பார்த்தவரையில் துவாரபாலகர்களின் முத்திரையில் ஆள்காட்டிவிரலை உயர்த்தி,மற்றவிரல்களை மடக்கியவாறு பார்த்துள்ளேன்.அதற்கு விளக்கம் கேட்டால் 'தெய்வம் ஒன்றே' என்பதற்கான முத்திரை என்கின்றனர்.அது சரியா?எனில் இந்த முத்திரை எந்த நூற்றாண்டிலிருந்து வந்தது.மேலும் மூவேந்தர்களில் யாருடைய காலத்தில் இந்த முத்திரை உருவாகியிருக்கும்.?

மற்ற விரல்களை மடக்கி சுட்டு விரலை உயர்த்துவது சூசி முத்திரை.. இம்முத்திரையை பல படிமங்களில் காணலாம். ஏதோ ஒன்றை சுட்டிக் காட்டுவதற்கு இம்முத்திரை பயன்படும். துவாரபாலகர் சிற்பத்தில் உள்ள இம்முத்திரை உள்ளே இருக்கும் சிவனை சுட்டிக்காட்டுகிறது.



இப்படத்தைப் பாருங்கள். கஜசம்ஹார மூர்த்தி.. சிவனின் ஆவேசத்தைக்கண்டு உமையவள் அஞ்சி பின்வாங்க, அவளது இடுப்பில் உள்ள குழந்தை முருகன் தாதிபெண்ணிடம் தாவ.. உமையவளுக்கே பயமா.? என்று நினைத்தாரோ சிவன்.. இங்கே பாருங்கள் என்று உமையவளை நோக்கி தன் சுட்டுவிரலை நீட்டுகிறார். இங்கே சிவன் அமைப்பது சூசி முத்திரை.. சூசி முத்திரை என்பது இடத்திற்கு ஏற்றார் போல் சுட்டிக்காட்டுதல் என்னும் பொருள் தரும்

18) வேதம் வழியாக கலை பரவியதாய் கொண்டால் இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான நடைமுறைகள் இருக்க வேண்டுமே. தென்னிந்தியா மட்டும் மாறுபடுகிறதே?

அடிப்படை கொள்கைகள் மாறவில்லை.. சிற்பிகளின் கற்பனைக்கு ஏற்ப அலங்காரங்கள் மாறும்

19) யஜீர் வேத காலத்தில் உருவழிபாடிற்கு ஏது தரவு? மயமதம், தத்துவநிதி எல்லாம் பிற்காலம் தானே?

நூல்களில் சொல்வது வாய்மொழி ஸ்லோகங்கள். அவற்றிக்கு எழுத்து தரவுகள் கிடையாது ..

20) ஆசனதிர்க்கு என்ன பெயர்?



வகைப்பாட்டில் வராத சிற்பங்களும் உண்டு. உதாரணமாக காஞ்சிபுரம் தான் தோன்றீஸ்வரர் கோயில் பல்லவ சிற்பங்கள். சோழர்காலத்திலும் உண்டு


21) வீராசனம் வகையில் லலிதாம்பிகை தவிர வேறு ஏதும் அம்மன் உள்ளதா?

இருக்கன்குடி அம்மன்கள்... இராஜராஜேஷ்வரி அம்மன்



லலிதாம்பிகை வீராசனமா...?






இது வீராசனம் இல்லையே...சுகாசனம்தான்..



இச்சிற்பங்களை மத்தவிலாச நாடகக்காட்சிகள் என்கிறார்களே.. சரிதானா ?

ஆங்கிலத்தில் illustrative sculpture என ஒரு நிகழ்வை அல்லது கதையை சொல்லும்போது அதை சிற்பங்களாக செதுக்கும் போது சில விதித்தளர்வுகளை கலைஞர்கள் சுதந்திரமாக கையாண்டுள்ளனர். உம் தாரசுரம் நாயன்மார் வரலாறு காட்சிகள். பல்லவர்கள் இந்த விதிமீறல்களை எளிதாக செய்தனர்.. அந்த விதிமீறல் சிற்பங்கள்தான் சிறப்பாகவும் பார்க்க சுவாரசியமாகவும் இருக்கும்..

22) ஜாட மகுடம்-----கிரிட மகுடம் ஒரே மாதிரி உள்ளது போன்று எனக்கு தோன்றுகிறது?

நன்கு உற்று நோக்கினால் வேறுபாட்டை அறியலாம்.. சடை முடிகளையே சுருட்டி மகுடம் போல் அமைப்பது சடாமகுடம்.இம்மகுடம் சிவனுக்கும் அவரது அம்ச மூர்த்தங்களுக்கும் அமையும் . பிரம்மனுக்கும் அமையும். வேறு யாருக்கும் வராது. கிரீடம் என்பது மணிமகுடம். கையில் எடுத்து தலையில் அணிவது. இது கிரீட மகுடம்.

இம்மகுடம் விஷ்ணு மற்றும் அரசர்களுக்கு அமையும். சிவனுக்கு அமையாது...

23) முருகனுக்கு ஜடாபாரம் வராதா?

கிரீட மகுடம் அல்லது கரண்ட மகுடம் மட்டுமே வரும்.. பொதுவாக முருகனுக்கு ஜடா மகுடம் வராது என்பது சிற்பநூல் கூறும் அடிப்படை விதி...





கரண்ட மகுடம் என்பார்கள்.... இதுவும் கரண்ட மகுடம். அடுக்கடுக்கடுக்காய் இருக்கும்.. கரண்ட என்றால் தேன்கூடு.. இம்மகுடம் தேன்கூடு வடிவத்தில் இருப்பதால் இப்பெயர்..

முருகன் அணிந்திருப்பது கரண்ட மகுடம்,மகுடத்திற்கு கீழ் வரும் கட்டு.., "சென்னி"அதாவது காட்டுப் பூக்களால் ஆன மாலை- வேட்டுவர் / போருக்கு கிளம்பும் வீரர் கள் நெற்றியில் சென்னி கட்டும் வழக்கம் இருந்துள்ளது.



கலப்பையை ஆயுதமாக எப்படி பயன்படுத்த முடியும் கொஞ்சம் விளக்கம் தாருங்களேன்

ஆயுதமாகவே குறிப்பிடுகிறார்கள்.. பெருமாளுக்கு மூத்தவர் பலராமன். ஸ்ரீமத்பாகவதம் இவரை ஹலாயுதன் ( கலப்பையை ஏந்தியவன்) என்று கூறுகிறது. துரியோதனுக்கு கதை ஆயுதப் பயிற்சி கொடுத்தவர் பலராமன். பாரதப்போர். இறுதிக்கட்டம். விதிகளை மீறி துரியோதனனை பீமன் கொன்றுவிடுகிறான். கடும் கோபம் கொண்ட பலராமர் பீமனை தாக்க தன் ஆயுதமான கலப்பையை தூக்க, கிருஷ்ணர் பலராமனை சமாதானப்படுத்தி பீமனை காத்தருள்வார்.. ஆக.. கலப்பை ஒரு ஆயுதமாகவே பலராமருக்கு இருந்துள்ளது.. மேலும் ஒரு செய்தி.. 1960 களில்.. ஒரு சில தமிழக கிராமங்களில் கலப்பை ஒரு பயங்கரமான ஆயுதமாக பயன்பட்டுள்ளது. எப்படி என்று விசாரித்து பாருங்களேன்...



என்ன நிகழ்வு இது.? யார் இவர்.?

அர்ச்சுனன். மச்சேந்திரத்தை வீழ்த்தல், ஹளபேடு. அர்ச்சுனன் தான் வீழ்த்தி திரௌபதையை மணமுடிக்கிறான். இக்கோயிலில் மகாபாரத காட்சிகள் உண்டு

பத்ம வியூகம் ஹளபேடு. இந்த Labyrinth உலகம் முழுக்க இருப்பது ஆச்சரியம்



யார் இவர்..? என்ன நிகழ்வு.?



வாலி ராவணனை கட்டிப்போட்டு இருக்கார்
என்ன நிகழ்வு.?

வாசு தேவர் கழுதையின் காலில் விழும் காட்சி , கிருஷ்ணனை கொண்டு போகும்போது , கத்தாமல் இருக்க கழுதையின் காலில் விழுவார்.



இந்த சிற்பத்தில் இருப்பவர் யார்?எந்த கோவிலில் உள்ள சிற்பம் இது?
இது அவலோகிதர்



# 09. சோழ வரலாற்று ஆய்வுச் சங்கம்..

கடந்து வந்த பாதை...
மிகச்சரியாக 2015 ஜூன் மாதம்..
வரலாற்று ஆர்வலர்கள் ஒன்று கூடி சோழர் வரலாறு என்னும் தலைப்பில் ஒரு வாட்ஸ் அப் குழு உருவானது.. வழக்கமான காலை, மாலை, வணக்கம் பகிரும் குழு போல் இல்லாமல் .. வரலாற்றுச் செய்திகள் மட்டும் பகிரப்பட்டது..
வியப்பான பதிவுகள், சரியான தகவல்கள், கல்வெட்டு ஆதாரங்கள், செப்பேடுகள், கோவில் கள், என்று முழுக்க முழுக்க நமது வரலாறு பாரம்பரிய பண்பாட்டுத் தகவல்கள் பரிமாறப்பட்டன. வீரியமான விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டுஉறுப்பினர்களின் தேடுதல் மிகத் தீவிரமாயின.

## குழுவின் முதல் களப்பயணம் ..குடந்தை மற்றும் தஞ்சை..

இப்பயணத்தை முன்னின்று நடத்தியவர் குழுவின் தலைவரும் ஆய்வாளருமான திரு. செல்வராஜ் அவர்கள்.. தஞ்சை பெரியகோவிலின் மேலே முதல் தளம் சென்று பார்வையிட்டது மிகச் சிறந்த ஒன்றாகும்.. எழுத்தாளர் திரு. உளிமகிழ் இராஜகமல் அவர்கள் எழுதிய களம் கொண்டான் என்னும் நூலை குழு வெளியிட்டது..


கங்கை கொண்ட சோழபுர குடமுழுக்கு.. பிப் 2017

## பிப்ரவரி 2 2017 மாமல்லபுரம்




கங்கை கொண்ட சோழபுர குடமுழுக்கு நிகழ்வில் குழு பங்கேற்றது..



இம்மாதமே மாமல்லபுரம் மரபுநடை ஒன்று சிறப்பாக நடபெற்றது..

**ஏப்ரல் 14, 2017 தாராசுரம் மற்றும் தஞ்சை**

எங்களது இரண்டாம் களப்பயணம் தாராசுரம் மற்றும் தஞ்சை.. தாராசுரம் நிகழ்வில் தஞ்சை இளவரசர் கலந்து கொண்டது சிறப்பான நிகழ்வு.. தாரசுரத்தில் காணப்படும் அந்த அதி

அற்புத சிற்பங்களின் அமைப்பைப் பற்றி நமது குழு ஒரு காணொளி காட்சியாக படம் பிடித்தது..
அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒளித்தகட்டை தஞ்சை இளவரசர் வெளியிட்டார்.. இவ்விழாவிலும் திரு. உளிமகிழ் ராஜ்கமல் எழுதிய திருமகள் போல திருமன்னிவளர என்னும் நூல் வெளியிடப்பட்டது ..







சித்திரை முதல் நாள் விழாவை குழு பஞ்சவன் மாதேவி பள்ளிப்படையில் கொண்டாடியது.. சுவாமிக்கு சிறப்பு அலங்காரம், பொங்கல் வைத்தல், அவ்வூர் மக்கள் கலந்து கொண்ட கோலப்போட்டி, பரிசு வழங்குதல் என்று சிறப்பான நிகழ்வுகள் அவை.

மறுநாள் தஞ்சை பெரியகோவில்.நண்பர்களுக்கு கல்வெட்டு வாசித்துக் காட்டப்பட்டது.மீண்டும் பெரியகோவிலின் முதல் தள தரிசனம்..
2017 **ஜனவரி** மாதம் நமது குழு சோழ வரலாற்று ஆய்வு சங்கம் என்னும் பெயரில் பதிவு செய்யப்பட்டு அரசு அங்கிகாரம் பெற்ற அமைப்பாக உருவெடுத்தது..



**ஆகஸ்ட் 2017 சோழமாதேவி** என்னும் கிராமத்தில் பள்ளி மாணவர்களுக்கு கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது..




## டிசம்பர் 16,17 2017 காஞ்சி மரபு நடை..

அடுத்த களப்பயணமாக காஞ்சி மரபு நடை..நமது குழுவும் செலிப்பிரேட் காஞ்சி அமைப்பும் இணைந்து நடத்தியது.

தொல்லியல் ஆய்வாளர் திருமதி மார்க்கசிய காந்தி மற்றும் சசிதரன் அவர் வழிநடத்தலில் இரண்டு நாள் காஞ்சி மரபுநடை வெகு சிறப்பாக நடந்தேறியது.

## ஏப்ரல் 01, 2018 விழுப்புரம் மரபுநடை

திரு.விழுப்புரம் வீரராகவன் மற்றும் மங்கை வீரராகவன் இவர்கள் பங்கேற்பில் நமது குழு ஏற்பாடு செய்த விழுப்புரம் மரபுநடை, பல அரிய அற்புத அனுபவங்களை பெற்றுத் தந்தது..







**ஆகஸ்ட் 11, 2018 சேலம்** அருங்காட்சியகம்

சேலம் பள்ளி மாணவர்களை, அரசு அருங்காட்சியகத்திற்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு வரலாற்றுத் தகவல்கள் எடுத்துரைக்கப்பட்டது.. மாணவர்களிடையே இந்நிகழ்வு பலத்த வரவேற்பு பெற்றது.

## டிசம்பார் 20 , 2018 சென்னை புத்தக வெளியீடு

எத்திராஜ் மகளிர் கல்லூரியில்,தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி என்னும் தலைப்பில்.. இந்திய தொல்லியல் துறையுடன் இணைந்து சோழ வரலாற்று ஆய்வுச்சங்கம் மிகவும் ஒரு சிறப்பான கண்காட்சியை நடத்தியது.. மாணவர்களிடையே பலத்த வரவேற்பை பெற்றது..

அன்றைய தினமே, இந்திய தொல்லியியல் துறையின் சென்னை மண்டல கல்வெட்டுத்துறைத் தலைவர் முனைவர் திரு.க.பன்னீர் செல்வம் எழுதிய தமிழ் கல்வெட்டுகள் வெளிச்சமிடும் அற்புத உண்மைகள் என்னும் நூலை குழு வெளியிட்டது..

சோழர் வரலாற்று ஆய்வுச் சங்கத் தலைவர் திரு.செல்வராஜ் அவர்கள் வெளியிட, கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி.புவனேசுவரி அவர்கள் பெற்றுக்கொண்டார்..

**டிசம்பர் 21-25 , 2018** அஜந்தா மற்றும் எல்லோரா மரபுநடை **சிறப்பாக நடை பெற்றது..**

அஜந்தா பற்றிய கையேடு திரு.சிவசங்கர் பாபு அவர்கள் முன்னெடுப்பால் வெளியிடப்பட்டது ..

**ஆகஸ்ட் , 2019 ஹம்பி மற்றும் பாதாமி** மரபுநடை சிறப்பாக நடை பெற்றது..

அதில் ஹம்பி (திரு மாரீராஜன்) பாதாமி (திரு.சிவசங்கர் பாபு) பற்றிய கையேடுகள் வெளியிடப்பட்டது

சங்கப் பணிகள் தொடர்கின்றன..
**சங்க நிர்வாகிகள் பட்டியல்...**





திரு. செல்வராஜ்..
தலைவர்.

திரு. சுரேஷ்..
துணைத்தலைவர்.







திரு.கரிகாலன்..
செயலாளர்.

திரு.வல்லத்தரசு..
இணைச் செயலாளர்.

திரு.மணிவண்ணன்..
பொருளாளர்..